திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA
JUN
MADRAS



பிட்சாடனர் திருவுருவம்,
உய்யக் கொண்டான் திருமலை.

லை 6] குரோதி வைகாசி - ஜூன் 1964 [மணி 9

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு.



"ஞானத் தவ முனிவர்"
காஞ்சி காமகோடி பீடம், ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள்
(71-ஆவது ஜயந்தி : 26-5-64)

பொருள் அடக்கம்

1. தெய்வப் புலவர் திருவள்ளுவர்
2. தத்துவஞான வித்தகர்
3. பிட்சாடன மூர்த்தம்
4. திருக்கோயில் வழிபாட்டுமுறை
5. சூரியன்
6. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை
7. திருஆமாத்தூர்க் கல்வெட்டு
8. செம்பியன் மாதேவியார்
9. தொண்டை நாட்டுத் திருப்பதியநுபவம்
10. ஸ்ரீ குருஞானசம்பந்தர்
11. சிவஞான போதம்
12. செய்திகள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/- ★ தனி இதழ் விலை ரூ. ஒன்று

சந்தா தாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள், "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை 34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்தமாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப் பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்தல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலை 6] குரோதி வைகாசி - ஜூன் 1964 [மணி 9

தெய்வப்புலவர் திருவள்ளுவர்

முன்னுரை:

தமிழ் நாட்டில் எத்துணையோ புலவர் பெரு மக்கள் விளங்கி வந்திருக்கின்றனர். ஆயினும், அவர்களுளெல்லாம் மிகவும் தலைசிறந்தவராகப் போற்றப்பெறுபவர் திருவள்ளுவரே யாவர். அவரைத் தமிழ் கூறும் நல்லுலகம் பெரிதும் போற்றிப் புகழ்ந்து பாராட்டி வருகின்றது.

தெய்வப்புலவர்:

திருக்குறளுக்குச் சிறந்த உரை வரைந்த ஆசிரியர் பரிமேலழகர், அதன் உரைப்பாயிரத்தில், 'ஈண்டுத் தெய்வப் புலமைத் திருவள்ளுவராற் சிறப்புடைய ஒழுக்கமே அறம் என எடுத்துக் கொள்ளப் பட்டது' என எழுதுகின்றார்.

"சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்"

என்னும் தொல்காப்பிய நூற்பாவில் (சொல்:41), 'தெய்வப் புலவன் திருவள்ளுவன்' என்னும் தொடரை, உதாரணமாகச் சேனாவரையர் எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர் என்று-நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல்...."

என நெஞ்சுவிடு தூது என்னும் சைவ சித்தாந்த சாத்திர நூலில், ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள் திருவள்ளுவரின் தெய்வப் புலமையை வியந்து, அவர் தம் திருக்குறளையும் முழுதாக மேற்கோளாக எடுத்தாளுகின்றார்.

அயல் நாட்டார் பாராட்டு:

திருவள்ளுவரை எல்லா நாட்டாரும், எல்லா மொழியாளரும், எல்லாச் சமயத்தவரும் பெரிதும் வியந்து மகிழ்ந்து தழீஇக் கொண்டாடுகின்றனர். திருவள்ளுவரின் சிறப்பு, இற்றை ஞான்று உலகெங்கணுமுள்ள அறிஞர்களிடையே, ஓரளவு பரவிப் பெருகி வருகின்றது. உலகப் புகழ் பெற்று வாழ்ந்துவரும் ஆல்பெர்ட் ஷுவைட்சர் என்னும் பேரறிஞர், 'இத்துணைச் சிறந்துயர்ந்த மெய்யுணர்வு நிரம்பிய ஒரு நீதியுரைத் தொகுப்பு, உலக இலக்கியங்களில் யாண்டுமே இல்லை' * எனத் திருவள்ளுவரின் நூலைச் சிறப்பித்துப் புகழ்கின்றார். பேரறிஞர் திரு. ஜி. யூ. போப் பாதிரியார்

* "There hardly exists in the literatures of the world a collection of maxims in which we find so much lofty wisdom"

—Dr. Albert Schweitzer.

அவர்கள், *'இந்திய மக்கள் எல்லோருள்ளும் தமிழ் மக்களே சிறப்பு மிக்கவராய் முன்னணியில் நிற்கின்றனர். திருக்குறளும் நாலடியாரும் அங்ஙனம் விளங்குமாறு அவர்களுக்கு உதவி புரிந்துள்ளன' எனக் குறிப்பிடுகின்றார். இங்ஙனமே இன்னும், எண்ணிறந்த எத்தனையோ பலர், திருவள்ளுவரையும், அவர் இயற்றியருளிய திருக்குறளையும் பலபடப் பாராட்டி மொழிந்திருக்கின்றனர்.

திருவள்ளுவரைப் போற்றி வியவாத தமிழ்ப் புலவர்கள் எவரும் இல்லை. திருவள்ளுவரின் கருத்துக்களையும் — சொற்கள், சொற்றொடர்களையும் — எவ்வகையாலேனும் எடுத்துக் கையாளாத தமிழ்க் கவிஞர்கள் ஒருவரேனும் இலர். சங்ககாலச் சான்றோர்களும், ஆழ்வார்களும் நாயன்மார்களும், தற்காலக் கவிஞர்களும் ஆகிய அனைவருமே, திருவள்ளுவரைத் "தெய்வப் புலவர்" என மிகவும் மதித்துத் துதித்து, அவர் இயற்றியருளிய திருக்குறளைத் தத்தம் நூல்களிலும் பாடல்களிலும், முத்தும் மணியும் போல எடுத்து அமைத்துப் பதித்துக் கொண்டு, இன்புற்று மகிழ்தலைக் காண்கின்றோம்.

சிவப்பிரகாச சுவாமிகள்:

திருவள்ளுவரையும் திருக்குறளையும் எத்தனையோ புலவர்கள், எத்தனையோ பல வகைகளிற் புகழ்ந்து பாடியிருக்கின்றனர்! ஆயினும் அவற்றுளெல்லாம், துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் புகழ்ந்து பாடியிருக்கும் முறை, பெரிதும் வியந்து மகிழத் தக்கதாகத் திகழ்கின்றது.

திருக்குறளின் சிறப்பை விளக்க அவர் ஓர் உவமை கூற நினைக்கின்றார். ஆனால், திருக்குறளோ ஒப்புயர் வில்லாததாய்த் தனிப் பெருஞ் சிறப்புடையதாக விளங்குகின்றது. அதனால், திருக்குறளின் சிறப்பை விளக்க, ஓர் உவமை கூட எடுத்துக் காட்ட அவரால் இயலவில்லை. அவர் நீள நினைந்து ஆராய்ந்து பார்க்கின்றார்! தனக்கு உவமையில்லாத திருக்குறளுக்குத் 'தனக்குவமை இல்லாதான்' ஆகிய இறைவனையே தான் உவமை கூறிவிடலாமே என, அவர் முடிவாக ஒருவகை முடிவுக்கு வருகின்றார்.

வீரசைவர் ஆகிய தாம், சிவபிரானை எத்தகைய நிலையில் மதித்து வணங்கிப் போற்றுவாரோ, அத்தகைய நிலையிலேயே வைத்துத் திருக்குறளையும் போற்றிப் புகழ முற்படுகின்றார்! திருக்குறளைச் சிவம் எனவே சிந்தித்து வந்திக்கின்றார் அவர்! திருக்குறளின் இரண்டு வரிகளையும், அவர் சிவபிரானின் இரண்டு திருவடிகள் எனவே கருதி மகிழ்கின்றார். திருக்குறளின் அடிகளுக்கும், சிவபிரானின் திருவடிகளுக்கும் இடையேயுள்ள ஒப்புமைத் தன்மை, இரண்டு என்ற எண்ணிக்கையில் மட்டுமே அமைந்திருப்பதாக அவர் கருதிற்றிலர். மற்றும் ஓர் அழகிய பொருத்தமும் அமைந்திருப்பதாக, அவருக்குப் படுகின்றது.

திருக்குறளும் சிவபிரானும்:

திருக்குறளின் முதல் வரியானது நான்கு சீர்களால் இயன்று சிறிது நீண்டும், இரண்டாம் வரியானது மூன்று சீர்களால் அமைந்து சிறிது குறுகியும், இருத்தலை நாம் அறிவோம். இவ்வியல்பு சிவபிரானின் திருவடிகளிலும் இனிது பொருந்தி யிருத்தலை, அவர் எண்ணி எண்ணி மகிழ்கின்றார். சிவபிரான் ஆணும் பெண்ணுமாக—அம்மையும் அப்பனுமாக — அமைந்த அர்த்த நாரீசுவர மூர்த்தம் கொண்டு விளங்குபவன். சிவபிரானின் "தொன்மைக் கோலம்" எனத் தக்க நிலையில் அமைந்து திகழ்வது, அர்த்த நாரீசுவரர் ("மாதியலும் பாதியர்") திருவுருவம் ஆகும். அத்திருவுருவத்தில் ஆண்பாற் பகுதிக்குரிய வலக்கால் சிறிது நீண்டும், பெண்பாற் பகுதிக்குரிய இடக்கால் சிறிது குறுகியும் இருக்கும்.

சிவபிரானின் இருதிருவடிகளுக்குரிய இவ்வியல்பு, திருக்குறளின் இருவரிகளுக்கும் கூட, இனிது பொருந்தி யமைந்திருப்பதனை நினைந்து நினைந்து, சிவப் பிரகாசர் மகிழ்ந்து இன்புறுகின்றார்! இங்ஙனம் திருக்குறளின் பெருமையினைப் பொருத்தமுற உணர்ந்து வியக்கும் சிவப்பிரகாச சுவாமிகள், திருவள்ளுவரையே தம்முடைய குருவாகவும் தெய்வ

---

* "The Tamils are the foremost among the peoples of India. The Kural and the Naladi have helped to make them so"

—The Rev. Dr. G. U. Pope.

மாகவும் துதித்துத் தொழுகின்றார்! இக்கருத்துக்கள் அனைத்தையும்,

"என் அடிகள்
வெண்குறள் நேர்
அடி இரண்டும்
என்தலைமேல்
இருந்தும் இறை
வெங்கை நாட்டில்..."

எனவரும் திருவெங்கைக் கலம்பகச் செய்யுள் வரியில், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் சுருக்கமாகவும் பொருத்தமாகவும் குறிப்பிட்டிருத்தல், அறிந்து இன்புறற் பாலது.

[குறிப்புரை :— சிவப்பிரகாசர் திருவெங்கை என்னும் தலத்தைப் புகழ முற்படுகின்றார்: அது சிவபிரானுக்குரிய தலம் என்கிறார். அந்நிலையில், சிவபிரான் தமக்குத் திருவடித்தீக்கை செய்து அருள் புரிந்ததனை நினைந்து உருகுகின்றார். திருவடிகளின் நினைவு வரவே, அவைகள் திருக்குறளின் இரண்டு அடி (வரி)களைப் போன்றவை என ஒப்புமை கூறுகின்றார். அவ்வாற்றால் திருக்குறளை நினைவு கூர்ந்த சிவப்பிரகாசர் அதனை இயற்றியருளிய திருவள்ளுவர் பெருமானையும் நினைவு கூர்ந்து, அவரை "என் அடிகள்" (எனக்குக் குரு, தெய்வம்) எனக் குறிப்பிட்டுத் துதிக்கின்றார். அடிகள்—குரு, தெய்வம், திருவள்ளுவர்; வெண்குறள் — குறள் வெண்பாவால் அமைந்த திருக்குறள்; நேர் — ஒத்த, போன்ற; தலைமீது இருத்துதல்—திருவடித் தீக்கை புரிதல்; இறை — சிவபெருமான். வெங்கைநாடு—(விருத்தாசலத்திற்கு அருகில் உள்ள) வெங்கனூர் என்னும் தலம்.]

முதற் குறள் :

இங்ஙனம் புலவர்கள் பலரும் போற்றித் துதித்து வியக்கும் முறையில், திருக்குறளைச் சிறப்புற இயற்றி யருளி உலகுக்கு உதவிய தெய்வப் புலவர் திருவள்ளுவர்தம் அருமை பெருமைகளை, யாம் என்னென்பேம்!

திருக்குறளின் முதற் குறள் தானே, எண்ணுவார் எண்ணுதொறும் வெளிப்படும் நுண்ணிய பல அரும் பெருங் கருத்துக்களையெல்லாம், 'தன்னுள்ளே அடக்கிக் கொண்டு திகழ்ந்து, தன்னை இயற்றியருளிய திருவள்ளுவர் தெய்வப் புலவர் என்பதனைச் செவ்விதின் விளக்கிக் காட்டித் தெளிவித்து நிற்கின்றது. ஆதலின் அம் முதற் குறள் பற்றி, ஈண்டு இயன்றவரை நாம் ஒரு சிறிது ஆராய்ந்தறிவோம்.

உலகப் பெருங்கவிஞரும் தெய்வப்புலவரும் ஆகிய திருவள்ளுவர், தமது ஒப்புயர் வற்ற திருக்குறள் நூலின் முதற் கண், "கடவுள் வாழ்த்து"க் கூற முற்படுகின்றார். கடவுளை வாழ்த்துதற்குத் தலைப்படும் முன்னர், கடவுள் ஒருவர் உண்டு என உணர்த்த வேண்டுவது அவருக்கு இன்றியமையாத் கடமையாகின்றது.

'கடவுள் ஒருவர் உண்டு' என்னும் உண்மையை உணர்த்த, அவர் வேறு எத்துணையோ பலப்பல வகையான சான்றுகளையும் காரணங்களையும் எடுத்துக் காட்டி யிருக்கலாம். தமிழ் மொழியிற் பெரும் புலவராய்- சான்றோராய்-கவிஞராய்த்திகழ்ந்து, தமிழ்மொழியின்-தமிழ்ப் பண்பாட்டின் காவலராகவும் விளங்கித் தமிழ் மயமாகவே வாழ்ந்திருந்த திருவள்ளுவர், தமிழெழுத்துக்களின் அமைப்பும், தமிழிலக்கணத்தின் நுட்பமும் கொண்டே, கடவுளுண்மையினை நிறுவிக் கட்டுரைக்கின்றார்.

ஆசிரியர் தொல்காப்பியர், தாம் இயற்றியருளிய தொல்காப்பியம் என்னும் பழம் பெருந் தமிழிலக்கண நூலில், "மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்" எனப் பணித்தருளிய நுட்பம் உணர்ந்து,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்னும் திருக்குறளில், இறையுண்மை நிறுவுதற்குத் தமிழிலக்கண அமைப்பினைத் தழுவி, ஆசிரியர் திருவள்ளுவர் அகரத்தினை உவமை காட்டி யுள்ள அருமைப்பாடு, பெரிதும் போற்றி மகிழ்தற் குரியது!

சமயச் சான்றோர்கள் :

திருவள்ளுவர் எடுத்துக் காட்டி யருளிய அகரவுவமையின் சிறப்பினை, அவர்க்குப்

பின்னர்த் தோன்றிய சமயச் சான்றோர்கள் பலரும் வியந்து மகிழ்ந்து, தத்தம் நூல்களில் தழுவிக் கொண்டுள்ளனர்.

(1) "அகர முதலானை அணி ஆப்பனூரானைப் பகரும் மனம் உடையார் வினை பற்றறுப் பாரே" என ஞான சம்பந்தர் நவிலுகின்றார்.

(2) "ஆனத்தின் முதல் எழுத்து ஆகி நின்றாய்" என்று திருநாவுக்கரசர் பாடுகின்றார்.

(3) "அகரம் முதலின் எழுத்தாகி நின்றாய் அடியேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே" எனச் சுந்தரர் துதிக்கின்றார்.

(4) "அக்கரங்கள் இன்றாம் அகரவுயிர் இன்றேல்" என்று மெய்கண்டார் சிவஞான போதத்தில் குறிப்பிடுகின்றார்.

(5) ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரியர் "அக்கரங்கள் தோறும் சென்றிடும் அகரம் போல நின்றனன் சிவனும் சேர்ந்தே" எனவும் (சுபக்கம் : 72),

"இவ்வுயிர்கள் தோற்றும்போ
தவனையின்றித் தோற்றா;
இவற்றினுக்கும் முதலெழுத்துக்கு
எல்லாமாய் நிற்கும்
அவ்வுயிர்போல் நின்றிடுவன்"

எனவும் (சுபக்கம் : 316), திருவள்ளுவர் கூறிய அகரவுவமையினைத் தமது சிவஞான சித்தியார் செய்யுட்களில் எடுத்தாண்டுள்ளார்.

(6) இவ்வாறே சைவசித்தாந்த சந்தானாசிரியர்களுள் ஒருவராகிய உமாபதிசிவம், தாம் இயற்றிய திருவருட்பயன் என்னும் நூலில் "அகரவுயிர் போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து" என, இத் திருக்குறளையே தழுவி இனிதெடுத் துரைத்துப் போற்றி யிருக்கின்றார்.

அகர உவமையும், அதன் நுண்பொருள்களும் :

இங்ஙனம் வானமுயடி வாழையாகப் பிற்போந்த சான்றோர்கள் அனைவருமே போற்றித் தழுவி மகிழும் வண்ணம், இறையுண்மையை நிறுவுதற்குத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெருமான்காட்டியருளிய அகர வுவமையானது, சிந்திப்பரியதாய்ச் சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவதாய்த் தொட்டனைத் தூறும் மணற்கேணி போல, நுட்பக் கருத்துக்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு ஒளிர்கின்றது.

(1) ஆதி அகரம் விகாரத்தான் அன்றி நாதமாத்திரையான் இயல்பாக வெளிப் பட்டு நிற்கின்றது; அதுபோலவே இறைவனும் இயல்பாகத் திரிபின்றி இயற்கை வடிவினனாக அமைந்து விளங்குகின்றான்.

(2) அகரம் அங்காப்பு மாத்திரையால் திரிபின்றி வெளிப்பட்டு, வேறு பிற ஒலிகளின் தோற்றங்களுக் கெல்லாம் முதன்மையாய் நிற்கின்றது; அது போலத் திரிபின்றி இயல்பாக விளங்கும் இறைவனும், முத்தொழில்களுற்றுத் திரிபுறும் உயிர் உலகுகளின் இயக்கங்களுக்கு முதல்வனாகத் திகழ்கின்றான்.

(3) அகரமே உயிர் எழுத்துக்களினும் மெய்யெழுத்துக்களினும் கலந்து நின்று அவற்றை ஒலிப்பிக்கின்றது; அது போலவே இறைவனும் அறிவற்ற உலகப் பொருள்களினும், அறிவுடைய உயிர்களினுள்ளும் ஒன்றிக் கலந்து நின்று அவற்றை இயங்குமாறு செய்கின்றான்.

> "இறைவன் இயங்குதிணைக் கண்ணும் நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல, அகரமும் உயிர்க்கண்ணும் தனிமெய்க் கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாகவே நிற்கும் என்பது ஒப்ப முடிந்தது. 'அகர முதல' என்னும் குறளான் 'அகரமாகிய முதலையுடையன எழுத்துக்களெல்லாம், அதுபோல இறைவனாகிய முதலையுடையது உலகம்' என வள்ளுவனார் உவமை கூறிய வாற்றானும், கண்ணன் 'எழுத்துக்களில் அகரம் ஆகின்றேன் யானே' எனக் கூறிய வாற்றானும் பிறநூல்களானும் உணர்க."
>
> —நச்சினார்க்கினியர்,
> தொல். எழுத்து, மொழிமரபு, 13.

தெய்வப்புலவர்

திருவள்ளுவர்

அன்பளிப்பு: தருமபுர ஆதீனம்

(4) எழுத்துக்கள் மெய்யெழுத்து உயிரெழுத்து என இரண்டாய், அகரமுதலவாதல் போலப் பிரபஞ்சமும் சேதனம் அசேதனம் என இரண்டாய், ஆதிபகவன் ஆகிய முதலையுடையது. உயிரெழுத்து சீவான்மாக்களுக்கும், மெய்யெழுத்து தத்துவப் பிரபஞ்சத்திற்கும், அகரம் ஆதிபகவற்கும் உவமையாம் என்பது.

(5) அகரம் மெய்களினும் உயிர்களினும் ஒன்றிக் கலந்து நிற்பினும் அம்மெய் உயிர்களின் வேருகத் தனித்தும் நிற்கின்றது; அதுபோல இறைவனும் உலகோடும் உயிர்களோடும் கலந்து ஒன்றி நிற்கின்ருன் எனினும், அவற்றின் வேருகத் தனித்தும் விளங்குகின்ருன்.

(6) அகரம் உயிர்களோடும் மெய்களோடும் ஒன்ருய் வேருய் உடனுய்க் கலந்து நிற்பினும், ஒலியியல் நுட்பம் உணர்ந்த அறிஞர்களுக்கன்றிப் பருப்பொருள் அறிவினர்க்கு அவ்வியல்பு விளங்குவதில்லை; அதுபோலவே இறைவனும் உலகுயிர்களோடு கலப்பினுல் 'உடலின் உயிர்போல்' ஒன்ருகியும், பொருட்டன்மையாற் 'கண்ணின் அருக்கன் போல்' வேருகியும், உயிர்க்குயிராதற் றன்மையாற் 'கண்ணொளியின் ஆன்மபோதம் போல்' உடனுகியும் நின்று அருள்செய்து போதருகின்ருன் ஆயினும், மெய்யுணர்வு பெற்ற மேலோர்கட்கன்றி அவனது அவ்வருளியல்பு விளங்குவதில்லை.

(7) அங்காந்த அளவில் தோன்றும் அகரமும், அதன் இயைபாற் பிறந்தொலிக்கும் ஏனைய மெய்யுயிர் எழுத்துக்களும் ஒருவனுல் ஒலிக்கப்பட்டுத் தோன்றுதலின், தோற்றமும் ஈறும் உடையனவாகக் கருதப்படும் எனினும், முக்காலத்து மக்களால் எக்காலத்தும் ஒலிக்கப்படுதலின், அவை என்றும் உளவாய் நின்றிலங்கும் அழிவில் பொருள்களேயாம்; அதுபோல இறைவனும் இறைவனுல் இயக்கப்பெறும் உலகுயிர்களும் முத்தொழில் நிகழ்ச்சிகளைப் பெற்றிருப்பினும், என்றும் உளவாம் அழிவில் பொருள்களே யாகும். "பதியினைப் போற் பசு பாசம் அனுதி" என்பது திருமூலர் திருமந்திரம்.

(8) அகரம் தமிழ் எழுத்துக்களுக்கு மட்டுமே யன்றி, வேறு பல மொழிகளின் எழுத்துக்களுக்கும் பொதுவாகவும் முதலாகவும் திகழ்கின்றது; அதுபோலவே இறைவனும் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகவும் முதலாகவும் விளங்குகின்ருன். "ஒருவனுமே பலவாகி நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ" என்பர் மணிவாசகர். "இராமேச்சுரத்து ஒருவனுமே பலவாகி நின்றதொரு வண்ணமே" என்பது திருஞானசம்பந்தர் தேவாரம்.

(9) அகரஒலி ஒன்றே வெவ்வேறு மொழியாளர்களாற் பல்வேறு வடிவினதாக எழுதப்படுகின்றது; அதுபோல இறைவன் ஒருவனே பல்வேறு சமயத்தினரால் வெவ்வேறு வடிவினனுகவும் பெயரினனுகவும் வைத்து வழிபடப்படுகின்ருன். "ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமிலாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்பது திருவாசகம்.

(10) பேச்சளவில் மட்டுமுள்ள திருந்தா மொழிகளில் (Uncultivated Languages) அகரம் முதலிய ஒலிகட்கு வரிவடிவில் எழுத்துக்கள் (Script) இல்லையாயினும், திருந்திய இலக்கியச் செம்மொழிகளில் (Cultivated Languages) எழுத்தின் ஒலிவகைகளைக் காட்ட வரிவடிவங்கள் இன்றியமையாதன என்று நன்குணர்ந்து, எழுத்து வடிவங்கள் படைக்கப்பட்டுள்ளன; அதுபோல இறை வழிபாட்டிற்குத் திருவுருவங்கள் (Idols and Icons) வேண்டா எனக் கரைந்து திரியும் ஒருசிலர் உள்ளன ரெனினும், ஒலி வகைகளைக் காட்டுதற்கு எழுத்தமைப்புக்கள் வேண்டப்படுதல் போல, இறைவழிபாட்டிற்கும் திருவுருவ அமைப்புக்கள் வேண்டப்படும் என்பது பழந்தமிழ் மக்களின் சிறந்த கொள்கை.

"கட்புலன் இல்லாக் கடவுளைக் காட்டும்
சட்டகம் போலச் செவிப்புல ஒலியை
உட்கொளற்கு இடும்உருபு ஆம்வடி வெழுத்தே"

என்பது, இலக்கண நூல்களில் எடுத்துக்காட்டப் பெறும் மேற்கோள். ஒலியை யுணர்தற்கு எழுத்துக்கள் உதவுமாறு போல, இறை வழிபாட்டிற்குத் திருவுருவங்கள் உதவி புரியும் என்பது கருத்து.

"உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம்
உண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு."

"உள்ளுதோறும் உள்ளுதோறும்
உள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு."

முடிவுரை :

இங்ஙனம் அறிஞராய்க் கருதியுணர வல்லார் கருதி யுணர்ந்து மகிழத் தகும் சிறந்த கருத்துக்கள் பலப்பலவும், இவ் அகர உவமையின்கண் செவ்விதின் அமைந்துள்ளமை அறிந்து மகிழ்தற்குரியது.

"எல்லையற்ற பல பொருள் நுட்பக் குறிப்புக்களை யுணர்த்திக் கொண்டு செல்ல வல்ல தன்மையதாதலே, சிறந்த கவிதை எனத் தெளியப்படுதற்குரிய சீரிய சான்றாகும். சிறந்த நல்ல கவிதைச் செய்யுள் எதுவாயினும், அதனைச் சுற்றி அளவிடற்கரியதொரு பொருட் குறிப்புச் சூழ்நிலை மிதந்து கொண்டிருக்கும். கவிஞன், கருதியதும் கூறியதும் ஒரு கருத்தே யாயினும், அக் கருத்தே மிக விரிந்து பரந்து, அவன் கருதாத வேறு பல இயைபுடைய கருத்துக்களையும், தன்கண் பொலியத் தோற்றுவித்துக் கொண்டு திகழும்" எனப் பேராசிரியர் ஏ. சி. பிராட்லி என்பவர்* கூறுவர்.

* "The proof of the purest poetry is that its meaning is **inexhaustible**...About the best poetry, and not only the best, there floats an atmosphere of **infinite suggestion**. The poet speaks to us of one thing, but in this one thing there seems to lurk the secret of all. He said what he meant, but his meaning seems to beckon away beyond itself, or rather to expand into something **boundless** which is only focussed in it"

—Professor **A. C. Bradley**, Oxford Lectures on Poetry.

அதற்கு ஏற்ப இங்ஙனம் பலவகை விரிந்த பொருள் நுட்பக் குறிப்புக்கள் புலனாகும் வண்ணம் 'அகர முதல எழுத்தெல்லாம்' என்னும் அழகிய தொடரை அருளிச் செய்திருப்பதொன்றே, திருவள்ளுவர் தெய்வப் புலவர் என்பதனை நன்கினிது விளக்கும்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிச் செய்த திருக்குறள் நூலை நாம் ஆராய்ந்து கற்கவும், கற்று அதன்படி வாழ்க்கையில் நிற்கவும், இயன்றவரை முயன்று சிறப்புறுவோமாக !

திகழும் திருவள் ளுவனார்தாம்
சிறந்த தெய்வப் புலவர்எனல்,

பகவன் உண்மை நிறுவுதற்குப்
பண்பின் ஆராய்ந் தவர்சொற்ற

அகர உவமை தான்ஒன்றே,
அறியத் தெருட்டும்! அச்சான்றோர்

தகவின் அளித்த திருக்குறள்நூல்,
தக்காங் கோதி நாம்உய்வோம்!

—ஆசிரியர்.

[சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில், ஸ்ரீ சென்னமல்லீசுவரர் கோயிலில், புத்தாண்டுப் பிறப்பு நாளன்று (13-4-64), திருமிகு. அறநிலைய ஆணையர் அவர்கள் தலைமையில், ஆற்றிய சொற்பொழிவினைத் தழுவியது.

— ஆசிரியர்.]

நடைபெற்ற நிகழ்ச்சிகள் :

ஸ்ரீ உத்தராபதீசுவர சுவாமி கோயில், திருச்செங்காட்டங்குடி—பிரம்மோத்சவம்.
ஸ்ரீ கைலாசநாதசுவாமி கோயில், கைலாசபுரம் திருநெல்வேலி—வைகாசிப் பெருந்திருவிழா.
ஸ்ரீ மகாகாளநாத சுவாமி கோயில், கோயில் திருமாகாளம் — சோமயாக மகோற்சவம்.
ஸ்ரீ தியாகராஜ சுவாமி கோயில் திருவாய்மூர்—பிரம்மோத்சவம்.
ஸ்ரீ அகத்தீசுவரர்—பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில், நுங்கம் பாக்கம், சென்னை—வைகாசி வசந்த உத்சவம்.
ஸ்ரீ ஆதிநாத ஆழ்வார் கோயில், ஆழ்வார் திருநகரி—மகோத்சவம்.
ஸ்ரீ தாணுமாலய மூர்த்தி சுசீந்திரம்—சித்திரைத் திருவிழா.
ஸ்ரீ நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி கோயில், சேத்தூர்—வைகாசி விசாக மகோத்சவம்.
ஸ்ரீ கொப்புடைய நாயகி அம்மன் காரைக்குடி—செவ்வாய் உற்சவம்.
ஸ்ரீ கூடலழகர் கோயில், மதுரை—வைகாசிப் பெருவிழா.

தத்துவ ஞான வித்தகர்

முன்னுரை :

" நனிபரம் உணர்ந்தோன் அந்தத்
தத்துவ ஞானி ஆவன் "
—சித்தியார், சு : 168

தமிழ் நாட்டில் வாழையடி வாழையாகத் தொன்று தொட்டு எத்தனை பெரியவர்கள்-புலவர்கள்-சான்றோர்கள்—அருளாளர்கள் தோன்றியிருக்கின்றனரோ, அத்தனை பேரும் தத்துவ ஞான வித்தகர்களாகவே விளங்கி வந்திருக்கின்றனர். தமிழ் நாட்டின் 'மண் வளம்' அத்தகையது!

எழுத்தின் பெயர் :

தமிழ் மொழியின் அமைப்பே, தன்னியல்பில் தத்துவக் கருத்து நுட்பங்கள் மிக்குத் திகழ்கின்றது. தமிழிலக்கணத்தில் எழுத்துக்களுக்குப் பெயர் அமைத்து வழங்கி வரும் முறை கூட, தமிழ் மக்களின் தத்துவ சாத்திர வுணர்வினைப் பெரிதும் புலப்படுத்திக் கொண்டு நிற்கின்றது. உயிர் போலத் தாமே தனித்து இயங்கவல்ல எழுத்துக்களுக்கு உயிரெழுத்துக்கள் என்றும், உயிரோடு கூடியல்லது இயங்கலாற்ருத உடல்போன்ற எழுத்துக்களுக்கு மெய்யெழுத்துக்கள் என்றும் காரணப் பெயரிட்டிருப்பதொன்றே, பண்டைத் தமிழ் மக்களின் நுண்மாண் நுழைபுலத்தினையும், தத்துவ ஞானவுணர்வினையும் விளக்கப் போதிய சான்ருகும்.

"உயிரெழுத்து-மெய்யெழுத்து - உயிர்மெய்யெழுத்து என்னும் இக் குறியீடுகள் தாமே, * தமிழ் மக்களின் தன்னிகரற்ற அறிவு நலத்தினைப் புலப்படுத்தும் நிலையில், மிகச் சிறந்த அழகிய உருவகங்கள் ஆக விளங்குகின்றன" எனப் பேரறிஞர் திரு. இராபர்ட் கால்ட்வெல் அவர்கள், வியந்து பாராட்டியிருக்கின்ருர்.

வினைச்சொல் இயல் :

தமிழ்ப் பேரறிஞராக விளங்கி யிருந்து மறைந்த பொறியியற் கலைஞர் திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள்,

"வினைச் சொல்லானது பெயர்ச் சொற்களைப் போல வேற்றுமை யுருபுகளை ஏற்றுவராது. ஆனால் எண்ணிப்பார்க்கும் போது இறப்பு-நிகழ்வு-எதிர்வு என்னும் மூன்று காலங்களில் ஏதேனும் ஒன்றைக் காட்டுவதாக அமைந்து வரும்"

என்னும் பொருளை யுடையதாய்,

" வினையெனப் படுவது வேற்றுமை
கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு
தோன்றும் "

எனவரும் தொல்காப்பிய நூற்பா, அவ்விலக்கணச் செய்தி குறித்த பொருளை மட்டுமேயன்றி,

"வினை என்று சொல்லப்படும் கன்மம் ஆனது, கன்மம் செய்தவர்களுக்கு அக் கன்மத்தின் பயனாகிய இன்பதுன்பங்களைப் பயக்குங்கால், செல்வர் வறியர்-உயர்ந்தார் தாழ்ந்தார்-கற்ருர் கல்லார் முதலிய வேறுபாடுகளைச் சிறிதும் பாராமல், அவ்வப் பயன்களை நுகர்வித்து ஊட்டியே தீரும். (நல்லார் துன்புறவும், தீயார் இன்புறவும் இவ்வுலகிற் காண்கின்ருேமே

* "Tamil grammarians designate vowels by a **beautiful metaphor**, as Uyir or life of a word; Consonants as Mey or the body; and the junction of a vowel and Consonant as Uyirmey or an animated body."
—**Dr. Robert Caldwell,**
A Comparative Grammar, p. 132

ஈனின், அங்ஙனம் நிகழ்வதுபோல நமக்கு ஓரோவழி காணப்படுமாயினும்,) ஆராய்ந்து காணுங்கால், கன்மமானது தன்பயனை ஊட்டுதற்குரிய காலத்தினை எதிர்நோக்கி யிருந்து, அக்காலம் நேர்ந்தவழி கன்மம் செய்தவர்களுக்கு அக்கன்மத்தின் பயனை ஊட்டியல்லது ஒழியாதாய் முனைந்து வெளிப்பட்டே நிற்கும்"

எனத் தத்துவ நூற் றுறைக்குரிய பிறிதொரு பொருளையும் கூட, இணைத்தியைத்து வைத்து விளக்கும் இயல்பினதாகச் சிறப்புற்றுத் திகழ் கின்றது" எனத் 'தமிழ் நெடுங் கணக்கின் தத்துவக்கூறு' (The Mystic Aspect of the Tamil Alphabet) என்னும் நூலில் அழகுற விளக்கியிருக்கின்றார்.

ஸ்ரீ அருள் நந்தி சிவம்:

இவ்வாற்றால், தமிழ் மொழியானது இயல் பாகவே தத்துவஞான நலம் சான்ற தன்மை யுடையது என்பதனை, யாவரும் இனிது தெளி யலாம். தெளியின், அத்தகைய தமிழ் கூறும் நல்லுலகத்தில் தோன்றி யருளிய சான்றோர்கள் அனைவருமே, தத்துவஞான வித்தகர்களாக விளங்கி வந்திருத்தலில், நமக்கு வியப்பு ஏதும் நிகழ இடனில்லை.

இங்ஙனம் தமிழ் நாட்டுச் சான்றோர்கள் அனைவருமே, தத்துவ ஞான வித்தகர்கள் என விளங்கி வந்திருக்கின்றனராயினும், இத் தலைப் புத் தொடரானது, காரண இடுகுறிச் சிறப்புப் பெயர் எனக் கூறும் நிலையில், ஏற்புழிக் கோடல் என்னும் உத்திமுறை பற்றி, இங்குச் சிவஞான சித்தியார் என்னும் சமய-தத்துவ-ஞான நூலை இயற்றியருளிய ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் அவர்களையே சிறப்பு முறையிற் குறிப்பதாகக் கொள்ளலாம்.

கவிதைத் துறையிற் கம்பரும், காப்பியத் துறையில் இளங்கோவடிகளும், இலக்கணத் துறையில் தொல்காப்பியரும், யோக ஞான அனுபவத் துறையில் திருமூலரும், பக்தித் துறையில் மாணிக்க வாசகரும் பிறபிற சான் றோர்களும் போல, நம் தமிழ் நாட்டில் தத்துவ ஞானத் துறையில் தலைசிறந்து திகழும் வித்த கர், ஸ்ரீ அருள் நந்தி சிவசாரிய சுவாமிகள் அவர்களேயாவர் எனக் குறிப்பிடுதல் மிகவும் பொருந்தும்.

தலைப்பின் கவர்ச்சி:

ஆசிரியர் மெய்கண்டார் முதலிய மற்றும் பிற சான்றோர்கள் பலரையும் கூட, இத்தொட ராற் குறிப்பிட்டுச் சிறப்பித்தல் பொருந்தாதோ எனின், பொருந்தும் என்பது முன்னரே மேலே கூறப்பட்டுவிட்டது.

கவிதையோ கட்டுரை எதுவாயினும், அவற்றின் பொருள் மட்டுமே யன்றி, அவற்றின் தலைப்பும் கூடக் கவர்ச்சி மிக்கதாக விளங்குதல் வேண்டும் என்பர். வோர்ட்ஸ் வொர்த் என் னும் கவிஞரின் கவிதைகள் சிறந்தனவாக இருந்தும், அவர் தம் கவிதைகளுக்குக் கொடுத்த தலைப்புக்கள் கவர்ச்சியின்றி அமைந் திருந்ததனாலேயே முதலில் அவைகள் மக்களி டையே போதிய அளவு பரவாமல் இருக்க நேர்ந்தது என்பர்*. தாமஸ் ஹார்டி என்னும் அறிஞர் ஆராய்ந்து அமைத்த தலைப்பின் சிறப் பினாலேயே, அவர் எழுதிய "Far From the Madding Crowd" என்னும் புதினம் (Novel) எடுத்த எடுப்பிலேயே புகழ்பெறும் சிறப்பை எய்திற்று. ஆல்டஸ் ஹக்ஸ்லி என்னும் அறி ஞர், தம் நூலின் பெயரைக் கவர்ச்சியுடைய தாகச் செய்ய ஷேக்ஸ்பியர் எழுதிய புயல் என் னும் நாடகத்திற் போதரும் அழகிய வரி ஒன் றினை எடுத்து, "O Brave New World" எனப் பெயர் அமைத்தார்.

அம்முறையில் ஸ்ரீ அருள்நந்தி சிவத்தின் சிறப்பையும், அவர் இயற்றியருளிய சிவஞான சித்தியார் என்னும் நூலின் அருமை பெருமை

---

* "One form of amusement is easily found by reading the extraordinarily stiff or trivial labels which Wordsworth chose to attach as titles to some of his poems. 'Ode to Duty' is not a title which attracted me very much. The poem attracts and holds me; but the title did not drew me to the poem. 'Resolution and Independence' does not suggest poetry at all. Happily in this instance Wordsworth vouchsafes an alternative title, 'The Leech-gatherer'. Then we get 'Incident in the Life of a Favourite Dog', followed by 'Tribute to the Memory of the Same Dog', and, finally, 'On seeing A Needle-Case in the Form of A Harp.' I have laughed often over these titles .."

—Viscount Edward Grey,
The Pleasure of Reading.

களையும் விளக்குதற்குரிய கவர்ச்சி மிக்கதாக, இத் தலைப்பு ஈண்டு எடுத்துக் கொள்ளப் பெறுவதாயிற்று.

ஆதலின், இத்தலைப்பின் கீழ் இதுபோது ஈண்டு நாம் சிறப்புமுறையில், ஸ்ரீ அருள் நந்தி சிவாசாரிய சுவாமிகள் பற்றி ஒரு சிறிது ஆராய்ந்து அறிய முற்படுவோம்.

‘ சர்வ தந்திர சுதந்திரர் ’

ஸ்ரீ அருள் நந்தி சிவாசாரியர் “ சகல கலை புராணவேத சாத்திரங்கள் சமயங்கள் தாம் பலவும் உணர்ந்தவர் ” (274). “ சகலாகம பண்டிதர் ” என வழங்கும் அவர்தம் பெயருக்கு ஏற்ப, அவர் சகல ஆகமங்களிலும் தன்னிகரற்ற புலமை வாய்ந்திருந்தார். பல்வேறு கலைகளையும் எளிதாகக் கற்றுணர்ந்து, அவற்றில் வல்லவர்களாகத் திகழும் பேரறிஞர்களையெல்லாம் ‘ சர்வ தந்திர சுதந்திரர் ’ எனக் கூறுவதுண்டு. அதன்படி அவர் எல்லாக் கலைநூல்களையும் கற்றுணர்ந்து, அவற்றை எளிதாகக் கையாளும் திறமும் பெற்றிருந்தார். மேலும், அவர் எல்லாவகையான கலைநூல்களையும் கற்றிருந்தாலும், அவ்வவற்றிலேயே சிக்குண்டு கலக்கமுற்று அமிழ்ந்துபோய் விடாமல், அவற்றின் வேருக எதனையும் தாமே ஆராய்ந்து உண்மை கண்டு நிறுவவல்ல திறனும் உடையவராகத் திகழ்ந்திருந்தார்.

இவர் தாம் இயற்றிய ‘ சிவஞான சித்தியார் ’ என்னும் செந்தமிழ்த் தத்துவ நூலில், பரபக்கம் என்னும் பகுதியில்,

1. உலகாயதம்
2. சௌத்திராந்திகம்
3. யோகாசாரம்
4. மாத்தியமிகம்
5. வைபாடிகம்
6. நிகண்ட வாதம்
7. ஆசீவகம்
8. பட்டாசாரியம்
9. பிரபாகரம்
10. சத்தப் பிரமவாதம்
11. மாயாவாதம்
12. பாற்கரியம்
13. நிரீச்சுர சாங்கியம்
14. பாஞ்சராத்திரம்

என்னும் பல்வேறு சமயக் கொள்கைகளையும், அவைகள் இன்னின்ன என்று அவ்வச் சமயத்தார்களின் ஊக்கமும் உணர்வுமே பொலிய ஆராய்ந்து எடுத்துக்கூறி, அவை தம்மையே பின்னர் அளவை நெறிமுறைகள் பிழையாது ஆராய்ந்து மறுதலை செய்து விளக்கிக் காட்டியிருக்கும் மாண்பு, இவர் ‘ சர்வதந்திர சுதந்திரர் ’ என்பதனை நன்கினிது வலியுறுத்தும்.

உலகாயதம் :

உதாரணமாக, உலகாயத மதத்தின் கொள்கைகளைக் கூறும்போது, அவ்வுலகாயத மதத்தைச் சேர்ந்தவன் எத்தகைய உணர்ச்சியுடன் கூறுவானே, அதே வகையான உணர்ச்சி பொருந்துமாறு, அருள்நந்தி சிவம் அக் கொள்கைகளைப் பின்வருமாறு எடுத்துக் கூறுகின்றார்:

“ பிரத்தியட்சம் ஒன்று மட்டுமே பிரமாணமாகும். அனுமானம் ஆகமம் முதலியன வேண்டுவதில்லை.

இவ்வுலகிற் புண்ணிய பாவங்கள் என்பன இல்லை. ஆன்மா இல்லை. கடவுளும் இல்லை. இவற்றை உண்டு என்று கூறிச் சிலர், உலக மக்களை ஏமாற்றுகின்ரூர்கள். ‘ மலடி பெற்ற ஒரு மகன், முயற் கொம்பின்மீது ஏறி, ஆகாயத்திற் பூத்த தாமரை மலரைப் பறித்தான் ’ என்று யாரேனும் கூறினல், அஃது எங்ஙனம் நம்பத் தகாததோ, அதே போன்றுதான், புண்ணிய பாவங்களும் ஆன்மாவும் கடவுளும் உண்டு என்று பிதற்றுவோர் கூற்றும், நம்பத் தக்க தன்ருக உள்ளது.”

“ வாம தந்திர நெறியைப் பின்பற்றும் அன்பனே! என்கொள்கையைப் போலவே உன் கொள்கையும் உள்ளது. ஆதலின் உன்னை நான் என் உயிர்த்தோழனுக ஏற்றுக் கொள்கின்றேன். நீ இவ்வுலகில் வாழ வல்லவன். உன்னை நான் மிகவும் மெச்சுகின்றேன். உன் வலக்கையைக் கொடு. கையிணைத்துக் கோத்து மகிழ்ந்து, நாம் நட்புரிமை கொள்ளுவோம். உடலிற் பலமும் உள்ளத்தில் உறுதியும் இல்லாத கோழை மனிதர்கள், கொலை, களவு, கள், காமம், பொய் முதலியன கூடாது என்று

கூறுகின்றார்கள். அவர்களைப் பொருட்படுத்தாமல், என்னைப் போலவே நீயும் அவற்றை அஞ்சாமற் செய்கின்றாய். உன் ஆண்மையை நான் பாராட்டுகின்றேன்.''

''தாகத்தால் வருந்துபவர்கள், தண்ணீர் கண்ட இடத்தில் அதனைக் குடித்து மகிழாமல், அதனை வெறுத்து ஒதுக்கி விட்டு, அஃது இல்லாத இடத்தில் அதனை அருந்த விரும்பிக்கேட்டு அல்லற்படுவது போல, இவ்வுலகத்திற் கிடைக்கும் இன்பங்களையெல்லாம் எவ்வளவுக்கெவ்வளவு முடியுமோ, அவ்வளவுக் கவ்வளவு அநுபவிக்க முற்படுவதை விட்டு விட்டு, மறுமையில் மோட்சத்தில் ஏதோ இன்பம் கிடைக்கும் என்று எண்ணிக் கொண்டு, மூடர்கள் சிலர் பட்டினி கிடந்தும்-விரதங்கள் இருந்தும்-தவம் புரிந்தும் அல்லற் படுகின்றார்கள். அந்தோ, பாவம்!''

''பெண்களை நினைத்து வாடுவதும், அவர்களோடு ஊடுவதும், அவர்களின் காலில் விழுந்து ஊடலைத் தீர்க்க வருந்துவதும்தான், அருந்தவம்; பெண்களோடு கூடி மகிழ்வதுதான் முத்தி; பெண் இன்பத்தினை நுகர்பவர்கள்தான் முத்தர்கள்.''

''இப்படி யன்றிக் கன்மம்
உயிர்இறை வேறுண் டென்று
செப்பிடும் அவர்க்கு மண்ணோர்
செய்திடும் சூற்றம் என்னோ ?
ஒப்பிலா மலடி பெற்ற
மகன்ஒரு முயற்கொம் பேறித்
துப்பில்ஆ காயப் பூவைப்
பறித்தமை சாற்றி னரே!''

[கன்மம் - புண்ணிய பாவங்கள்; உயிர்-ஆன்மா; இறை -கடவுள்.]

''வாழவே வல்லை வாமி!
வலக்கைநா! என்னு யிர்க்குத்
தோழன்நீ! உன்னை ஒப்பார்
சொல்லிடின் இல்லை கண்டாய்!
கோழைமா னுடர்தீ தென்னும்
கொலைகள வாதி கொண்டே
சூழும்வார் குழலார் மொய்ப்பச்
சுடர்எனத் தோன்றி னயே!''

[வாமி-வாம மார்க்கத்தைச் சேர்ந்தவன்; மது மாமிசம் முதலியன உண்டு திரியும் சாக்த மதத்தினன்.]

ஊடுவது, உணர்வது, உற்ற
கலவிமங் கையரை உள்கி
வாடுவது, அடியில் வீழ்ந்து
வருந்துவது அருந்தவம்; பின்
கூடுவது உணர்வு கெட்டுக்
குணமெலாம் வேட்கை யேயாய்,
நீடுவது இன்ப முத்தி;
இத்தில்நின் றார்கள் முத்தர்.''

[முத்தி-மோட்சம். முத்தர்-மோட்சம் பெறுபவர்கள்.]

உலகாயத மறுதலை:

உலகாயதன் கூற்றாக வைத்து மேற்குறித்த பாடல்களை யாத்த ஸ்ரீ அருள் நந்தி சிவாசாரிய சுவாமிகள், தம்முடைய கூற்றில் வைத்துப் பின்வரும் கருத்துக்களை அமைத்து உலகாயதமத மறுதலைப் பாடல்களையும் அருளிச் செய்திருக்கின்றார். ஒரு மனிதனே தன் குரலை வெவ்வேறு வகைகளில் மாற்றிக் கொண்டு, பல்வேறு மாந்தர்களைப்போல உரையாடல்கள் நிகழ்த்தித் திறம்பட நடித்துக் காட்டும் ஓரங்க நாடகம் (Mono-acting) போல, ஸ்ரீ அருள்நந்திசிவம் சிவஞான சித்தியார் பரபக்கப் பகுதியை இயற்றியுள்ளார்.

''உலகாயதனே! நீ பிரத்தியட்சம் ஒன்று மட்டுமே, பிரமாணம் ஆகும் என்கின்றாய். அங்ஙனமாயின், நீ உன்னுடைய தாய் தந்தையர்களை இன்னாரென்று, பிரத்தியட்சப் பிரமாணம்பற்றி, நேரிற் கண்டோ அறிந்து கொண்டாய்? அனுமானத்தினால் தானே, தாய் தந்தையர்களை உணர முடியும்?

கண்ணாற் பிரத்தியட்சமாகக் கண்டறிய முடியாததனை அனுமானப் பிரமாணம் கொண்டும், அனுமானத்தினாலும் கருதி

யுணர இயலாததனை ஆகமப் பிரமாணம் கொண்டுமே, நாம் உணர்தல் வேண்டும் என நீ தெரிந்துகொள்.''

“காரணமின்றிக் காரியம் இல்லையாத லாலும், நீ இன்ப துன்பங்களை அனுபவித் தறிவதனுலும், இன்ப துன்ப அனுபவங் கட்குக் காரணமாக நல்வினை தீவினை யாகிய புண்ணிய பாவங்கள் உண்டு என்று உணர்க! அறிவற்ற சடமாகிய உடல் தானே இயங்காதாகலின், அத னுள்ளே அறிவுடைய சித்தாகிய உயிர் ஒன்று இருக்கின்றது என்று தெளிக! உலகமானது ஐம்பூத காரியமாய் முத் தொழிற் படுதலாலும், செய்வோனை யின்றிச் செய்வினை இன்மை யாலும், இவ்வுல கத்தின் தொழிற்பாட்டுக்குக் காரணமாக இறைவன் ஒருவன் உளன் என்று அறிக.''

''பெண்கள்பால் பெறும் இன்பத் தினையே, நீ பெரிதும் சிறந்ததாக எண்ணி மகிழ்கின்ருய். நீ விரும்பும் பெண்ணின் உடலானது, தோல், இரத்தம், இறைச்சி, மேதை, மச்சை, எலும்பு, சுவேத நீர் என் னும் எழுவகைத் தாதுக்களால் அமைந்து, முடை நாற்றம் வீசுவது. அழுக்குகள் மலிந்து, புழுத்திரள்கள் நெளிந்து, சளி யும் கோழையும் வழிந்து நுரைக்கும் மூத் திர பாத்திரமே அது! பன்றியானது அசுத்தம் மிக்க சாக்கடையிற் புரண்டு மகிழ்வது போலவும், வெறுக்கத் தக்க மலத்தினை விரும்பி யுண்பது போலவுமே, நீ இழிந்த பெண்ணின்பத்தினைச் சிறந்த தெனக் கொண்டு மயங்கி நிற்கின்ருய். இதை விடுத்து, இறைவனுக்குத் தொண்டு செய்து ஒழுகினுல், குற்றமற்ற தூய சிறந்த எல்லையில்லாத பேரின்பத்தினை அடையலாம்!''

“குரோத குணமே கொண்டிருப்பவர் கள், மனச் சாந்தியின் நன்மையைக் குறித்து அறியமாட்டார்கள். பேராசை பிடித்து உழல்பவர்களுக்கு, ஆசைகளை யறுத்தலால் விளையும் அளவிலா இன்பம் தெரியாது. இறைவனின் திருவடிகளில், நீ அன்பு செய்து ஒழுகத் தலைப்படு. நின் பால் மிகமேலான சிறந்த பேரின்பம் பெருகி விளையும். இது சத்தியம். தெய்வ நன்னெறி சேர்ந்தால், சேமமாகிய இன் பம் திண்ணமாகப் பெறலாம்.''

“தோல்இ ரத்தம் இறைச்சி மேதை
எலும்பு மச்சை சுவேதநீ
ரால்,எ டுத்த முடைக்கு ரம்பை
அழுக்கி னேடு புழுக்குழாம்!
நூல்ஒ ழுக்கிடு கோழை ஈரல்
நுரைக்கும் மூத்திர பாத்திரம்!
சேல்அ டர்த்தகண் ணுர்கள் என்பது
தேர்ம லத்திரள் திண்ணமே.''

[மேதை-கொழுப்பு. மச்சை-மூளை. சுவேத நீர்-சுக்கிலம். தேர்-அறிக.]

“ஆசை யுற்றுழல் சூக ரங்கள்
அசுத்தம் மேவி அளைந்துதின்
றே,சு கித்தன வாயி டும்சுகம்,
ஏழையோ டுறும் இன்பம்நீ!
மாச தற்றெளிர் நித்த சுத்த
வளந்த ரும்சுக வாரிகாண்!
ஈச னுக்கடி மைத்தி றத்தின்
இசைந்து நாம்பெறும் இன்பமே!''

[சூகரங்கள் - பன்றிகள். ஏழை - பெண். வாரி - கடல்.]

“குரோத மேகுண மாய்இ ருந்தவர்,
சாந்தி நன்மை குறிக்கொளார்.
அராக மேஅணை வார்கள், ஆசை
அறுத்த இன்பம் அறிந்திடார்.
பராவு தேவர் பராவு தூய
பராப ரன்அடி பற்றிநீ
விராவு! மெய்யில் விடாத இன்பம்
விளைந்தி டும். இது மெய்ம்மையே.''

[குரோதம் - கோபம். சாந்தி - பொறுமை. அராகம்-ஆசை. பராவு-துதிக்கின்ற. விராவு- அடை, சேர்.]

நால்வகைப் பௌத்தர் :

பௌத்த மதத்தினர் (1) மாத்தியமிகர், (2) யோகாசாரர், (3) சௌத்திராந்திகர், (4) வைபாடிகர் என நால்வகைப்படுவர். இந் நால்வரும் முறையே எல்லாப் பொருளும் சூனியம் எனவும், புறப்பொருள் சூனியம் எனவும், புறப்பொருளுண்மை வழியளவையான் அறியப்படும் எனவும், புறப்பொருள் காட்சிப் பொருளாம் எனவும் கூறுவர்.

எல்லாப் பொருளும் சூனியமே என ஆசிரியன் மொழிந்ததே பொருள் எனக் கோடலால் தலைமாணுக்கர், அதற்குமேல் அறிய விரும்பி வினு நிகழ்த்தாமையாற் கடைமாணுக்கர் என இரண்டும் ஒருங்குற்று நின்றமையினுல், மத்தியம மாணுக்கராய் மாத்தியமிகர் எனப் பெயர் பெற்றனர்.

ஆசிரியன் புறப்பொருள் சூனியம் என்றதனை உடன்பட்டு நின்றதனுல் ஆசாரமும், ஞானமும் அவ்வாறு சூனியமாயின் வழங்கற்பாடு கூடாதன்றே என, அதனை மறுத்து மேலே வினவுதல் ஆகிய யோகமும் உடையராயினுர், யோகாசாரர் எனப்பட்டனர்.

புறப்பொருள் முழுவதும் சூனியமே என்ற ஆசிரியன், மாணுக்கர்கள் நிகழ்த்திய விணுக்களுக்கு ஏற்ப வெவ்வேறு சூத்திரங்களைக் கூறி அறிவுறுக்க, இங்ஙனம் விணுக்களுக்கு ஏற்றபெற்றி யெல்லாம் வெவ்வேறு விடைகளைக் கூறிக்கொண்டு செல்லும் நும் சூத்திரங்களுக்கு ஒரு முடிவே யில்லையோ எனச் சூத்திரத்தின் அந்தம் பற்றிக் கேட்டவர்கள், சௌத்திராந்திகர் எனப்படுவர்.

புறப்பொருள் ஞானத்தால் அநுமித்து அறியற்பாற்று என்று ஆசிரியன் கூறியவழி, இது விபாடை (முற்கூறியதற்கு முரண்பாடு) போலும் எனக் கூறியவர், வைபாடிகர் என வழங்கப்படுவர்.

சௌத்திராந்திக மதம் :

இந்நால்வகைப் பௌத்தர்களுள் சௌத்திராந்திகர் என்பவர்களின் கொள்கையைச் சிவஞானசித்தியார் பரபக்கப் பகுதியில் மிக விரிவாக எடுத்துக் கூறி, மிக விரிவாக மறுத்தும் உரைக்கின்ருர் ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள்! அவற்றுள் ஒரு கருத்தினை மட்டும் ஈண்டுக் காண்போம்.

புத்தர்பிரான் மறைந்ததற்குப் பின்னர் அவரைப் பின்பற்றிய பௌத்தர்களுள்ளே நாளடைவில் ஈனயானம் மகாயானம் முதலிய பல பிரிவுகள் ஏற்பட்டன. புத்தர்பிரானின் உபதேசங்களுக்குத் தத்தம் மனப் போக்கிற்கும் சௌகரியத்திற்கும் ஏற்ப, அவரவர்கள் புதிய பொருள்களைக் கற்பித்துக் கொள்ளத் தலைப்பட்டார்கள்.

“உயிர்களைக் கொல்லுதல் தான் குற்றம்; கொல்லப்பட்டவற்றின் ஊனைத் தின்பது குற்றமாகாது. இறந்து போனவை யெல்லாம் மண்ணுக்குச் சமம் ஆகும். ஆதலின் இறந்ததன் ஊனைத் தின்னுதல் பாவம் அன்று. வேனிற் காலத்து நண்பகலில், ஒரு தண்ணீர்ப் பந்தரிற் சென்று நாம் தண்ணீர் அருந்துகின்ரேம். தண்ணீர் தந்தவர்க்குப் புண்ணியம் உண்டாகுமே யன்றி, அருந்திஞேர்க்குப் புண்ணியம் எய்துவதில்லை. அதுபோல, ஓர் உயிரைக் கொல்லுபவர்களுக்குப் பாவம் ஏற்படுமேயன்றி, அதன் ஊனைத் தின்பவர்களுக்குப் பாவம் ஒரு போதும் எய்தாது”

எனக் காரணம் காட்டிப் பௌத்தர்களுட் பெரும்பாலோர், புத்தர்பிரானின் கொள்கைக்கு மாருகப் புலால் உண்ணுதலிற் பெரிதும் தலைப்பட்டனர். சீத்தலைச் சாத்தனுர் இயற்றிய மணிமேகலை என்னும் காப்பியத்தில், ‘ஆதிரை பிச்சையிட்ட காதை’யில் வரும் சாதுவன், நாகர் குருமகனுக்குக் கூறிய அறிவுரையின் கண்ணும், இவ்வுண்மைக்குச் சான்று காணலாம். இன்றும் சீனு, ஜப்பான், சிலோன் முதலிய நாடுகளில் வாழும் பௌத்தர்கள், மிகுதியாகப் புலாலுண்ணும் இயல்பினராக இருத்தலை நாம் அறிவோம். சௌத்திராந்திகர்கள் இக் கொள்கையை யுடையவர்களாக இருந்திருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

“கொன்றிட லாகா தென்றும்;
கொன்றவை கொண்டு நாளும்
தின்றிட லாகும்; மண்ணேடு
ஒத்திடும் செத்த எல்லாம்;

ஒன்றிய வாசம் ஊட்டி
உண்ணும்நீர் வைத்த வர்க்கோ ?
சென்றுநின் றுண்ட வர்க்கோ ?
புண்ணியம் செப்பி டாயே.''
—சித்தியார், பரபக்கம் : 91

சௌத்திராந்திக மதமறுதலே :

இங்ஙனம் இதனைச் சௌத்திராந்திக மதக் கொள்கைகளுள் ஒன்ருகக் கூறும் ஸ்ரீ அருள் நந்தி சிவாசாரியர், இதனையே பின்னர் அதன் மறுதலைப் பகுதியில் அழகுற மறுத்துப் பின் வரும் கருத்து அமையப் பாடுகின்ருர் :

"கொன்ருல்தான் குற்றம் ; ஒருவர் கொல்ல இறந்துபோன ஓர் உயிரின் ஊனைத் தின்பது குற்றம் இல்லை என்னும் பௌத்தனே ! தின்ணுதவர்களுக்கு ஓர் உயிரைக் கொலை புரிந்து, அதன் ஊனை யுண்பிக்க ஒருவரும் முற்பட மாட்டார்கள். நீ தின்பாய் என்று கருதித்தான், உன்னை மகிழ்விப்பதற்காக, ஓர் உயிரைக் கொன்று அதனை நீ தின்னும்படி உனக்குத் தருகின்ருர்கள் ! தின்பவர்களுக்குப் பாவம் இன்றிக் கொன்றவர்களுக்கே பாவம் என்பையாயின், உணவு அளித்தவர்களுக்குப் பாவத்தை யளிக்கும் உன்னுடைய வள்ளன் மையை, என்னென்பது ? புலாலுண்பது குற்றம் இல்லையாயின், அப் புலாலைப் புத்தர் பிரானுக்கும் உணவாகப் படைத்து, நீ அவரை வழிபடுவாயாக ! உன்னுடைய உடலையே அசுத்தம் என்று வெறுக்கின்ற நீ, வேருேர் உடலை உண்ணுதல், அசுத்தம் என்று உணர வில்லையா ?''

தின்னுமது குற்றமிலை செத்ததெனும் புத்தா !
தின்பையெனக் கொன்றுனக்குத் தீற்றினர்க்குப்
பாவம்
மன்னுவது, உன்காரணத்தால் ; தின்ன தார்க்கு
வதைத்தொன்றை இடாமையினல் ; வதைத்த
வர்க்கே பாவம்
என்னில், உனை ஊட்டினர்க்குப் பாவம் சேர
என்னதவம் புரிகின்ருய் ! புலால் கடவுட்கு
இடாயோ !
உன்னுடலம் அசுசியென நாணி, வேருேர்
உடலுண்ணில், அசுசியென உணர்ந்திலைகாண்
நீயே.

சிவஞான சித்தியாரில் ஸ்ரீஅருள் நந்திசிவம் மறுத்திருப்பது போலவே, ஆசிரியர் திருவள்ளுவரும் தமது திருக்குறளில், இக்கொள்கையினரைக் கடிந்து,

"தினற்பொருட்டாற் கொல்லாது
உலகெனின், யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்''

எனப் "புலால் மறுத்தல்'' என்னும் அதிகாரத்தில் அருளிச் செய்திருத்தல் காணலாம்.

முத்திநிலை பற்றிய கருத்துகள் :

ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரியர் - "தத்துவ ஞான வித்தகர்''—பலவேறு சமயங்களையும் பற்றிப் பயின்று ஆராய்ந்து அறிந்தவர்—அவற்றின் கொள்கைகளை ஐயந் திரிபின்றிச் சிக்கறத் தெளிந்தவர்—அவற்றைத் தொகுத்தும் விரித்தும் மறுத்தும் கூறி விளக்க வல்லவர் என்பதற்கு, மேலும் ஒரு சிறு சான்று மட்டிற் கண்டு அமைவோம்.

சிவஞான சித்தியார் சுபக்கப் பகுதியில், எட்டாம் பகுதியில், முத்திநிலை பற்றிய கருத்தை ஆராய நேர்கின்றது. அங்குச் சுத்தாத்துவைத சித்தாந்த முத்தியைப் பற்றிச் சுட்டுதற்கு முற்படும் ஸ்ரீ அருள்நந்திசிவம், பிற சமயங்கள் கூறும் முத்திநிலை பற்றிய கருத்துக்களைத் தொகுத்துக் கூறி, யாம் கூறும் முத்திநிலை இவைகளைப் போல்வதன்று, இவற்றின் வேறுபட்டது என்கின்ருர். அச் செய்யுளின் பொருள் பின்வருமாறு :-

(1) உலகாயதர்கள் இம்மையில் எழில் மிக்க பெண்களைக் கூடி எய்தும் இன்பமே முத்தி என்பர். (2) மீமாஞ்சகர்கள் இம்மையில் வேள்வி முதலியன செய்து மறுமையிற் சுவர்க்கம் முதலிய பதவிகளைப் பெற்று இன்புறுதலையே முத்தி எனக் கருதுவர். (3) பௌத்தர்கள் உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானம் என்னும் ஐந்து வகைக் கந்தங்களும் கெடுதலே முத்தி என்று கொள்வர். (4) ஆருகதர்கள் அநந்த ஞானம் - அநந்த தரிசனம் - அநந்த வீரியம் - அநந்த சுகம் - நிர்நாமம் - நிர்க்கோத்திரம் - நிராயுஷியம் - சம்மியதா பாவம் என்னும் அருகனுக்கு உரிய எட்டு வகைக் குணங்களைப் பெறுதலே முத்தி என

மொழிவர். (5) பாடாணவாதிகள் பாடாணம் (கல்) போல, நாம் விருப்பு வெறுப்பின்றிச் செயலற்றுக் கிடக்கும் நிலையே முத்தி எனப் பகர்வர். (6) சாங்கியர்கள் விவேகம் (மெய்யுணர்வு) எய்துதல்தான் முத்தி எனச் சாற்றுவர். (7) சிவ சமவாதிகள் சிவசாருபம் பெற்றுச் சிவனுக்குச் சமமாக நாமும் விளங்கப் பெறுதலே முத்தி என்று செப்புவர்.

சிவபிரானின் திருவடியைச் சென்றடைந்து, அங்கும் அவனுக்குத் தொழும்பாக விளங்கிச் சிவானுபவம் நுகர்ந்து கொண்டு இருக்கப் பெறும் நிலையே, சைவசித்தாந்திகள் ஆகிய நாங்கள் கூறும் முத்தியின் இயல்பாகும்."

இம்மையே ஈரெட்டாண் டெய்திஎழி லாரும்
ஏந்திழையார் முத்திஎன்றும்; இருஞ்சுவர்க்க முத்தி
அம்மையே என்றும்; முத்தி ஐந்து கந்தம்
அறக்கெடுகை என்றும்; அட்டகுணம் முத்தி
என்றும்;
மெய்ம்மையே பாடாணம் போல்கைமுத்தி என்றும்;
விவேகம்முத்தி என்றும்; தன் மெய்வடிவாம்
சிவத்தைச்
செம்மையே பெறுகைமுத்தி என்றும்,
செப்புவர்கள்;
சிவனடியைச் சேரும்முத்தி செப்புவதிங்கு யாமே.

சைவ சித்தாந்தச் சான்றோர் :

ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரியர், சைவ சித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவ ஞானக் கொள்கையினை, விரிவாகவும் விளக்கமாகவும் "தர்க்கமொடு உத்தரங்களினால் சமயம் சாதித்து" மிகவும் திறம்பட நிறுவியருளிய மாபெருஞ் சான்றோர் ஆவர்!

" வேதங்களைப் போலவே சிவாகமங்களும் பிரமாணமாகக் கொள்ளத் தக்க முதல்நூல்கள். வேதம் பொது நூல், ஆகமம் சிறப்பு நூல். வேதங்கள் உலக மக்களுக்கும், ஆகமங்கள் சத்திநிபாதம் உற்ற உத்தமர்களுக்கும் அருளிச் செய்யப்பட்டவை. வேதங்களிற் கூறப்படாமல் எஞ்சிய பொருள்களையும், வேதமுடிபாய உபநிடதங்களின் சாரமாய் உள்ள பொருள்களையும், கிளந்தெடுத்து விளங்கக் கூறுவன சிவாகமங்களே யாகும். ஏனைய நூல்களெல்லாம் பூர்வபட்சம் எனவும், சிவாகமங்கள் சித்தாந்தம் எனவும் திகழ்கின்றன. சித்தாந்த நெறிதான் வீடு பேற்றிற்கு நேரிய - இனிய - எளிய வழியாகும்" (சித்தியார் சுபக்கம் : 267, 268).

" சைவ சித்தாந்த சமயம் எந்தஒரு சமயத்தையும் புறக்கணித்து இகழ்கின்றிலது! 'இது ஆகும் அது அல்லது எனும் பிணக்கின்றி, நீதியினால் இவையெல்லாம் தன்னிடத்தே காண' எல்லாச் சமயங்களையும் ஏற்று உடன்பட்டு, அவ்வவற்றிற் குரிய நிலையிற் சோபான முறைப்படி அவற்றைத் தன்பால் தழுவிக் கொண்டு, அவற்றிற கெல்லாம் தாயகம் ஆக அமைந்து திகழ்வது சைவசித்தாந்தம் (267)..." என்றெல்லாம் உலகுக்கு அறைகூவி அறிவுறுத்தியருளிய அருட்பெருஞ் சான்றோர் - தத்துவஞான வித்தகர் - ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரியரே யாவர் என்பதில் ஐயம் இல்லை.

" சைவ சித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கையானது மிக விரிந்ததும், பெருஞ் செல்வாக்கு வாய்ந்ததும், ஐயத்திற்கு இடனின்றி உண்மையிலேயே பெருமதிப்பிற்கு உரியதும், இந்திய நாட்டிலுள்ள சமயக் கொள்கைகளு ளெல்லாம் தலைசிறந்தது மாக விளங்குகின்றது. அது தனிச் சிறப் பாகத் தென்னிந்தியாவிற் குரிய தமிழ் மதம் ஆகும். தென்னிந்திய மக்களின் மிகச் சிறந்த பேரறிவின் பெருவிளைவே சைவ சித்தாந்தம். "

"பிற எல்லா ஆராய்ச்சி வகைகளையும், கொள்கை அல்லது வழிபாட்டு முறைகளையும் விட மேலானதாகச் சைவ சித்தாந்தம் சில சிறப்பியற் பண்புகளைத் தன்னகத்தே கொண்டு ஒளிர்கின்றது. அது மிகவும் பழைமை வாய்ந்ததாய், அப் பழைமையினாலாய பெருமைகளைப் பெற்று விளங்குகின்றது. சமய உலகில் தென்

---

* " The Saiva Siddhantha system is the most elaborate, influential and undoubtedly the most intrinsically valuable of all the religions of India. It is peculiarly the South-Indian, and Tamil religion. Saiva siddhantha philosophy is the choicest product of the Dravidian intellect..."

—The Rev. Dr. G. U. Pope.

னிந்தியாவில் உள்ள மிகப் பெரும் பான்மை யான சிறந்த கருத்துக்களுக் கெல்லாம் சைவ சமயமே நேரிதின் உரிமைத் தொடர்புடையதாகும். இதனை நோக்க அடுத்துள்ள ஏனைய பிற எல்லாம் ஒப்பியல் முறையில் அயலவர்க்கு உரியனவும், அண்மையில் தோன்றியனவுமே எனலாம். சமய ஆராய்ச்சித் துறையிலும், கொள்கை வாழ்க்கை என்பனவற்றின் வெளிப்பாட்டு முறையிலும், மிக மிகச் சிறந்த தொன்றுகத் தென்னிந்தியா பெற்றிருப்பது சைவ சித்தாந்தமே யாகும். அதன் உண்மைச் சிறப் பியல்புகளை உள்ளவாறு உணரின், இந்திய தேசம் எங்கணும் பரவியுள்ள மக்களெல் லோருடைய வாழ்க்கை நெறிப் போக்கின் மாண்பை யுணர்த்தும் அறிகுறியாக விளங்குகின்றது சைவ சித்தாந்தம் எனத் துணிந்து கூறுதல் இழுக்காகாது"*

முடிவுரை:

இத்தகைய அரும் பெரும் சைவசித்தாந்த தத்துவ ஞானத்தினைப் பரப்பியருளிய வித்தகர் களுள் ஒருவராக விளங்குப் ஸ்ரீ அருள் நந்தி சிவாசாரிய சுவாமிகளின் அருமையும் பெருமை யும் அளப் பரியன. அவரால் இயற்றப் பெற் றுள்ள 'சிவஞான சித்தியார்' என்னும் செந் தமிழ்த் தத்துவஞான நூலின் சிறப்பும், ஒப்புயர்வற்றது. "ஷேக்ஸ்பியரின் நூல்களை யான் படித்தல் இயலும். அவற்றின் ஆழ்ந்த பொருள் நலங்களை ஓரளவு புரிந்து கொள்ள வல்ல நிலையிலும், யான் இருக்கின்றேன். மன நிறைவு கொள்ள எனக்கு நல்ல காரணம் உள்ளது. கடவுளுக்கு நன்றி"* என்று ஜான் கீட்ஸ் (John Keats) என்னும் ஆங்கிலப் புலவர் கூறுமாறுபோல, நாமும் தத்துவஞான வித்தகர் ஆகிய ஸ்ரீஅருள் நந்தி சிவாச்சாரியர் இயற்றிய சிவஞான சித்தியார் என்னும் சிறந்த செந் தமிழ் ஞான நூலைப் பயிலவும், அதன் பொருளை ஓரளவேனும் உணர்ந்து கொள்ளவும் முய லுதல், தமிழ் நாட்டில் தமிழ் மக்களாகப் பிறந்த நாம் அனைவரும் பெறுதற்குரிய சிறந்த பேறு களுள் ஒன்ருகும். அதனைப் பெற விரும்பி, நாம் அனைவரும் இறைவன் திருவருளை வழுத்துவோமாக!

தத்துவ ஞானநல
வித்தகர் தாம்எனவே
இத்தமிழ் நாட்டில்
இலங்கியசீர்—மெய்த்தவராம்
நல்லஅருள் நந்திசிவம்
செய்தசிவ ஞானசித்திக்
கில்லை,ஒரு நூலும் இணை.

—ஆசிரியர்.

[கோவை-பேரூர்ப் பட்டீச்சுரப் பெருமான் கோயிற் பங்குனி யுத்திரப் பெருவிழாவிலும் (26-3-64), பூவாளூர்ச் சைவ சித்தாந்த சபை யின் 54 ஆம் ஆண்டு விழாவிலும் (3-5-64), ஆற்றிய சொற்பொழிவுகளைத் தழுவியது.]

—ஆசிரியர்.

---

* "There is no school of thought and no system of faith or worship that comes to us with anything like the claims of the Saiva Siddhantha. The system possesses the merits of great antiquity. In the religious world the Saiva system is the heir to all that is most ancient in South India. It is the religion of the Tamil people, by the side of which every other form is of comparatively foreign and recent origin. As a system of religious thought, as an expression of faith and life, the Saiva Siddhantha is by far the best that South India possesses. Indeed, it would not be rash to include the whole of India and to maintain that judged by its intrinsic merits, the Saiva Siddhantha represents the high water-mark of Indian life..."

—The Rev. Mr. W. Goudie.

* "I have good reason to be content for, thank God, I can read and perhaps understand Shakespeare to his depths."

—John Keats.

★

ஸ்ரீராமகிருஷ்ண குடிலில் சிறுவரைச் சேர்த்தல்

தமிழ் நாட்டிலுள்ள திக்கற்ற சிறுவர்களுக்காகவே இந்தத் தர்ம ஸ்தாபனம் சேவை செய்து வருகிறது. ஜாதி, மதம், கட்சி பேதமின்றித் தாய் தந்தை இருவருமே யில்லாத திக்கற்ற ஏழைச் சிறுவர்களை மட்டும் 5 வயது முதல் 10 வயது வரை எடுத்துக் கொள்ளப்படுகிறது. அவர்களுக்காகவே ஆரம்பக் கல்வி முதல் உயர் நிலைக் கல்வி வரையில் ஆதாரப் பள்ளிகளும், பலவகைத் தொழிற் பிரிவுகளும் இங்கு நடத்தப் பெற்று வருகிறது. அவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடவசதி, கல்வி, தொழிற் பயிற்சி ஆகிய அத்தியாவசியத் தேவைகள் அனைத்தும் முற்றும் இலவசமாகவே ஹைஸ்கூல் படிப்பு முடியும் வரையில் அளிக்கப் படுகிறது.

இது சமயம் தமிழ் நாட்டின் பத்து மாவட்டங்களிலிருந்தும் வந்து சேர்ந்துள்ள சிறுவர்கள் சுமார் 300 பேர் வித்யாலயம், குருகுலத்தில் புகலிடம் பெற்று வாழ்ந்து வருகிறார்கள். மேலும் அத்தகைய நிலையிலுள்ள சிறுவர்கள் எத்தனை பேர் நாட்டில் இருப்பினும் அவர்களுக்கெல்லாம் புகலிடம் அளிப்பதே ஸ்தாபனத்தின் லட்சியம். இங்கு வருஷத்தில் எந்தக் காலத்திலுமே சிறுவர்களை எடுத்துக் கொண்டு தான் வருகிறோம். ஆனால் விசேஷமாக ஜுன் மாதந்தான் குழந்தைகளைச் சேர்க்கும் காலம் என்று பெரும்பாலோர் கருதிக் கொண்டு இருக்கிறார்கள். ஷை நிலையிலுள்ள சிறுவர்களை இங்குச் சேர்க்க விரும்புவோர் இப்பொழுதிலிருந்தே முயற்சியெடுத்துக் கொள்வது நலமாகும். முழு விவரம் வேண்டுவோர் முதலில் கடிதம் எழுதி, அதற்குரிய அச்சுப் பாரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண குடில்,
திருப்பராய்த்துறை,
திருச்சிராப்பள்ளி.

பிட்சாடன மூர்த்தம்

முன்னுரை :

சிவபெருமான் தன்னை வழிபடும் அன்பர்களுக்கு அருள்புரிதற் பொருட்டு, அவ்வப் பொழுது மேற்கொண்ட அருளுருவத் திருமேனிகள் இருபத்தைந்து என்றும், அறுபத்து நான்கு என்றும் நூல்கள் நுவலும். அவற்றுள் பிட்சாடன மூர்த்தம் என்பதும் ஒன்றாகும்.

பிட்சாடனர் ஓவியம்

வரலாறு :

முன்னொரு காலத்தில் தாருகாவனத்தில் இருந்த முனிவர்கள் யாவரும் சிவபெருமானிடத்தில் அன்பு இல்லாதவர்களாய், வேள்வி முதலிய கருமங்கள் தாமே, தமக்கு வீடு பேற்றை அளிக்க வல்லனவாகும் என்னும் கொள்கையை மேற்கொண்டு, கடவுளுணர்ச்சியைக் கைவிட்டுச் செருக்குற்று நின்றனர். அந்நிலையில் அவர்களின் தற்போதச் செருக்கையகற்றி, நற்போதம் அளித்து நல்வழிப்படுத்த நினைந்தார் சிவபெருமான்! மகாவிஷ்ணுவை அழகிற் சிறந்த மோகினி வடிவம் எடுத்துக் கொண்டு, தம்முடன் வரப் பணித்தார். அழகெலாம் ஒருங்கே திரண்டாலனைய பிட்சாடன மூர்த்தியாகத் தாம் திருவுருவம் தாங்கினார். இருவருமாகத் தாருகாவனம் சென்று, அங்கு இருந்த முனிவர்களுக்கும் முனிபத்தினிமார்களுக்கும், அவர்களின் செருக்கு அடங்கும் வண்ணம், மையல் ஊட்டி மாழ்கச் செய்து, பின்னர் மெய்யுணர்வு நல்கி ஆட் கொண்டு அருள்புரிந்தார். இவ் வரலாற்றினைக் கந்த புராணம் 'ததீசியுத்தரப் படலம்' விரிவாக விளக்குதல் காணலாம்.

திருவுருவ அமைப்பு :

பிட்சாடன மூர்த்தி, கங்காள மூர்த்தி, பயிரவ மூர்த்தி ஆகிய மூர்த்திகளின் திருவுருவ அமைப்புக்கள், பெரும்பாலும் ஒத்திருக்கும். கூர்ந்து நோக்கினால் மட்டுமே வேறுபாடு அறிந்து கொள்ளுதல் இயலும்.

பிட்சாடன மூர்த்தம் ஆடையின்றி வெற்றரையாக இருக்கும். இடக்கையில் பிச்சைப் பாத்திரமும், வலக்கையில் தமருகம் அல்லது சூலமும் அமைந்திருக்கும். நான்கு திருக்கரங்கள் உண்டு. இடக்கால் தரையில் ஊன்றியிருக்கும். வலக்கால் நடப்பதற்கு அடையாளமாகச் சற்று வளைந்து தளர்ந்திருக்கும். தலையில் ஜடாபாரம் (Dishevelled) அல்லது ஜடா மண்டலம் (Arranged in the form of a circle) இருக்கக் காணலாம். இடுப்பில் பாம்பு ஒன்று சுற்றியிருந்து அணி செய்யும். "அற்றம் மறைப்பது முன் பணியே" என்பது தேவாரம். அதன்படி, அப்பாம்பே அற்றம் (மறைவிடம்) தோன்றாதபடி அங்கு அழகுறுத்திக் கொண்டு விளங்கும். நெற்றியிற் பட்டம் திகழும். திரிநேத்திரம், நீலகண்டம் முதலிய சிறப்பியல்புகள் இத்திருவுருவத்

திற்கும் உண்டு. மார்பிற் பூணூல் ஒளிரும். வலக்காலில் வீரக்கழல் வயங்கும். திருவடிகளை வேதப் பாதுகைகள் தாங்கி நிற்கும். கபாலம் அல்லது பிச்சைப் பாத்திரம் ஏந்திய கை, உந்தி (கொப்பூழ்) வரையில் உயர்ந்திருக்கும். தமருகம் (உடுக்கை) ஏந்திய வலக்கை, காது வரையில் ஓங்கிச் சென்றொளிரும். இந்நிலையிற் காதுக்கும் வலக்கையின் முன்னங்கைக்கும், 16 அங்குலம் தொலைவு இடைவெளி இருத்தல் வேண்டும் எனச் சிற்ப நூல்கள் கூறும்.

கபாலம் ஏந்திய இடப்பக்கப் பின்னங்கை கடக முத்திரை நிலையில் இருக்கும். வலப்பக்கம் ஒரு மானும், இடப்பக்கம் ஒரு குறட்பூதமும், பிட்சாடன மூர்த்தத்தின் சிற்பங்களில் அமைந்திருக்கக் காணலாம்.

"அடியிற் றொடுத்த பாதுகையும்
அசைந்த நடையும் இசைமிடறும்
வடியிற் சிறப்ப நடந்தருளி
மூழை ஏந்தி மருங்கணைந்த
தொடியிற் பொலிதோள் முனிமகளிர்
சுரமங் கையரை மயல்பூட்டிப்
படியிட் டெழுதாப் பேரழகாற்
பலிதேர் பகவன் திருவுருவம்"

எனப் பிட்சாடன மூர்த்தத்தின் பேரழகினையும் சிறப்பினையும் வியந்து, சிவஞான சுவாமிகள் திறந்தெரிந்து பாடியருளி யுள்ளார்.

திருவெண்காட்டில் அமைந்து திகழும் செப்புப் படிமமும் (Bronze statue), கும்பகோணம் நாகேசுவர சுவாமி கோயிலிலுள்ள ஒரு சிற்பமும் (Stone figure), பிட்சாடனத் திருவுருவங்களில் மிகவும் கலை நலம் பெற்றுத் திகழ்கின்றன என்பர். மாயூரம் வட்டத்தைச் சேர்ந்த வழுவூர்ப் பிட்சாடனர் திருவுருவமும் மிகவும் அழகு வாய்ந்து மிளிர்வதாகும். இன்னோரன்ன எழில்மிக்க சிற்பங்கள் எத்தனையோ பல பிறவும் உண்டு.

தத்துவ நுண்பொருள்கள் :

(1) எல்லாம் வல்ல இறைவன் ஆகிய சிவபெருமான், பிச்சைக்கலன் ஏந்திப் பிச்சையேற்கும் பிட்சாடன மூர்த்தியாக விளங்குவது பற்றி, ஒரு சிலர் ஏதேனும் தவறாகக் கருதலாம். ஆனால் அங்ஙனம் இன்றி, அருமை பெருமைகள் மிக்க இறைவன், தன்னுடைய எளிமைத் தன்மை இனிது விளங்கும்படியாகத் திகழும் நிலையே, பிட்சாடன மூர்த்தம் என்பது அறிதற்குரியது. "அருமையில் எளிய அழகே போற்றி" என்றார் மாணிக்க வாசகனார். அம்முறையில், பிட்சாடனத் திருவுருவம், அருமை-எளிமை-அழகு என்னும் மூன்றும் ஒருங்கே அமைந்து ஒளிர்கின்றது என்னலாம்!

பிட்சாடனர்,
ஸ்ரீ காமேசுவரர் கோயில்.

(2) பிட்சாடனப் பெருமான் நம்மிடம் பொன்னும் பொருளும் கேட்கின்றிலர்; நம்முடைய அன்பையும் நன்றியையுமே அவர் பெற விரும்புகின்றார்.

வெள்ளைநிற மல்லிகையோ ?
வேறெந்த மாமலரோ ?
வள்ளற் பிரானார்க்கு
வாய்த்த மலர்எதுவோ ?
வெள்ளைநிற மல்லியல்ல,
வேறெந்த மலருமல்ல,
உள்ளக் கமலம்அடி
உத்தமனார் வேண்டுவது !

பிட்சாடனர்,
திருவையாறு.

எனச் சுவாமி விபுலானந்தர் அவர்கள் பாடுவது போல, நம்முடைய உள்ளம் ஒன்றினையே, இறைவன் தாம் பெற விரும்புகின்றார்.

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னை" என்றாற் போல, நம்முடைய குற்றங்களையெல்லாம் தாம் பெற்றுக் கொண்டு, தம்முடைய குணங்களை யெல்லாம் இறைவன் நமக்குத் தந்தருள விரும்பும் திருக்கோலமே, பிட்சாடன மூர்த்தம் என்றும் கூறலாம்.

(3) ஒரு சிறந்த ஆசிரியன், அறிவற்ற மற்றையோர்க்கு அறிவுடைய தான் கற்றுத்தருவதாகப் புலப்படுத்தாமல், தானே மற்றையர்கள்பால் இருந்து கற்றுக் கொள்வது போலக் காட்டிக் கொண்டு அவ்வாற்றால் நயம்படக் கற்பிப்பான்; ஒரு சிறந்த வள்ளல், வறியவர்களுக்குத் தான் வாரி வழங்குவது புலனாகாவண்ணம் அடக்கமாக விளங்கி, அவர்களிடமிருந்து தானே ஏதோ ஒன்றைப் பெற்றுக் கொள்வதுபோல இன்னுரைகள் இயம்பி, அவ்வகையால் அரிய உதவிகள் புரிவான்; அத்தகைய சிறந்த முறையில், நமக்கெல்லாம் எல்லா வகை நலங்களையும் ஒருசேர அளித்தருளும் பெருங்கொடையாளனாகத் திகழும் சிவபிரான், தானே நம்மிடம் இருந்து ஏதோ ஒன்றைப் பெற விரும்பும் ஓர் இரவலன் போல, இனிய தொரு நாடகம் நடித்து, அவ்வழியாகவேனும் நம்மையெல்லாம் ஆட்கொண்டருள வேண்டும் என விரும்பி எளிவந்து எழுந்தருளும் பேரருள் நிலையே, பிட்சாடன மூர்த்தம் எனலாம்.

(4) "இரவலர்கள் (Beggars) என்றால், நாம் ஏதோ இழிவாகக் கருதுகின்றோம். இரவலர்கள் போன்ற வள்ளல்கள் (Maecenas) எவரும் இலர். இரப்பவர்கள் இருப்பதனால்தான், கொடுக்க முடிகின்றது. கொடையளிப்பதனால் தான் நாம் இம்மையிற் புகழும், மறுமையில் வீடு பேறும் அடைகின்றோம். அழிந்து போகும் பொருள் சிறிதளவைப் பெற்றுக் கொண்டு, அழியாத புகழையும் அரும்பெறல் வீடுபேற்றையும் நமக்குக் கொடுக்கின்ற இரவலர்கள்தான், உள்ளபடி நோக்கினால், வள்ளல்களாக விளங்குகின்றார்கள்."

பரப்புநீர் வையத்துப்
பல்லுயிர்கட்கு எல்லாம்
இரப்பாரின் வள்ளல்கள்
இல்லை—இரப்பவரே
இம்மைப் புகழும்
இனிச்செல் கதிப்பயனும்
நம்மைத் தலைப்படுத்த லால்!

—அறநெறிச் சாரம்

என முனைப்பாடியார் என்னும் புலவர் அழகுறப் பாடியருள்கின்றார். அம்முறையில் நோக்கினும் பிட்சாடன மூர்த்தத்தின் பெருமையும் சிறப்பும் வெளிப்படும்.

திருமூலர் :

இக் கருத்தினையே ஆசிரியர் திருமூலர் பெருமானும், தமது திருமந்திரநூற் பாடல் ஒன்றிற் செவ்விதிற் குறிப்பிடுகின்றார். "எல்லா உலகும் படைத்த இறைவனை ஒரு சிலர் இரந்துணி (பிச்சைக்காரன்) என்று கூறி இகழுகின்றனர். இறைவன் எதற்காக இரக்கப் போகின்றான்? தான் இரப்புத் தொழிலை மேற்கொள்வதன் மூலம், அவனுக்கு நாம் ஈயப்பெறும் வாய்ப்பை நமக்கு அவன் உண்டாக்கிக் கொடுத்து, அதன்வாயிலாக, நாம் அவனுடைய எட்டாத திருவடிகளை எட்டிப் பிடித்துக் கொள்ளும்படி இன்னருள் புரிகின்றான்" என்கின்றார் திருமூலர்!

பரந்துல கேழும் படைத்த பிரானை
இரந்துணி என்பர்கள் எற்றுக்கு இரக்கும்
நிரந்தர மாக நினையும் அடியார்
இரந்துண்டு தன்கழல் எட்டச்செய் தானே

—திருமந்திரம்

மாணிக்க வாசகர் :

"எங்கள் சிவபிரானைக் கூத்தாடி, பிச்சை எடுப்பவன் என்று எளிதாகக் கருதிவிடாதீர்கள்! வேதங்களே தன்னை அறிய முடியாமல், 'எம்பெருமான்! ஈசா!' என்று ஏத்தி வழுத்தும் மாட்சி மிக்கவன் எங்கள் இறைவன்" என அறிவுறுத்துகின்றார் மணிவாசகர்!

அம்பலத்தே கூத்தாடி
அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையும் தேவன்என்று
நண்ணுமது என்னேடி!
நம்பனையும் ஆமாகேள்
நான்மறைகள் தாம்அறியா
எம்பெருமான் ஈசாஎன்
றேத்தினகாண் சாழலோ!

—திருச் சாழல்



பிட்சாடனர்,
திருவிசயநல்லூர்.

பிட்சாடன நவமணிமாலை :

பிட்சாடன மூர்த்தத் திருவுருவின் சிறப்பினை, மிகவும் வியந்து விளக்கித் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பிட்சாடன நவமணிமாலை என்னும் பெயரில், ஓர் அழகிய சிறு நூல் இயற்றியிருக்கின்றார். அதன்கண் வரும் ஒரு சில பாடல்களின் பொருளை மட்டும், நாம் ஈண்டுக் கண்டு அமைதல் பொருந்தும்.

(1) "நம்முடைய குற்றங்களை யெல்லாம் தீர்த்தருள்கின்ற பழமலைநாதர் (விருத்தாசலேசுவரர்), பிட்சாடன மூர்த்தம் கொண்டு, திருவீதி யுலாப் போந்தார். அப்போது அவருக்குப் பிச்சையிட வந்த பெண், அவர்தம் பேரழகைக் கண்டு, தன்னையும் மறந்த நிலையில் தன் மெல்லிய துகிலை இழந்து நின்றாள். அது கண்ட பெருமான், 'அந்தோ! ஆடையை இழந்து வெறும் இடுப்புடன் இங்கு வந்து விட்டாயே! இது என்ன?' என்றார். அதற்கு அவள் 'இவ்வுலகில் தங்கள் குற்றத்தைப் பார்ப்பவர்கள் இருக்கின்றார்களா? நான் வெற்றரையுடன் இருப்பதாகக் கூறுகின்றீரா? நீரும் தானே ஆடையின்றிப் பிச்சை ஏற்க வந்துவிட்டீர்' என்று எதிர்வினவித் தலைகுனிந்து நின்றாள்.

நங்குற்றம் தீர்க்கும் பழமலை
நாதர்க்கு நற்பலிகொண்டு
அங்குற்று மென்துகில் போக்கினள்.
'வெற்றரை யாகி, அந்தோ!
இங்குற் றனை'என எம்பெருமான்,
இவ்விரு நிலத்தில்
தங்குற்றம் பார்க்குமவர் உளரோ?
எனத் தாழ்ந்தனளே.

[தாழ்ந்தனள்—தலைகுனிந்து நின்றாள்; வணங்கினாள்; பிரிவதற்கு மனமின்றி அங்கேயே தங்கிக் காலந் தாழ்த்து நின்றாள்.]

(2) பிட்சாடன மூர்த்தி, பிச்சை ஏற்பதற்காகத் திருவீதியுலாப் போதர, அவரை ஒரு பெண் 'நீர் உம்முடைய பிச்சைப் பாத்திரத்தைத் தலைகீழாகப் பிடித்திருக்கின்றீரே! இதற்கு முன்பு நீர் எப்போதேனும் பிச்சை எடுத்து அறிந்ததில்லையோ?' என்று வினவி



ஸ்ரீ பிட்சாடனர் திருவுருவம்,

வழுவூர், மாயூரம் வட்டம்.

பிட்சாடனர்,
திருவாஞ்சியம்.

பிட்சாடனர்,
மேலப் பெரும்பள்ளம்.

னாள். அதற்கு அவர், பெண்ணே! நீ தரையிற் சிந்திச் சிதறும்படி பிச்சையிட்டனையே! இதற்கு முன்பு எந்தப் பாத்திரத்திலும் நீ பிச்சையிட்டு அறிந்ததில்லை போலும்!' என்று கூறி ஏளனம் செய்தார்.

இப்பாத் திரம்தலை கீழாப்
பிடித்தனை என்னை? முனம்
தப்பாப் பலிகொண் டறிந்திலையோ?
எனத் தாழ்குலாள்,
'செப்பார் பணைமுலையாய்! நிலத்தே
பலி சிந்தியிட்டாய்!
எப்பாத் திரத்திலும் இட்டறி
யாய்கொல் முன்? என்றனரே.



பிட்சாடனர்,
திருவிடைமருதூர்.

(3) திருமுதுகுன்ற நாதர் பிட்சாடனராகப் போதர, அவர்க்குப் பிச்சையிட வந்த ஒரு பெண், அவரைப் பெரிதும் விரும்பி, மிகவும் கைதாழ்த்துத் தான் கொணர்ந்த சோற்றைப் பிச்சைப் பாத்திரத்தில் இட்டாள். அப்போது அவர், 'என்னுடைய பிச்சை ஓட்டினை நீ தொடலாமோ? என்றார். 'ஓட்டினை என்ன? உம்மையும் கூடத்தான் வீட்டிற்குள் வந்தால் யான் தொடலாம்' என்றாள். அப்போது அவர், 'இஃது உனக்கு வேண்டும் போலும்! ஆட்டின் பாலைப் பருகலாம் என்றால் அதற்கு மூலம் ஆகிய இறைச்சியும் கூட எமக்கு விருப்பம்தான் என்பதுபோல அன்றோ, நின் பேச்சு இருக்கின்றது' என்று கூறினார்.

வேட்டணம் மாதுகை தாழ்த்திட
மாமுது வெற்பர், பலி
ஓட்டினை நீதொட லாமோ என,
உமையும் தொடலாம்
வீட்டினில் யான்எனவே, அவர்தாம்
இதுவேண் டுவைகொல்?
யாட்டினின் பால்என மூலமுமாம்
என்பது என்றனரே.

[வீடு—இல்லத்தையும், வீடு பேற்றையும் குறிக்கும் சிலேடை. வீட்டிற்குள் வந்தால் உம்மைத் தொட்டு அணைத்து யான் மகிழ்வேன் எனக் காதற்பொருளும், வீடுபேற்று நிலையில் உயிராகிய யான் சிவமாகிய நும்மோடு ஒன்றித் தொடர்பு கொண்டு இன்புறலாம் எனத் தத்துவநூற் பொருளும் இதன்கண் ஒருங்கே அமைந்துள்ளன.]

(4) திருமுதுகுன்ற நாதர், பிட்சாடனர் வடிவம் கொண்டு வந்தபோது ஒரு பெண், 'தேவர்களும் தொழும் நும்முடைய பலிப் பாத்திரத்தினை நீர்தான் வனைந்தீரா? இவ்வளவு அழகாக உள்ளதே!' என்று வினவினாள். அதற்கு அவர், சக்கரம் சுழற்றத்தகுந்த குயத்தியே! ஆமாம் யான் உண்மையிலேயே ஒரு குயவன் தான் என்று மறுமொழி கூறினார். அதற்கு அவள் 'நானே ஒரு சிற்றிடைச்சி' என்று சொல்லினாள்.

வானோர் தொழும்நின் பலிப்பாத்
திரத்தை வனைந்தது நீ
தானோ எனச், சக்கரந்தான்
சுழற்றத் தகும்குயத்தி!
யான்ஓர் குயவன்மெய் என்றே
முதுகுன் றிறை இயம்ப,
நானோ ஒருசிற் றிடைச்சி
என்றாள். அந் நறுநுதலே!

திருக்கோயில் வழிபாட்டு முறை-5

திரு ம. வெ. மு. நாகராஜ குருக்கள், சிறுதையூர், லால்குடி.

அர்ச்சனை வயலுள் அன்புவித் திட்டுந்
தொண்ட வுழவர் ஆரத் தந்த
அண்டத் தரும்பெறல் மேகன் வாழ்க !

என்று வாழ்த்தி வணங்கினர் மாணிக்க வாசகர். சிவபெருமானிடம் பற்றுள்ளம் கொண்ட நன்மக்கள் தம் அன்பை இறைவனிடம் தெரிவிப்பதற்கு அர்ச்சனை சாதனமாக உள்ளது. அர்ச்சனை—பூசை—யஜனம்—ஆராதனம்—ஆகிய சொற்கள் கோயில் வழிபாட்டைக் குறிப்பன. சிவாகமம் வழிபாட்டுக் கிரியைகளையும் - அர்ச்சனைக்கு வேண்டிய பொருள்களையும் அர்ச்சனை விதிப்படலம்—அர்ச்சனாங்க விதிப்படலம் என்ற பகுதிகளிலேயே தெரிவித்துள்ளது. எனவே அர்ச்சனை என்ற சொல் இங்கு ஆலய வழிபாட்டுக் கிரியை (சடங்கு)களைக் குறிப்பதாகும்.

வழிபாட்டுக் கிரியைகளெல்லாம் அன்பின் செயல்களாகும். உயிரும் உடலும் போன்றது அன்பும் அர்ச்சனையும். கண்ணப்பரின் ஒப்பற்ற அன்பும் அவர் செய்த பூஜையினாலேயே வெளிப்படுகின்றது. மக்கள் மனத்தகத்து அடங்கியுள்ள அன்பு வெளிப்படுவதற்கு இந்திரியங்களே வாயிலாக அமைந்துள்ளன. நன்மக்கள் தம் தாய் தந்தையரிடம் உரிமை பாராட்டி அன்பு செலுத்துவதுபோல் அகத்திலுள்ள அன்பை இந்திரியங்களால் வெளியிட்டு நாள் தோறும் சிவபெருமானை வழிபாடு செய்ய வேண்டும். இவ்வாறு செய்யப்பெறும் வழிபாட்டுச் செயல்கள் சத்புத்திரமார்க்கம் எனவும் கிரியை என்றுங் கூறப்படும். சத்புத்திர மார்க்கம்—நன்மக்கள் நெறி.

[சக்கரம்-குயவனின் சக்கரம்; கண் ஆகிய வேல் (சக்கு+அரம்). குயத்தி-குயவனின் மனைவி; குயம் (தனம்) ஆகிய உறுப்பை உடையவள். உலகம் ஆகிய குடங்களையெல்லாம் படைத்துக் காப்பவன் ஆதலின் இறைவன் குயவன் எனப்படுவான். "தேரின்மண் மாயை யாகத் திரிகைதன் சத்தியாக ஆரியன் குலாலனாய் நின்று ஆக்குவன் அகிலமெல்லாம்" என்பது சிவஞான சித்தியார். சிற்றிடைச்சி - சிறிய இடையினை யுடையவள், இளம்பருவப் பெண்; எளிய இடையர் குலத்தைச் சேர்ந்தவள். உயிர் சிவத்தைச் சேர்ந்து இன்புறுதற்குரியது என்பதும், ஆயினும் சிவனுக்கும் சீவனுக்கும் உள்ள இடையீடு மிகப் பெரிது ஆகும் என்பதும் இதன் தத்துவப் பொருள்.]

முடிவுரை :

இங்ஙனம் சுவை மிகுந்த சிறந்த பாடல்கள் பல, பிட்சாடன மூர்த்தத்தினைக் குறித்துத் திருமுறைகளிலும், சிறு பிரபந்த வகைகளிலும் வருதல் காணலாம். அவற்றால், பிட்சாடனரின் பெருமை இனிது புலனாகும்.

"பம்பா தரவிற் கடிஞைகொளும்
பயிக்க வேடத் தரைப் பரசில்

கொம்பே ரிடையார் கரம்நெரிப்பக்
கொள்ளும் போகம் வெறுப்பிப்பர்"

எனக் கவிராட்சசர் ஆகிய கச்சியப்ப முனிவர் பாடியிருத்தல் போல, இப் பிட்சாடனப் பெருமானை வழிபடுதலின் மூலம், உலகியல் இன்பச் சுழல்களிற் சிக்குண்டு கலங்கி மயங்கித் தியங்காமல், அவற்றை வெறுத் தொதுக்கி வென்றடக்கி நலம் பெற்றுய்யலாம் என்பதில் ஐயமில்லை.

—ஆசிரியர்.

ஆராய்ந்த கிரியை

பூசித்தல் என்பது சத்புத்திர மார்க்கத்தின் முக்கிய செயலாகும். எவ்வாறு பூசிப்பது என்ற வினு எழும்போது அதற்குரிய கிரியைகளையும் வழிபாட்டிற்கு வேண்டிய பொருள்களையும் சிவாகமம் விதந்து கூறுகின்றது. அர்ச்சனை என்ற ஆலய வழிபாடு அன்பின் செயல்களே யாயினும் அச்சடங்குகளும் அறிவு ஆராய்ச்சிக்குப் பொருந்துவதாக இருத்தல் வேண்டும். மனம் போனபடி செய்கின்ற செயல்களைச் சமய அறிவுடையோர் வழிபாடாகக் கருதமாட்டார்கள். அர்ச்சனை அல்லது சமயக் கிரியைகள் திருக்கோயில்களில் தவறில்லாது நடைபெற ஆராய்ந்த செயல்கள் வேண்டும்.

"ஆய்ந்தகிரியையோர் அர்ச்சனை தப்பாதோர்" என்பர் திருமூலரடிகள்.

சமயச் சடங்குகளிலும் வழிபாட்டுக் கிரியைகளிலும் சிறந்த சித்தாந்தக் கருத்துகள் அடங்கியுள்ளன. தத்துவ வுணர்வும் இடையருத பக்தியும் ஆலய பூஜை செய்பவர்க்கு அவசியம் வேண்டும். உலகியல் அறிவையும் ஆராய்ச்சியையும் கொண்டு ஐம்புல மயமான உலக இன்பங்களை மக்கள் அனைவரும் அனுபவித்து வாழ்வதற்குச் சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதே போன்று நன்மக்கள் ஐம்புல ஆசைகளுக்கு அடிமைப்பட்டு மனக் கவலைகளில் மூழ்கிவிடாமல், எண்ணங்களுக்கு இருப்பிடமான மனத்தைச் சிவன்பால் செலுத்திச் சிவசிந்தனை மாருது தம் அறிவு-பொருள் - உழைப்பு ஆகிய இவற்றைச் சிவ நெறியில் செலவிட்டு மனச் சாந்தியுடன் தூய வாழ்க்கை வாழ்வதற்குச் சமயக் கிரியைகளும் ஆலய வழிபாடும் நன்கு அமைந்துள்ளன. சைவ சித்தாந்தக் கொள்கையின் அடிப்படையில் சிவாலய பூஜைகள் வகுக்கப்பட்டுள்ளதாக சிவாகமம் அருளுகின்றது.

"ப்ரதிஷ்டாப்பிய விதானஞ்ஞு :
சைவசித்தாந்த மார்க்கத :||

பூஜிதம்லிங்க பேரஞ்ச
பரார்த்தமிதி கீர்த்திதம்||

—காரணுகமம்.

இதன் கருத்து :—சைவ சித்தாந்த நெறிப்படி நெறிமுறை அறிந்தவர்களால் லிங்கமும் திருவுருவமும் பிரதிஷ்டை செய்யப்பட்டுப் பூஜை நடந்துவரும் ஆலய வழிபாடு "பரார்த்தம்" என்று சொல்லப்படும்.

'பரார்த்தம்' என்ருல் 'மேலான பொருளுடையது' என்று கருத்து. எனவே சிவாலய வழிபாட்டுக் கிரியைகள் சைவ சித்தாந்த நெறியில் நடைபெற வேண்டும் என்பது அறியத்தக்கது.

தத்துவப்பொருள்

ஞான வாழ்க்கையில் நாட்டங் கொண்டு சிவபெருமானை அடைய வேண்டும் என்ற அவா மிக்கோர்க்கு 1. வேதாந்தம்—2. சித்தாந்தம் — 3. நாதாந்தம்—4. போதாந்தம் — 5. யோகாந்தம்—6. கலாந்தம் ஆகிய ஆறு வகை முடிவுகள் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் சித்தாந்தம் என்ற கொள்கையின்படி சைவ சமயச் சடங்குகளும் வழிபாட்டுக் கிரியைகளும் இயற்றப் பட்டுள்ளன. சித்தாந்தம் என்பது பற்றித் தமிழாகமம் கூறுவதாவது :—

"நித்தம் பரனே டுயிருற்று நீள்மனஞ்
சத்த முதல்ஐந்துந் தத்துவத்தால் நீங்கிச்
சுத்த மசுத்தந் தொடரா வகைநினைந்து
அத்தன் பரன்பால் அடைதல்சித் தாந்தமே.

—திருமந்திரம் 2373

எப்போதும் ஆன்மா சிவசம்பந்த முற்றிருக்க வேண்டும். சத்தம்—ஸ்பரிசம்—ரூபம்—ரசம்—கந்தம் என்ற ஐம்புலன்களும் மெய் யுணர்வால் மனம்விட்டு நீங்கிச் சுத்தம் (நல்வினை) அசுத்தம் (தீவினை) ஆன்மாவைத் தொடராத வகையில், சிவபெருமானை நினைந்து முடிவில் பரசிவத்தை ஆன்மா அடைவதே சித்தாந்தமாம்.

திருவள்ளுவரும் சத்தம் முதலிய போக விஷயங்களுக்குக் கட்டுப்படாமல் பொய் தீர்ந்த ஒழுக்க நெறியில் நிற்பவர்தாம் நீடு வாழ்வார் என்று கடவுள் வாழ்த்தில் அருளியுள்ளார்.

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்
தீர்ஒழுக்க
நெறிநின்ருர் நீடுவாழ் வார்."

என்பது திருவள்ளுவர் காட்டிய நெறி.

சிவபோக வாழ்க்கை

மண்ணுலகில் பிறந்த எவரும் சுவை முத லிய ஐம்புலன்களையும் நுகராமல் வாழ இய லாது. இந்திரியங்களின் வயப்பட்டுச் சுவை-ஒளி-ஊறு-ஓசை - நாற்றம் ஆகிய ஐம்புலன் களிற் செல்லும் மன நிகழ்ச்சியை யடக்கி அம் மனத்தில் சிவ சிந்தனையைத் தோற்றுவித்து, ஐம்பொறிகளால் நுகரும் சத்தம் - ஸ்பரிசம் - ரூபம் - ரசம் - கந்தம் ஆகிய தன்மாத்திரை களைச் சிவமயமாக உணர்ந்து ஆன்மா சிவனடி சேர்வதற்கேற்ற வண்ணம் சிவாலய பூஜைக் கிரியைகள் அமைந்துள்ளன.

மண்ணுலக போகங்களை மக்கள் அனுப விப்பதற்கு மனம் - மெய் - வாய் - கண் - மூக்கு செவி ஆகிய கருவி கரணங்கள் சிறந்து விளங்குகின்றன. சிவநெறி செல்பவர்கள் சிவ பெருமானிடம் இடையருத அன்பு கொண்டு தம் எண்ணம் - மெய் - வாய் . கண்-மூக்கு-செவி இவற்ருல் உணரும் உணர்வைச் சிவபோகம் அனுபவிப்பதற்குச் சிவாலயமே சிவபுரமாக விளங்குகின்றது.

சிவபக்தியிற் சிறந்து சிவமாகவே விளங் கும் மாணிக்கவாசக சுவாமிகள் தம் அறிவு-இச்சை-செயல்களைத் திருக்கோயிற் பணிகளில் செலவிட்டு அன்புப் பிழம்பாய் சிவபோக வாழ்க்கை வாழ்ந்தவர் என்பதை அவர் தம் திருவாசகங்கள் தெரிவித்துள்ளன.

திருக்கோயில் பூஜா காரியங்களில் மன மும் ஞானேந்திரியங்களும் பெரிதும் ஈடுபடு கின்றன. சிவபெருமானைத் தியானம் செய்வ தற்கு மனமும் - வழிபாட்டுக் கிரியைகளைச் செய்வதற்கு உடலும் - தெய்வ வடிவங்களை அலங்கரித்துப் பார்ப்பதற்கும், 'திரிக்ஷணம்' என்ற கிரியை செய்வதற்கும் கண்களும் - சிவ நாம முழக்கங்களைக் கேட்பதற்குக் காதுகளும்-பிராணுயாமம் செய்ய மூக்கும் - சிவமந்திரங் களை யுச்சரிக்க வாயும் என இவ்வாறு எண் ணம் - உடல் - வாய் - மூக்கு - செவி - கண்-என்ற இவை சிவாலய வழிபாட்டுக் கிரியைகளிற் பயன்படுவதன் மூலம் சிவபெருமானுக்கே உரியனவாகின்றன.

மெய் வாய் கண் மூக்கு செவி என்ற ஞானேந்திரியங்களின் வாயிலாக உட்புகுந்து மனித மனத்தைக் கவலையில் ஆழ்த்தும் ஊறு-சுவை-ஒளி - நாற்றம் - ஓசை என்ற ஐம்புலன் களுக்கும் அடையாளப் பொருள்களாக - திரு மஞ்சனம் - வஸ்திரம் -சந்தனம் - பத்திரபுஷ்பங் கள்-திருவமுது-தீபம்-தூபம் - இன்னிசை வாத் திய முழக்கங்கள் முதலிய பஞ்ச பூதத் தொடர் புள்ளவை யெல்லாம், ஆலய வழிபாட்டுக் கிரியைகளின் வாயிலாகச் சிவபெருமானிடம் அன்புடன் அர்ப்பணம் செய்யப்படுகின்றன.

எனவே ஐம்பொறிகளின் வழியே ஐம்புல மயமான உலக நெறியிலே செல்லும் மன நிகழ்ச்சியை மாற்றி மனமும் - பொறி புலன் களும் கடவுளையே குறிக்கோளாகக் கொண்டு நன்மக்கள் சிவநெறியிலே செல்வதற்கு திருக் கோயில் வழிபாடுகளே பொய் தீர்ந்த ஒழுக்க நெறியாக விளங்குகின்றது.

"சிவாலய வழிபாட்டுச் சடங்குகளைத் தத் துவ உணர்வுடன் நோக்கும்போது நன்மக்கள் ஐம்புல இன்பங்களுக்கு அடிமைப்பட்டு மண் ணுலகிலே மயங்கி வாழாமல் தம் உள்ளம்-உடல் - கண் - காது - செவி ஆகிய ஞானேந் திரியங்களையும் இவற்ருல் அனுபவிப்பதற்குரிய ஐம்புலன்களையும் சிவபெருமான்பால் அன் புடன் அர்ப்பணித்து உயிர்-உள்ளம்-உடல் இம் மூன்றும் சிவமயமாக அன்புப் பிழம்பாய் மண் ணுலகிலிருந்து சிவ போகங்களை அனுபவிக் கும் முறையில் திருக்கோயில் வழிபாட்டுச் சடங்குகள் அமைந்துள்ளன என்றுங் கருதுதற் கிடமுண்டு.

இதுகாறுங் கூறியவாற்ருல், சிவாலய வழி பாட்டுக் கிரியைகள் அன்போடு செய்யப் படுவன வென்றும், சைவசித்தாந்த தத்துவப் பொருள் பொதிந்தவையென்றும், பூசைச் சடங்குகளைச் செய்வதின் மூலம் மனம்-உடல்-வாய்-கண்-மூக்கு-செவி என்ற நன்மக்களின் முக்கிய உறுப்புகள் சிவசம்பந்தம் பெறுகின் றனவென்றும், சுவை முதலிய ஐம்புலன் களுக்கும் அறிகுறியான பொருள்களை அன் புடன் ஆலய வழிபாட்டில் அர்ப்பணிப்பதால் ஐம்புல ஆசையிலிருந்து விடுபட்டு ஆன்மா பர சிவத்தை யடைந்து பேரின்பம் பெறப் பல வகைகளில் தகுதி பெறுகின்றது என்றும், இவ் வாறு சிவாலய வழிபாட்டுக் கிரியைகள் அமைந்துள்ள முறையின் சிறப்பு எடுத்துக் காட்டப் பெற்றது. ★

சூரியன்

திரு. K. R. இராஜகோபாலன், B.SC., (Hons.), கணித விரிவுரையாளர்,
கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்.

மனித சமுதாயத்தின் வளர்ச்சியில் எல்லா நாட்டினராலும், எல்லா மதத்தவ ராலும் வழிபடப்பட்டு வந்துள்ள தெய்வம் சூரியன்தான் என்று துணிந்து கூறலாம். மனிதனே அல்லாது மற்றெல்லா உயிர் கட்கும் உதவிபுரிந்து அவைகளின் நல் வாழ்வுக்கு மிகத் தேவையான பொருள் களை அளித்துக் காக்கும் ஞாயிற்றைப் போற்றித் தொழாத மக்கள் எவரும் இல்லை. இப்பொழுதும் - கடவுள் இல் லவே இல்லை; அவரைக் குறித்து ஒரு விழாவோ, பண்டிகையோ கொண்டாடு வது வீண் - என்று சொல்வோரும் கூட, ஞாயிறு வழிபாட்டை ஒத்துக் கொள்கி ருர்கள். பகவானை வணங்கா விடினும், பகலவனை வணங்குவார்கள்! இத்தகைய சிறப்புகள் வாய்ந்த சூரியனைப்பற்றிய பல கருத்துகள், அவருக்காகத் தனியே ஏற் பட்ட தலங்கள், சிற்பங்கள், அவரைக் குறித்த பாடல்கள் முதலியவற்றை இக் கட்டுரை சிறிது விளக்கும்.

சூரிய வழிபாடு மிகத் தொன்று தொட்டு வழக்கத்தில் உள்ள தொன்று. வேதத்திலுள்ள காயத்ரீ மந்திரமே சூரி யனைப் பற்றியதாகும். சந்த்யாவந்தனம் செய்வதும் ஒருவகைச் சூரிய வழிபாடு தான்; காலையில் இளஞ் சூரியனையும், நடுப்பகலில் உச்சிச்சூரியனையும், சாயரட் சையில் இறங்கும் சூரியனையும் வழிபடு தல் முறையாகும். ஸ்ரீமந் நாராயணனை ''சவித்ரு மண்டல மத்ய வர்த்தி''-சூரிய மண்டலத்தின் மத்தியில் இருப்பவர் என்று குறிப்பிடுவதுண்டு. புத்தர்களிடை யேயும் சூரிய வழிபாடுள்ளது - மூன்று முகங்களுடன் ஏழுபன்றிகள் தன்ரதத்தை இழுக்க, காலில்லாத தேரோட்டி பாக னுக அமர்ந்திருக்க, நின்ற திருக்கோலத் தில் வீற்றிருக்கும் அவர்களுடைய 'மரீசி' ஹிந்துக்களின் சூரியனே என்பது தெளிவு. நம் மரபின் படிக்கு ஆதவனின் தேருக்கு ஒரே ஒரு சக்கரம் கொண்ட ''மகரத்வஜம்'' என்ற தேரில் முடவனுன அருணனைத் தேர்ப்பாகனுகக் கொண்டு பவனி வருகிருர் சூரியன். இரண்டு கை களிலும் இரண்டு தாமரை மலர்களை வைத்திருப்பார்; **தண்டன் பிங்களன்** என்பவர்கள் இவருடைய துவார பாலகர் கள். தண்டன் என்பது ஸ்கந்தப் பெரு மானையும், பிங்களன் என்பது அக்னியை யும் குறிக்கும் என்று பவிஷ்ய புராணம் கூறுகிறது.

ரிக்வேதத்தில் 'சூரியன் காலையில் பிரம்மாவாகவும், நண்பகலில் சிவனுகவும், மாலையில் விஷ்ணுவாகவும் திகழ்கிருர் எனக் கூறப்படுகிறது. தக்ஷப்பிரஜாபதி யின் பெண்ணுன அதிதியின் மகனுதை லால் ஆதித்தியன் எனப் போற்றப்படுகி ருர். சிவாகமங்கள் சிவபெருமான் சூரிய மண்டலத்தின் நடுவே ஒளிர்கிருர் என்கின்றன. சிவனுக்குரிய அட்ட மூர்த் தங்களில் சூரியனும் ஒன்று - சிவசூரிய னுக விளங்குகிருர் சிவபெருமான். இவ ருக்கு நான்கு முகங்களும், எட்டுத் தோள் களும் உண்டு; சிவந்த ஆடைகளைத் தரித்திருப்பார்,

சூரியன் பன்னிரண்டு மாதங்களில் பன்னிரு பெயர்களால் பூஜிக்கப்படுவார் என்று ஆதித்ய புராணம் கூறுகிறது. அவை, மாசிமாதம் முதலாக அருணன், சூரியன், அம்சுமாலி, தாதா, இந்திரன், ரவி, கபஸ்தி, யமன், ஸ்வர்ணரேதஸ், த்வஷ்டா, மித்ரன், விஷ்ணு - என்பன. ஏழுவகையான "சந்தஸ்ஸு" களே (Metres-விருத்தங்கள்) சூரியனின் ஏழு குதிரைகள். அவை காயத்ரீ, அனுஷ்டுப், ப்ருகதீ, பங்தீ, திருஷ்டுப், ஜகதீ, உஷ்ணிக் என்பன. தேருக்குக் காலை, பகல், மாலை என்ற மூன்று குடங்கள்; ஒரே சக்கரத்திற்கு, ஒரு நேமி (Axis-அச்சு)யும், ஐந்து ஆரங்களும் (Spokes) சேர்ந்து ஆறு ருதுக்கள். சூரியனின் கிரணங்களில் (ஒளிக்கதிர்களில்) முக்கியமானவை ஏழு - ஸுஷும்ன, ஹரிகேச, விச்வகர்மன், விச்வகார்ய, ஸம்பத்வஸு, அர்வாவஸு, ஸ்வராஜ் என்பவை பெயர்கள். இவைகள் முறையே சந்திரன், நட்சத்திரங்கள், புதன், சுக்கிரன், செவ்வாய் குரு மற்றும் சனி என்னும் வான உருவங்களுக்கு (Celestial Objects) ஒளியைத் தருகின்றன என்று விஷ்ணு புராணத்தில் படிக்கிறோம். தற்கால விஞ்ஞான ஆராய்ச்சியும், இதனையே சற்றேறக் குறைய வலியுறுத்துகிறது எனலாம். செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி மற்றும் சனி என்ற கிரகங்களும், ('கிரகம்' என்பது சூரியனைச் சுற்றிவரும் விண் கோளத்தைக் குறிக்கும்), சந்திரனும், சூரியனின் ஒளியைத்தான் பிரதிபலிக்கின்றன: அவைகளுக்குச் சுயமாக ஒளி கிடையாது ; நட்சத்திரங்கள் மட்டும் தாமே ஒளியைத்தரக் கூடியவைகள் என்பதுதான் இன்றைய விஞ்ஞானத்தின் முடிவு. சனி கிரக பதவியைப் பிறகே பெற்றான் என்ற ஒரு கதையும் உண்டு; அதாவது, அவன் காசிக்குச் சென்று, தன் பெயரினால் ஒரு லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பூசித்த பிறகே தான் அவன் கிரக பதவியை அடைந்தானும். இதனால் நாம் அறியக்கூடிய விஞ்ஞான வழி உண்மை என்ன வென்றால்—சனியின் 'சார'த்தை (வானவெளியில் அது சுற்றி வருவதை) கணக்கிட்டு அதுவும் கிரகம் தான் என முடிவு கட்ட வெகு காலம் சென்றிருக்க வேண்டும். எனவே, சனி கிரகபதவியை "அடைய" வெகு நாட்களாயிற்று!

சூரியனை ஒரு சுற்றுச் சுற்றி வருவதற்குக் கிரகங்களுக்குப் பிடிக்கும் காலத்தைக் கீழே காணலாம் :

புதன்	88	நாட்கள்
சுக்கிரன்	225	,,
செவ்வாய்	687	,,
குரு (வியாழன்)	12	ஆண்டுகள்
சனி	29½	,,

"சனி" என்ற சொல்லானது "சனிச்சரன்" என்பதின் சுருக்கமாகும். அச்சொல்லிற்கு "மெதுவாகச் செல்பவன்" என்பதே பொருள். எனவே, நம் முன்னோர்கள் இதனை யெல்லாம் கருத்தில் கொண்டுதான் பெயரையும் வைத்தார்கள் எனத் துணியலாம். சனியையே அவர்கள் சூரிய மண்டலத்தின் இறுதிக் கிரகமாகக் கருதினர் என்றும் கூறலாம். சூரியன் ஒளி தருபவர்; அவர் ஒளி புகா இடம் இருட்டு - எனவே அங்குதான் நிழல் அல்லது "சாயை" தொடங்குகிறது. இதனைச் சூரியனுக்கு "சாயா" தேவியிடத்தில் தோன்றிய மகன் சனி என்று கூறுவதால் விளக்குகிறார்கள் எனலாம். சுமார் 1781-வரைக்கும், சனி தான் கடைசி கிரகமாகக் கருதப்பட்டு வந்தது; அதற்குப் பிறகே, சாதாரண கண்களால் காண முடியாததும், தொலை நோக்கிகளால் (Telescopes) மட்டுமே காணக் கூடியதுமான மற்றும் மூன்று கிரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன - யுரேனஸ்

(இந்திரன்), **நெப்ட்யூன்** (வருணன்), **ப்ளூட்டோ** (யமன்) - என்பவைகளே அவை. விஞ்ஞானம் மேலும் மேலும் முன்னேற்றமடையின், புதிய கிரகங்களும் கண்டு பிடிக்கப்படலாம்.

சூரியனையே முழுமுதற் கடவுளாக வழிபட்ட சமயத்திற்கு "**ஸௌரம்**" என்று பெயர். சூரியனைத் தலைமையாக வைத்துக் கணிக்கும் முறைக்குச் "**சூரிய ஸித்தாந்தம்**" என்றும், அவ்வகை அளவிற்கு "**ஸௌரமானம்**" என்றும் பெயர்கள் வழங்குகின்றன. பண்டைக் காலத்திலும், நடுக்காலத்திலும் (Middle Ages) நம்நாடு எவ்வளவு முன்னேற்றமடைந்திருந்தது என்று கூறுவதற்கு இதுவும் ஒரு சான்றாகும். கிரேக்க, ரோமானீய முறைகளில், காண்பன வற்றிற் கெல்லாம் பூமிதான் கேந்திரம் அல்லது முக்கியஸ்தானம்; இதனைச் சுற்றியே மற்ற கிரகங்கள், நட்சத்திரங்கள் எல்லாம் இயங்குகின்றன என்பதே கொள்கை. நம் நாட்டில் சூரியனே கேந்திரம்.

ஸௌரமான அளவில் நிகழும் பண்டிகைகள், விழாக்கள், ஆண்டுக்கு ஆண்டு மிகுந்த மாற்றமடையா. தமிழரின் பொங்கல் திருநாள், சாதாரணமாக ஜனவரி 13 அல்லது 14-ம் தேதிகளிலேயும், அதே போன்று, தமிழ் வருஷப் பிறப்பு ஏப்ரல் 13, 14-ம் தேதிகளிலேயும் நிகழ்வதை நம்மில் பலர் கவனித்திருக்கலாம். ஆனால் சந்திரனின் "கதி" அல்லது நடையை வைத்துக் கணக்கிடும்—சாந்திரமான — முறையை யொட்டின பண்டிகைகள் ஆண்டு தோறும் மிகுந்த மாற்றம் அடைவதை நாம் காண்கின்றோம்:- எடுத்துக்காட்டாக, தெலுங்கு வருஷப் பிறப்பென்னும் **யுகாதி**, தீபாவளி, நவராத்திரி முதலியனவற்றைக் குறிப்பிடலாம்.

கோயில்கள், சிற்பங்கள் முதலியன :

சூரிய வழிபாட்டிற் கென்றே ஏற்பட்ட தலங்கள் பல, நம் நாட்டில் உண்டு. சுமார் கி.மு. 400-ல் **மௌண்ட்அபு** என்ற ஊருக்கு ஆறு நாட்கள் பிரயாணத் தொலைவில் சூரிய சந்திரர்களுக்கான கோயில் ஒன்று இருந்ததென்று அறிகிறோம். காஷ்மீரில் கி.பி. 9-ம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட **மார்த்தாண்டர்** கோயிலும் சூரியன் கோயிலே. இதனை The Materialised Spirit of a transcendent vision என்று கலைஞர்கள் போற்றியுள்ளனர். பௌத்த அமைப்புகளை நீக்கி இந்து மதவழியில் அமைக்கப்பட்ட முதல் கோயில்களில் **லலிதாதித்ய மன்னர்** என்பவரால் கட்டப்பெற்ற இந்த மார்த்தாண்டர் கோயிலும் ஒன்று. மிகப் பெரியதாக உள்ள இந்தக் கோயிலில் சிற்ப வேலைப்பாடுகளும் மிகுந்துள்ளன என்று தனியே கூற வேண்டியதில்லை.

ஆந்திராவில் ஸ்ரீகாகுளத்திற்கு ஒரு மைல் தொலைவில் உள்ள **அரசவல்லி** என்ற இடத்தில் இந்திரனால் கட்டப்பட்டதாகக் கூறப்படும் சூரியன் கோயில் உள்ளது. இன்றும் இங்கு வழிபாடு உண்டு. இரு கைகளில் இரு தாமரைத் தண்டுகள் துலங்க, ஆதிசேஷனின் படம் தலைமேல் குடையாக நிற்க, ஏழு புரவிகளால் இழுக்கப்பட்டு, அருணனால் ஓட்டப்பட்ட தேரின் மேல் உள்ளதான திருக்கோலம். கருங்கல்லால் ஆன இச் சிற்பம் மிக அழகான தென்பர். பஞ்சாயதன முறையில் சூரியனை நடுவில் வைத்து அமைக்கப்பட்டுள்ள இக் கோயிலுக்கு ஏராளமான அன்பர்கள் வந்து தங்களுடைய இன்னல்களைச் சூரிய வழிபாட்டால் நீக்கிக் கொண்டு இன்புறுகிறார்கள்.

குஜராத்தில் 11-ம் நூற்றாண்டில் கட்டப் பெற்று இன்று பாழடைந்த நிலையில்

ஒரு சூரியன் கோயில் உள்ளது. பல தூண்களைக் கொண்ட வெளி மண்டபத்தின் வழியாக உள் மண்டபத்திற்கும், அங்கிருந்து கர்ப்பக்கிரகத்திற்கும் செல்லலாம். சூரிய சிற்பம், இங்கு செதுக்கப்பட்டுள்ள குதிரைகளின் வடிவங்கள் முதலியன, மிகுந்த வேலைப் பாடுகளுடன் கூடியவை.

ஒரிஸ்ஸா மாகாணத்தில் **கோணாரக்** என்னும் இடத்தில் உள்ள சூரியனின் கோயிலைப்பற்றி அறியாதவர்கள் சிலரே. ஒரிஸ்ஸா நாட்டுச் சிற்பக் கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழும் இக் கோயில், 13-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டு இன்று சிதைவுற்ற நிலையில் இருக்கிறது. 1200 ஸ்தபதிகளும் கொல்லர்களும், மற்றும் பல்லாயிரம் பணியாளர்களும் 16 ஆண்டுகள் உழைத்து இக்கோயிலை உருவாக்கினார்கள். காலமாம் தேரின் மேல் கதிரவன் பவனி வருவதாக அமைக்கப்பட்ட இவ்வாலயத்தில் 10 அடி உயரமுள்ள 12 சக்கரங்களால் தாங்கப்பட்ட ஒரு பிரம்மாண்டமான மேடை உள்ளது. அதன் மேல் ஏழு புரவிகளால் இழுக்கப்பட்ட தேரின் மேல் சூரியன் நின்ற திருக்கோலத்தில் அமைந்திருக்க வேண்டும். ஆனால் இன்று கோயிலும் இல்லை. வானளாவிய 228 அடி உயரக் கோபுரமும் இல்லை. **"ஜகந்மோஹன்"** என்ற மண்டபமும், புரவிகளுமே உள்ளன. அப் புரவிகளின் சிற்பம் மிகுந்த கம்பீரத்துடனும், தேரை இழுப்பதால் கடிவாளக் கயிறுகள் இறுக்குமாறு கழுத்துகளை நிமிர்த்தியும், அழகிய பற்பல ஆபரணங்களைப் பூட்டியும் இருப்பது பார்த்து மகிழத்தக்கதாகும். தேரின் ஒவ்வொரு சக்கரத்திலும் மிக நுட்பமான அழகுடன் கூடிய சிற்ப வேலைப்பாடுகள் உள்ளன.

கோரக்பூரில் கண்டெடுக்கப்பட்டு இன்று லக்னௌ கண்காட்சிச் சாலையில் உள்ள சூரிய சிற்பம் கண்டு களிக்கத்தக்கதாகும். இருகைகளில் தாமரைத் தண்டுகளைத் தாங்கி நிற்கிறார் ஆதவன். (சூரிய வழிபாடே பிற்பாடு விஷ்ணு வழிபாடாக மாறிற்று; சூரியனின் இவ்விரு தாமரைகளே பிற்பாடு சங்கு சக்கரங்களாக மாறின என்பர்) அத்தண்டுகளின் நுனியில் இரு தாமரைகள் மலர்ந்தவாறு சூரியனின் முகத்திற்கு இருபுறமும் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. இருபுறங்களிலும் இரு மங்கையர், தலைக்குப் பின்புறம் பிரபையும், நீண்டு நிமிர்ந்த கிரீடமும் உள்ளன. மாமல்லபுரத்தில், தர்மராஜர் குகை, அர்ஜுனன் தவம், பூவராக சிற்பம் முதலிய இடங்களிலும், கரண்ட மகுடத்துடனும், பிரபையுடனும் கூடிய சூரிய சிற்பங்களைக் காணலாம்.

பாடல்கள் முதலியன :

ரிக்வேதம் மூன்று அக்னிகளில் ஒன்றாக சூரியனைப் போற்றுகிறது; யஜுர் வேதம் – "சூரியனுக்கு சமமான ஜோதியுள்ளவர் யார்" என்று வியக்கிறது; ஸாம வேதமோ வெனில் அவரை நோய்களை நீக்குபவராகவும் இன்னல் புரியும் பகைவரை ஓட்டுபவராகவும் கூறுகிறது; அதர்வ வேதம் பசுவின் அகத்திலுள்ள புழுக்களை ஆதவன் ஒழிப்பார் என்றும், அவரை வழிபட்டு இருதய நோய், காமாலை முதலியவற்றைப் போக்கிக் எலாம் என்றும் கூறுகிறது.

தமிழ் இலக்கியத்திலும் பழங்காலந் தொட்டே ஞாயிறு வழிபாடு இருந்தமைக்குச் சான்றுகள் பல கிடைக்கின்றன.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்...

என்பது சிலப்பதிகார வாக்கு.

ஆழ்வார்களில் முதலாழ்வாராகப் போற்றப்படும் பொய்கையாரின் முதல் திருவந்தாதியின் முதல் பாட்டில் வரும் சூரியோதய வர்ணனை மிக அழகானதாகும்.

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் செய்ய ...

—இப்பரந்த நிலப் பரப்பையே ஒரு அகலாகவும், ஆழ் கடலையே அகலிலுள்ள நெய்யாகவும் கொண்டால், உதிக்கும் சூரியனே அந்த விளக்கின் ஒளியெனத் திகழ்கிறார்.

தொல்காப்பிய மேற்கோட் செய்யுள் ஒன்று—"கதிரவன் மனக் கமல மலரையும் மலர்த்துபவன்"—என்கிறது. கதிரவனை வணங்கி ஏதேனும் வேண்டிக் கொண்டால் அது நிறைவேறும் என்ற கருத்து, தமிழர்களிடையே இருந்தது என்பதைக் கலித்தொகை (147:48; 16:16 உரை) உணர்த்துகிறது.

இராமர் அகத்திய முனிவரால் உபதேசிக்கப்பட்ட "ஆதித்ய ஹ்ருதயம்" என்ற ஸ்தோத்திரத்தினால் சூரியனைத் தொழுது, அதனால் வலுப்பெற்றவராய், அடுத்த நாள் யுத்தத்தில் இராவணனை வதம் செய்தார் என்பதை இராமாயணத்திலிருந்து அறிகிறோம். இன்றும் பல குடும்பங்களில் இது பாராயணம் செய்யப்பட்டு வருகிறது. ஹர்ஷ சக்கரவர்த்தியின் காலத்தில் வாழ்ந்த "மயூரர்" என்னும் சமஸ்கிருத கவிஞர், "சூரியசதகம்" என்ற நூறு பாக்களைக் கொண்ட காவியத்தை எழுதி இழந்த தம் கண் பார்வையை மீண்டும் பெற்றார் என்று கூறுவது உண்டு. பவபூதி என்னும் மற்றொரு கவி தன் "மாலதீமாதவம்" என்ற காவியத்தைச் சூரியன் துதியை முன்னிட்டே துவங்கியுள்ளார். நாள் தோறும் செய்யப்படும் "மாத்யாஹ்னிக"த்திலும் (மதியச் சூரியனைத் தொழுதல்) கீழ்க்கண்ட ச்லோகம் வருகிறது :—

"ஆஸத்யேன ரஜஸா வர்த்தமானோ நிவேசயன் அம்ருதம் மர்த்யஞ்ச ஹிரண்மயேன ஸவிதா ரதேன ஆதேவோ யாதி புவனாவிபச்யன் உத்வயன் தமஸஸ்பரி".

நவக்கிரகங்களில் முதல்வன் சூரியன். அவரைப்பற்றிய தியான சுலோகம் கீழ் வருமாறு :—

த்யாயேத் ஸூர்ய மனந்த சக்தி கிரணம்
தேஜோமயம் பாஸ்கரம்
பக்தாநுபய ப்ரதம் தினகரம்
ஜ்யோதிர்மயம் சங்கரம் !
ஆதித்யம் ஜகதீச மச்யுத மஜம்
த்ரைலோக்ய சூடாமணிம்
பக்தா பீஷ்டவரப்ரதம் தினமணிம்
மார்த்தாண்ட மாத்யம் சுபம் !!

கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துஸ்வாமி தீட்சிதரும் சூரியனைக் குறித்து "ஸூர்யமூர்த்தே" என்ற பாட்டை ஸௌராஷ்ட்ர ராகத்தில் இயற்றியுள்ளார். இந்நாளைய கவிஞர் பாரதியாரின் பாட்டும் ஈண்டு நோக்கத் தக்கது:—

நீஒளி ! நீ சுடர் ! நீ விளக்கம் ! நீ சாட்சி
மின்னல்இரத்தினம் கனல் தீக்கொழுந்து
இவையெல்லாம் நினது திகழ்ச்சி !
நீசுடுகின்றாய், வாழ்க! நீகாட்டுகின்றாய், வாழ்க !
உயிர்தருகின்றாய், உடல் தருகின்றாய்
வளர்கின்றாய்; மாய்கின்றாய்;
நீர்தருகின்றாய்; காற்றை வீசுகின்றாய், வாழ்க!

யோகத்தின் வாயிலாகக் கடவுளை அடைய எண்ணுபவர்களும் முதற்கண் சூரிய நமஸ்காரத்தையே (ஹடயோகத்தின் முதற்படியாக) செய்வார்கள்.

மேலே கூறப்பட்ட பெருமைகளே அல்லாது வேறு பெருமைகளையும் கொண்ட சூரிய பகவான் நம்மெல்லோருக்கும் நன்மை தருபவராகுக.

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு. K. பட்சிராஜன், B.A.,B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இச் செய்தி திருக்கோட்டியூர் நம்பி திருச்செவிகளிலே 'காய்ந்தன சலாகை' என்ன எட்டியது. நம்பிகள் மனம் பதைத்தவராய் உடையவரைக்காண உடனே பயணமானூர். நம்பிகள் வரும் செய்தி தெரிந்த எம்பெருமானூர் தம் முதலிகளோடு அவரை எதிர் கொள்ளச் சென்றூர். இருவரும் காவிரி ஆற்றின் மத்தியிலே சந்தித்தனர். பொழுதோ உச்சிவேளை. ஆற்று மணல் 'பொருந்தார் கைவேல் நுதிபோல்' காலைச் சுடுகின்றது. நம்பிகளைக் கிட்டிய உடையவர், அவர் திருவடிகளிலே தெண்டனிட்டுக் கிடந்தார். நம்பிகள் உடையவரை வழக்கம் போல் முடிபிடித் தெடுக்கவில்லை. எழுந்திரும் என்று வாயால் கூறவுமில்லை. நின்று கொண்டே இருந்தார். அருகிருந்தவர் அச்சுடு மணலிலே நிற்கவும் முடியாதே, தம் கால்களில் ஒன்றை மாறி மாறித் தூக்கித் தடுமாறுகின்றவர், முழுத்திருமேனியும் அப் பொறியெழும் மணலிலே பதியக் கிடந்த உடையவர் நிலைக்கு மனம் பதைத்தனர். ஆனூல் ஆசார்ய சிஷ்ய நியதியை உன்னி ஒன்றும் பேச மாட்டாது புழுங்கினர். சற்று நேரம் சென்றது. இந்நிலையைப் பொருத ஒரு முதலி உள்ளம் பீறிட்டெழுந்தது. கிடாம்பியாச்சான் என்ற அவர், நம்பிகளை நோக்கி முகம் கோபமும் வெறுப்பும் தோன்ற " இது என்ன சிஷ்யாசார்யக்கிரமமோ" தெரிய வில்லை. இந்தக் கொதி மணலிலே ஏற்கனவே உபவாசத்தால் நைந்த இவர் திருமேனி கிடக்கப் பார்க்கும் உமது உள்ளம், அந்த அம்மாளிட்ட நஞ்சிலும் கொடிதாகாதா? கருமுகை மாலையைக் கடும் வெயிலிலிட்டுக் கனக்க மகிழ்ந்திருப்பதும் நியாயம் தானூ? என்று கூறி ஓடிச் சென்று உடையவரைப் பரிந்தெடுத்தார். நம்பிகளோ ஆச்சானது கோப மொழிகளால் எவ்விதக் கலக்கமும் எய்தாது ஆச்சானைக் கிட்டி அவர் கையிரண்டையும் தமது திருக்கரங்களால் பற்றி அவரை நோக்கி "நன்று! நன்று! ஆச்சானே. இந்த எம்பெருமானூர் பக்கல் பரிவுடையார் யாரேனுமுண்டோ என்று தெளியவே இதுவரை பார்த்து நின்றேம். வேறில்லை. இப்போது நம்மையும் எள்ளிப் பேசும் அளவிற்கு உமக்கு உடையவர் திருமேனி நலத்திலே அக்கரை இருப்பதை வெளியிட்டுக் காட்டி விட்டீர். ஆகையால் இன்று முதல் அவருக்குப் பிரியமான தளிகை பண்ணி சமர்ப்பித்து அவர் திருமேனி நலத்தை நீரே பேணி வரக்கடவீர்" என்று நியமித்தார். முதலிகளனைவரும் நம்பிகள் திருவுள்ள ஓட்டத்தை எண்ணி வியந்தனர். பின்னர் அனைவரும் நம்பிகளை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு திருவரங்கம் சேர்ந்தனர். நம்பிகள் அரங்கனைச் சேவித்துக் கோட்டியூர் மீண்டார். அன்று முதல் எம்பெருமானூர் உணவு வகைகளைக் கிடாம்பி ஆச்சான் தானே நேரில் தயாரித்து உடையவரைப் பேணிவந்தார்.

ஒருநாள் உடையவர் ஆச்சானை அருகழைத்து, ஆச்சானே! நீர் நம்பக்கல் பரிவினுல் கலங்கி நம்பிகளிடம் "இதென்ன சிஷ்யாசார்யக் கிரமமோ" என்று கூறிவிட்டீரே. அவ்விதம் கூற அடுக்குமோ? ஒருகாலும் அடாது. "மிக்க வேதியர் வேதத்தினுட் பொருள் நிற்கப் பாடி என் நெஞ்சுள் நிறுத்தினன் தக்க சீர்ச் சடகோபன்" என்று நம்மாழ்வாரை யன்றித் "தேவுமற்றறியேன்" என்றும் "என் அப்பனில் நண்ணித் தென் குருகூர் நம்பி என்றக்கால் அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே" என்றும் பாகவத சேஷ மகிமையைக் 'கண்ணி நுண் சிறுதாம்பினுல்' உலகுக்கு விளக்கிய ஸ்ரீ மதுரகவிகளுக்கு ஸ்வாமி நம்மாழ்வார் எப்படியோ

அது போலன்றோ நமக்கு நம்பிகள். பாகவத சேஷம்தான் உண்மையான அதிகாரியின் சொரூபம். ஆகையாலன்றோ திருக்கச்சி நம்பிகளுக்குப் பேரருளாளன் ''பாகவதாபிமானம் இல்லாதார்க்கு மோக்ஷம் கிடைக்கை ஐயுறவுடைத்து'' என்று அருளிச் செய்தான்! அந்த அருள் மொழியை நாம் உணர்ந்து வழிபடுகைக்காகவே உம்முடைய உள்ளப் பரிவின் கீழ் நம்மை வைத்தருளுவதாக நம்பிகள் பரீக்ஷித்தார்'' என்று அருளிச் செய்தார். ஆச்சானும் தலை குனிந்தவராய்த் தாம் செய்ததற்கு அநுதாபம் கொண்டு உடையவரை வணங்கி மன்னிப் படைந்தார்.

உடையவர் இங்ஙனே தர்சனப்ரவர்த்தகம் செய்து கொண்டிருக்கும் நாளிலே யக்ஞமூர்த்தி என்ற ஒரு மறையவன் வடநாட்டில் காசிவரை சென்று அங்குள்ள வித்துவான்களைத் தனது வாதங்களால் வென்று பலரைத்தன் சீடராக்கிக் கொண்டு ஏகதண்டியாய் மாயாவாத சந்நியாசியாய் தன் வித்தையினாலும் சீடர் மிகுதியாலும் மிகவும் தற்பெருமை யுடையனாய் இருந்தான். அவன் காசியிலே எம்பெருமானாருடைய வைபவங்களை எல்லாம் கேள்வியுற்றான். அவனது அகங்காரம் இதனைக் கேட்கப் பொறுக்குமா? எனவே எம்பெருமானாருடன் வாதிட்டு வெல்ல வேண்டும் என்னும் அவாத் தூண்டுதலின் அநேக நூல்களைத் தயாரித்துக்கொண்டு பெருந் திரளுடனே தன் வித்யா கர்வம் தோன்றத் திருவரங்கம் வந்து சேர்ந்தான். நேரே சென்று எம்பெருமானாரைக் கண்டு தன்னோடு வாதம் செய்ய வேண்டும் என்று அறை கூவினான். எம்பெருமானாரும் சரி என்று ஒப்புக் கொண்டார். யக்ஞமூர்த்தி தான் தோற்றால் உடையவர் பாதரக்ஷையைத் தலைமேல் தாங்கி அவர் திருநாமத்தை உச்சாரணம் செய்து கொண்டு தன் மதத்தை விட்டு எம்பெருமானார் தர்சனத்தில் சேர்ந்து விடுவதாகச் சபதமிட்டான். உடையவரும் தாம் தோற்றால் க்ரந்த சந்யாசம் செய்து கொள்வதாகச் சபதம் செய்தார். பதினெட்டு நாள் வாதம் செய்வது என்று இருவரும் காலவரையறை செய்து கொண்டனர். பதினாறு நாள்வரை இவரால் அவனை ஜெயிக்க முடியவில்லை. பதினேழாம் நாள் வாதில் யக்ஞமூர்த்தி கையே ஓங்கியது போன்று தோன்றியது. அவன் தான் வென்று விட்டதாகவே மயங்கித் தன் வெற்றி தோன்ற எழுந்து உடையவரை நோக்கி, நாளை வாரும் என்று இகழ்ச்சி தோன்றக் கூறிப் போனான். எம்பெருமானாரும் கவலை தோய்ந்த மனத்தராய் மடத்துக் கெழுந்தருளினார். அங்கு நேரே தமது திருவாராதனமான பேரருளாளன் திருமுன்பு சென்று தெண்டனிட்டு அப்பெருமான் திருவடிகளை விளக்கி, அவருக்கு அமுது செய்தருளப் பண்ணினார். பின்னர் அப் பெருமான் முன்பே கைகூப்பி நின்று ''பேரருளாளனே! படைப்புக் காலத்தே தொடங்கிப் பின் ஆழ்வார்களால் பேணி வளர்க்கப்பெற்று ஸ்ரீ ஆளவந்தார் அளவும் வழிவழியாக வளர்ந்த இந்த தர்சனம் இன்று அடியேன் அறியாமையால் தோற்றுவிடும் போலிருக்கின்றதே. இந்நாள் வரை தேவரீருடைய சொரூப ரூப குண விபூதிகளை சத்யம் என்று காட்டப் பிரமாணங்களை எங்களுக்கு உணர்த்திக் கொடு போந்த தேவரீர், இன்று இம் மாயாவாதியைக் கொண்டு வந்து நிறுத்தி அந்தப் பிரமாணங்கள் அழியப் பார்த்து விளையாடவா திருவுள்ளம் பற்றினீர். அதுவும் அடியேன் மதியின்மையைக் காட்டியா விளையாட வேண்டும். அப்படி தேவரீர் எண்ணும்படி தேவரீர் திருவடிகளிலே அடியேன் என்ன அபராதம் செய்தேன். ஆனால் இந்த லீலை தான் தேவரீர் தற்போதைய திருவுள்ளம் என்றால் தேவரீர் இட்ட வழக்காயுள்ள அடியோங்கள் செய்யலாவ தொன்றுண்டோ?'' என்று கண்ணும் கண்ணீருமாய் விண்ணப்பம் செய்து அன்று ஒன்றும் உண்ணாமலே சயனித்தார். நள்ளிரவில் அருளாளன் அவர் முன் தோன்றி ''எம் பெருமானாரே! ஏன்திகைக்கின்றீர். ஒன்றும் பொய்க்காது. வாதிடுபவன் மாயாவாதி. எனவே உம்மைச் சற்று மயக்கி விட்டது. அஞ்சாதீர். ஆளவந்தார் அருளிய அகண்டமாயாவாத கண்டனத்தை அண்டை கொண்டு வாதிடும். மாயாவாத மிடுக் கெல்லாம் ஒருங்கே ஒன்று சேர்ந்து பொருந்திய இவனை உம் முன் இட்டு இவன் தோற்று உமக்காட் பட்டானென்றால் பின் பிறர் தெளிவு பெறலாகும் என்றே இவனை உமது பால் வருமாறு செய்தோம் காணும்!'' என்று அருளி மறைந்தான். ஓய்ந்து கிடந்த உடையவர் உள்ளம் வீறு பெற்று உயிர்த்தது. விடிவோரையில் எம்பெருமானார் அருளாளன் திருநாமோச்சாரணத்தோடு எழுந்து இரவில் கண்ட கனவை எண்ணிப்பார்த்தார். ''ஆஹா! என்ன கனவு! என்னுடைய அருளாளன் திருவருள் தான் என்னே!'' என்று வியந்தவராய் அற்றைக்காலைச் செய் கடன் முற்றி அருளா

ளனைத் தெண்டனிட்டு வாதிடும் இடத்துக்குப் புறப்பட்டார். முன்னை நாள் அவரிடத்தே தோன்றிய கவலைக் குறிகள் மறைந்தோடி அவர் திருமுக மண்டலம் அருளாளன் திரு வாக்கை அண்டை கொண்ட பலத்தாலே ஒரு அதிமானுஷ தேஜஸ்ஸோடு பிரகாசித்தது. வாதிடுமிடத்தே இருந்த யக்ஞ மூர்த்தி எம் பெருமானார் வரும் பரிசை நோக்கினான். அவர் முகத்தே தோன்றிய முறுவலும், வீறும் மிடுக் கும் அவனைத் திகைப்பூட்டியது.'' நேற்று இங்கிருந்து சோர்ந்த மனத்தராய்ச் சென்ற இவர் இன்று இப்படி மதயானை போன்று வருகின்றாரே!

முகத்தில் உலகில் நடையாடாத சோதி யல்லவா வீசுகிறது!'' என்று எண்ணமிட்டான். அவன் உள்ளத்தே இதுவரை ஆயப் பெறு நன் னெறி நம் மறிவென்று நம் புத்தியை நம்பி யுக்திவாதங்கள் செய்தோம். ஆனால் இன்று இவர் திருமுகத்தில் விளங்கும் அதிமாநுஷ தேஜஸ்ஸின் முன் நம் சாதுர்யம் நிற்காது என் பதில் ஐயமில்லை. இவருக்குப் பெருமாள் பிரத் யக்ஷமாயிருக்க வேண்டும்'' இன்று உணர்ந் தவனாய் எம்பெருமானாரைத் தெண்டனிட்டு வரவேற்றான். எம்பெருமானாரும் இன்று இவன் படி ஒருமாதிரி காண்கிறதே. அவன் முகத்தில் நேற்றுக்கண்ட கர்வம் இன்றில்லையே எல்லாம் அருளாளன் செயல்! என்று எண்ணியவராய் 'நாம் வாதத்தைத் தொடங்கலாமே' என்று யக்ஞமூர்த்தியை நோக்கிக் கூறினார். அவன் 'ஸ்வாமீ! இனியும் வாதம் வேண்டுமா? தேவ ரீருக்குப் பெருமாள் ப்ரத்யக்ஷமாயிருக்கிறார் என்பது தேவரீர் முகத்திலே பளிச்சிடுகின்றது. இதுவரை தேவரீரை என்போன்று நினைத்து வாதிட்டேன். என் அறிவால் சில யுக்தி வாதங் களைக் கற்பித்து வீசி மயக்கினேன். இப்போது தேவரீர் வெறும் மனிதனல்ல. இறையருள் பரிபூரணமாகப் பெற்றவர் என்று காண்கிறேன் உணர்கிறேன். அதனாலே இனியும் வாதம் வேண்டுமா என்று ஐயுறுகின்றேன் என்று பணிவோடு பதிலிறுத்தான். உடையவரும் அவனை நோக்கி உம்முடைய வாதங்கள் அனைத்தும் மாயாகல்பிதம் என்றும், மாயை யுட்பட்டாரை மட்டுமே மயக்குவது என்றும் முடிவு கட்டுவோம் கேளீர்! வேதங்கள் சத்திய மாகையாலே அவ்வேதவாக்கியங்களில் எவை யும் பொய்யல்ல, அனைத்தும் உண்மையே, வேதங்களில் பரம் பொருளாகிய ப்ரம்மத்தை நிர்க்குணமானது என்று வாதிடுகின்றது உமது மதம். ஆனால் அவ்வேதத்திலேயே ப்ரம்மத் திற்கு ஸத்யம் ஞானம் முதலிய அநேக கல்யாண குணங்களைப் பரக்கப் பேசும் பல வாக்கியங்களும் உள்ளனவே. அவையெல்லாம் உமது கோட்பாட்டின்படி மெய்யில்லா மொழி களாய் விடாதா? வேதங்களில் பல பாகங்களை, அவை ப்ரம்மத்துக்குக் குணம் கல்பிக்கின்றது என்று அவற்றைப் பிரமாணமில்லை என்று விலக்க நேரிடுமே. அப்படி அப்பிரமாண மான (பிரமாணமில்லாத தான) வாக்யங்களை உடைய வேதமே உமது கருத்துப் படி மெய்யும் பொய்யும் கலந்ததாகிவிடில் அவ் வேதமே பிரமாணமற்ற தாகிவிடுமே. எந்த வேதங்கள் சத்ய மென்றும் பிரமாண மென்றும் கொண்டு உமது நிர்க்குணப் பிரம்ம வாதக்கோட்டையை எழுப்ப முற்பட்டீரோ அதே வேதங்கள் பொய்யானதும், பிரமாண மில்லாததுமான வாக்கியங்களை உடையது என்பதால் வேதமே அப்பிரமாணம் என்று வாதிடும் வழியல்லாவா உமது வாதம் கொண்டு விடுகின்றது? ஆகவே ஆதாரமே முழு உண்மையல்ல என்றால் அந்த ஆதாரத்தின் பேரில் எழுப்பப் பெறும் கட்டிடமும் நிலையற்றது என்பது தெளிவல்லவா? சரி, ஒருக்கால் நான் ஸகுணவாக்யங்கள் பொய் என்றோ பிரமாண மற்றதென்றோ கூறவில்லை. அவித்யையினால் மறைக்கப்பட்ட ப்ரம்மத்திற்குத்தான் குணங் களுண்டு. அவித்யை நீங்கினால் அப்பிரம்மம் குணங்களற்று நிர்க்குணமாய்விடும் என்று தானே கூறுகிறேன் என்று கூறநீர் முற்படலாம். ஆனால் அது முன்னையதில் காட்டில் அதிக ஆழமான படுகுழியில் உம்மை வீழ்த்துகிறதை நீர் உணரகில்லீர். எப்படி என்று கேளும். தனி ஞானமயமான ப்ரம்மத்தை அவித்யை மறைக்கும் போது நிர்க்குணப்பிரம்மம் ஸகுண மாகக் காண்கிறது என்றால் அந்த ப்ரம்மத்தை மறைக்கக் கூடிய வல்லமை பெற்ற அவித்யை உண்டென்றும், அந்த அவித்யையும் நித்தியம் என்றும் ஒப்புக் கொள்ள வேண்டுமே.

அவ்விதம் ஒப்பினால் ப்ரம்மம் என்றும் அவித்யை என்றும் இரண்டு அநாதி பொருள் களின் உண்மையையும், நீர் ஒப்பியாகவேணும். அப்போது அத்வைதம் என்று நீர் மார்தட்டிக் கொள்ளும் மத்தகஜம் த்வைதம் என்ற ஆழங்

காவிலே நிலைகொள்ளாமல் அமிழ்ந்து விடுமல்லவா? எனவே வேதங்களில் வரும் எல்லா வாக்கியங்களின் ஸத்யத்தையும் ஒரே படியாக ஒப்பி எல்லா வாக்கியங்களையும் இணைத்துப் பொருள் கொண்டு அந்த அசையாத ஆடாத பிரமாணங்கள் பேரில் தானேஎழும் கோயிலான நம்முடைய மதம்தான் முழு வேதப்ரமாணத் தோடுகூடியது என்ற உண்மையை உணர்ந்தீரா? என்றுகேட்க யக்ஞமூர்த்தியும் சடக்கென எழுந்து தன் ஏகதண்டத்தை முறித்தெறிந்து எம்பெருமானார் திருவடிகளிலே சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு அடியேனை ஆட்கொண்டருள வேண்டும் என்று பிரார்த்தித்துக் கிடந்தான். உடையவரும் அருளாளன் திருவாக்குப் பலிக்கும் தன்மையை உன்னி மிகவும் மனமகிழ்ச்சியோடு யக்ஞமூர்த்தியை வாரி எடுத்து நிறுத்தினர். யக்ஞமூர்த்தி எம்பெருமானுரை நோக்கி "ஸ்வாமீ! அடியேனுக்குத் திரிதண்ட காஷாயங்களை அருளவேண்டும் என்று வேண்டினர். உடையவரும் அவ்விதமே அருளுவதாக வாக்களித்து, யக்ஞமூர்த்தி சிகை, பூணூல் இவற்றை விட்டவனுதலால் அவனைக் காயத்ரியுடன் கூடிய பிராயச்சித்தங்கள் செய்யச் செய்து அவனுக்கு மீண்டும் சௌள உபநயன ஸம்ஸ்காரங்களை அளித்துப் பின்னர் விதிப்படி அவனுக்குத் திரிதண்ட காஷாயாதிகளை மிக்க மனநிறைவோடு கொடுத்தருளினர். அவன் அருளாளப் பெருமாளால் தமக்களிக்கப்பட்ட ஞானபுத்ரன் ஆதலின் பெருமாளிடம் தமக்குள்ள நன்றிதோன்ற யக்ஞமூர்த்திக்கு "அருளாளப் பெருமாள் எம்பெருமானுர்" என்று தாஸ்ய நாமம் சாத்தியருள அவரைக் கோயிலுக்கழைத்துச் சென்று நம்பெருமாளை சேவிக்கப் பண்ணி, அவருக்குத் தீர்த்தப்ரஸாத ஸ்ரீ சடகோபனையும் அளிக்கச்செய்து, மடத்துக்கு மீண்டார். அங்கு தம் திருவாராதனத்தேவான பேரருளாளனைக் காட்டி "உம்மை நம் பக்கல் சேர்த்தருளியவர் இவரே!" என்று கூறிப் பின் பெருமாளை அமுது செய்வித்து, தாமும் உண்டு பின்னர் அருளாளப் பெருமாள் எம்பெருமானுரை அமுது செய்வித்தார். (பாகவத ஆசார்ய சேஷம் கிடைக்க அருளியபடி). அப்பால் அவரை அழைத்து 'இனி நீர் ஆழ்வார்கள் அருளிச் செயல்களை ஓதீர் என்று நியமித்துத் தாமே திருப்பல்லாண்டு தொடங்கி நாலாயிரத்தையும் ஓதுவித்து மற்றும் அறியவேண்டிய தத்துவங்களையும் அவருக்கு உபதேசித்து அருளினர்.

(தொடரும்)

இறைபணியாளர் மாற்றங்கள்

பெயர்	இருந்த இடம்	மாற்றப்பட்ட இடம்
திரு. கே. செல்லப் பாண்டியன்	ஸ்ரீ மாரியம்மன் கோயில் எளம்பிள்ளை, சேலம்.	ஸ்ரீ கற்பகநாத சுவாமி கோயில், உத்தமசோழபுரம்.
,, டி. எம். ஆறுமுகம்	ஸ்ரீ சாமவேதீசுவரர் கோயில் திருமங்கலம்.	ஸ்ரீ சம்புகேசுவரர் கோயில், திருவானைக்காவல்.
,, ஜி. குஞ்சிதபாதம்	ஸ்ரீ நாகநாத சுவாமி கோயில் திருக்களாச்சேரி, மாயூரம்.	ஸ்ரீ கோட்டை மாரியம்மன் கோயில், சேலம்.
,, கே. வி. சுப்பிரமணியம்	ஸ்ரீ கோட்டை மாரியம்மன் கோயில், சேலம்.	ஸ்ரீ முண்டகக்கண்ணியம்மன் கோயில், மயிலாப்பூர், சென்னை.
,, பி. கந்தசாமி	ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் கோயில், திருக்கண்ணபுரம்.	ஸ்ரீ நவநீதேசுவர சுவாமி கோயில், சிக்கல்,

திரு ஆமாத்தூர்க் கல்வெட்டுகள்

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனார், M.A., M.O.L., Ph.D.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

பிரதானம்

திரு ஆமாத்தூரிலிருந்து சில வரிகளை வசூலிக்கும்படி தொண்டைமானார் என்பவர் அரச மணவாள காங்கேயர் என்பவருக்குக் கட்டளை பிறப்பித்தார். இந்த வரிகளைத் தொண்டைமானார் கோவிலுக்கே விட்டார். கிருஷ்ணதேவராயர் காலத்தில் குறிப்பிட்ட 16 சிற்றூர்களிலிருந்து நெல்லும் பணமும் வசூலிக்கப்பட்டன. அவை வழிபாட்டுக்கும் படையலுக்கும் கோவிலைப் பழுது பார்க்கவும் செலவிடப்பட்டன. ஆண்டுக்கு 12 பொன் விகிதம் வரி கொடுக்கப்பட்டு வந்த ஆலாற்றூர்க் கிராம நிலங்கள் கோவிலுக்குத் தானமாக விடப்பட்டன. அப்பொன், பகல் படையலுக்குப் பயன்படுத்தப்பட்டது. ஓர் அதிகாரியின் பணியாள் தன்னொடு பணியாற்றி வந்த மற்றொருவனைக் காயப்படுத்திய குற்றத்திற்காகக் கோவிலில் ஒரு நந்தா விளக்கு எரிக்க 32 பசுக்களை விட்டான். இறந்த தன் மகளின் நலனுக்காகக் கச்சி ஏகாம்பரத்தைச் சேர்ந்த தேவரடியாள் ஒருத்தி, சில நகைகளையும் பாத்திரங்களையும் பசுக்களையும் கோவிலுக்குத் தானம் கொடுத்தாள். கோப்பெருஞ்சிங்கன் நலனுக்காகப் பாதிரி மரத்தூர் குன்ற மடுத்தான் வாணதிராயன் உடையான் வைராதராயன் என்பவன் முருகர் சிலையை வைத்தான். கோப்பெருஞ்சிங்கன் அச்சிலைக்குத் தங்க நகைகளை உதவினான்.

அணியன் மூவேந்தரையன் கோப்பெருஞ்சிங்கனிடம் இருந்து இருபது மாகாணி நிலத்துக்கு வரிநீக்கம் பெற்றான். மேலே கூறப்பெற்ற முருகன் சிலைக்கு வழிபாடு செய்யவும், படையல் இடவும் அந்த வரிகள் பயன் படுத்தப்பட்டன. இராசநாராயண சம்புவராயன் கோயில் நிலங்கள் சிலவற்றிற்கிருந்த வரியை நீக்கினான்; அந்த வரியைப் படையலுக்கும் பூசைக்கும் செலவிட ஏற்பாடு செய்தான்; தனது ஆட்சியில் முதல் ஐந்து ஆண்டுகள் சேர்ந்திருந்த நூறு பொன்னைக் கோவிலைப் பழுது பார்க்க உதவினான்.

சிறப்புச் செய்திகள் :

அணியன் மூவேந்தரையன் என்பவன் கோப்பெருஞ் சிங்கனிடமிருந்த அரசாங்க உயர் அலுவலன், 'அணியன்' என்பது அவனது அலுவற் பெயர். இப்பொழுது மாவட்டத் தண்டலாளர் முதலிய உயர் அலுவலர்க்கு உறு துணைவராக இருப்பவர், (P.A. Personal Assistants) அக்காலத்தில் அணியர் (அணியர்—நெருக்கத்தில் இருப்பவர்) எனப்பட்டனர் என்று கொள்வது பொருத்தம் ஆகும். சோழர் காலத்து அணியன், விசயநகர வேந்தர் காலத்தில் இராயசம் என்று பெயர் பெற்றான்.

கிருஷ்ணதேவராயர் காலத்தில் ஒவ்வொரு ஊரிலும் காரணிகன் ஒருவன் இருந்தான். அவன் அரசாங்க உயர் அலுவலன்; நீதிபதி (மத்தியஸ்தன்). காரணிகன் என்னும் சொல் முதன் முதலில் இறையனார் களவியலுரையில் காணப்படுகின்றது. அவ்வுரையின் காலம் கி.பி. 11 அல்லது 12-ஆம் நூற்றாண்டு என்னலாம்.

சதாசிவராயரின் முதலியான (ஏஜெண்டான) சூரப்ப நாயகர் திருவதி ராச்சியத்தை ஆண்டு வந்தார். ஊர் இலை வாணிகர், முன்பு இருந்த கல்வெட்டுப்படி கைக்கோளர்க்கு இருந்த உரிமைகளை வழங்க ஒருப்பட்டனர். அக்கல்வெட்டு அழிந்து விட்டதால் புதிய கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது.

சீரங்கராயர் காலத்தில் (கி.பி. 17-ம் நூற்றுண்டில்) ஆமாத்தூர் ஊரார் – தச்சர், கொல்லர், தட்டார் ஆகிய மூவர்க்கும் படைவீடு, செஞ்சி, திருவண்ணுமலை, காஞ்சீபுரம் ஆகிய இடங்களில் முன்பு கொடுத்திருந்த உரிமைகளைப் போலவே இனியும் கொடுப்பதாகவும், தவறிஞல் 12 பொன்தண்டம் கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டனர். இவ்விரு செய்திகளும் சாதித் தொல்லையைக் குறிப்பனவாகும்.

திரு ஆமாத்தூர் அருவா நாட்டு -வாவலூர் நாட்டைச் சேர்ந்தது என்று கல்வெட்டுக் கூறுகின்றது. இது கவனிக்கத் தக்கது. அருவா நாடு என்பது தொண்டை நாட்டுத் தென்பகுதியின் பெயராகப் பண்டைக் காலத்தில் வழங்கி வந்தது.

விளக்கு அறம் :

சந்தி விளக்கு, நந்தா விளக்கு எனக் கோயில் விளக்குகளில் பலவகை உண்டு. திரு ஆமாத்தூரில் சந்தி விளக்குகளும், நந்தா விளக்குகளும் எரிக்கப் பலர், பொன், ஆடுகள், பசுக்கள், எருமைகள், நிலம் முதலியவற்றை அளித்தனர். ஒரு நந்தா விளக்கு எரிக்க 96 ஆடுகள் அல்லது 32 பசுக்கள் கோவிலுக்கு விடப்பட்டன. இதனுல் ஒரு பசு 3 ஆடுகளுக்கு நேராகக் கருதப்பட்டது என்பது தெரிகிறது.

மக்கள் பெயர்கள் :

பேராளன், கற்றளி, கங்கரையன், கங்கதரையன், திருவன், காலிங்கராயன், செங்காடன் என்ற இராசேந்திர வைராகரச் சோழன், சிறிய மாராயன், காளி என்ற மீனவன் மாராயன், சொக்க ஞானசம்பந்தர், செய்ய திருமேனி, திருக்காளத்தி உடையான், பெரியான், முரிவன், நாதன், பொன்னம்பலக் கூத்தன், நாராயணப்பிள்ளை, சின்னுரைப்பிள்ளை, வீரப்பன் முதலியன.

சுவாமி - அம்மன் பெயர்கள் :

திரு ஆமாத்தூர் ஆளுடையார், அழகிய நாயஞர், அபிராமேசுவரர் என்பன இறைவன் திருப்பெயர்கள்.

"திரு ஆமாத்தூர் அழகியரே" என்பது தேவாரம். இத்தொடரைக் கொண்டு "அழகிய நாயஞர்" என்றும் பெயர் எழுந்தது போலும்! 'நாச்சியார் முத்தை வென்ற முறுவலார்' என்பது அம்மன் பெயர்.

பூசை விழாக்கள் :

ஒவ்வொரு வாரத்திலும் ஞாயிற்றுக்கிழமை சிறப்பு விழா நடைபெற்றது. திருவாதிரை விழா பங்குனி விழா முதலியன நடைபெற்றன. விஷு சங்கராந்தி கொண்டாடப்பட்டது. கம்பண உடையார் காலத்தில் சோமப்ப தண்டநாயகர் நினைவாகச் சிறப்புப் பூசை (சந்தி) நடைபெற்றது.

மடங்கள் :

திரு ஆமாத்தூரில் மூன்று மடங்கள் இருந்தன என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அவற்றுள் ஒன்று திருவேடம் அழகியான் திருமடம் என்பது; மற்றென்று ஆண்டார் திருவநாயகம் மடம் என்பது. மூன்றும் மடம் இராசநாராயண சம்புவராயர் காலத்தில் ஏற்பட்டது.

தேவதான கிராமங்கள் :

திரு ஆமாத்தூர், உறத்தூர், வேடம்பட்டு, சிற்றுசூர் காட்டில் வேடன்பட்டு, குளத்தூர், சிற்றுமூர் என்பன கோவிலுக்கு விடப்பட்ட சிற்றூர்கள்.

ஊர் மருத்துவர் :

ஊரில் இரண்டு நந்தவனங்கள் கோவிலுக்காக எழுந்தன. கிராம மருத்துவருக்காக நிலம் தானமாக விடப்பட்டது. இவ்வாறே சேக்கிழார் பிறந்த குன்றத்தூரிலும் மருத்துவருக்கு நிலம் தானமாக விடப்பட்டது என்று அவ்வூர்க் கல்வெட்டுக் குறிக்கின்றது. குடிகளின் நலத்தைக் கருதி அக்காலத்தில் ஒவ்வொர் ஊரிலும் மருத்துவர் நியமனம் பெற்றிருந்தனர் என்பது இக்கல்வெட்டுக்களால் அறியலாம்.

செம்பியன் மாதேவியார்

கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர், வை. சுந்தரேச வாண்டையார், திருவையாறு.

முன்னுரை :

சைவப் பயிர் வளர்தற்குக் காரணமாய் வாழ்ந்த பெருந்தகைப் பெண் தொண்டர்கள் நால்வர் வரலாறுகள் திருத்தொண்டர் புராணத் திடையே காணப் பெறுகின்றோம். அவராவார் மங்கையர்க்கரசியார், காரைக்கால் அம்மையார், திலகவதியார், இசைஞானியார் என்போர். அவர்களைப் போலவே பிற்காலத்துச் சோழ மன்னர்கள் கல்வெட்டுக்களில் சைவம் வளர்த்த தாய்மார்களான செம்பியன் மாதேவியார், ஒலோக மாதேவியார், முதலாம் குந்தவையார் என்னும் மூவர்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் கிடைக்கின்றன. இவர்களுள் செம்பியன் மாதேவியாரைப் பற்றி ஈண்டுக் குறிப்பாம்.

இவ்வம்மையார் ஒன்பதாம் சைவத் திருமுறையாகிய திருவிசைப்பா ஆசிரியர்களில் ஒருவரான கண்டராதித்த சோழ தேவரது வாழ்க்கைத்துணைவியாக வாய்ந்தவர். கண்டராதித்த சோழதேவர் இம்மாதேவியார்பால் பேரன்பும் மதிப்பும் உடையவராய் இருந்தார். இவரது புதல்வன் மதுராந்தகன் உத்தமசோழன் என்பான். இவன் சிறுவனாய் இருக்கும் போதே கண்டராதித்தர் கண்ணுதற் பெருமான் கழலடி சேர்ந்தார். மாதேவியார் கைம்மை நோன்பு பூண்டு கடவுள் பணியில் காலத்தைப் பயன் படுத்துவாராயினர். புகுந்த குடியின் சிறப்புடன் பிறந்த குடியாலும் சிறப்புடையார் இம்மாதேவியார். இவர் மழவர்மகளாவார்.

மழவர்கள் கொல்லிமலையையும் அதன் சூழலையும் தமதாய்க் கொண்டு ஆண்டுவந்த ஒரு பழந்தமிழ்க் குடியினர். வள்ளன்மையும் வீரமும் மிக்கவர். அகம், புறமாகிய சங்கப் பாட்டுக்கள் பலவற்றில் இம்மழவரின் சிறப்பைக் காணலாம். அருமலை விடரகத்துப் பெற்ற அமுதுவிளை நெல்லித் தீங்கனியை அரிதிற் பெற்று அருந்தமிழ் மூதாட்டியாகிய ஒளவைக் குச் சாதல் நீங்க ஈந்து புகழ்பெற்றவனும் கடையெழுவள்ளல்களில் ஒருவனுமாகிய அதியமான் நெடுமானஞ்சி இம்மழவர் தலைமகனே. திருஞான சம்பந்தப் பெருமானருளால் தன்மகளது முயலக நோயை நீக்கிக் கொண்ட கொல்லி மழவனும் இம் மழவரைச் சேர்ந்தவனே. எனவே சங்ககாலம் முதல் செம்பியன் மாதேவியார் காலமாகிய கி.பி. பத்தாம் நூற்றாண்டு வரையிலும் இம்மழவர் தம் பெருமை குன்றாது வாழ்ந்திருந்தனர். இம்மாதேவியார் கட்டியவையும் செப்பனிட்டவையும், கட்டுவித்தவையுமான சிவன் கோயில்கள் பல. இவரால் நிவந்தம் அளிக்கப் பெற்ற கோயில்களும் பல.

இவர்கட்டிய கோயில்கள்

(1) தஞ்சாவூர் ஜில்லா மாயூரந் தாலுகாவிலுள்ள கோனேரி ராசபுரம் என்னும் திருநல்லத்தில் உள்ள திருநல்லத்து மகாதேவர் கோயில் இவர்கட்டிய முதற் கோயிலாகும். முன்பு செங்கல்லால் கட்டப்பட்டிருந்ததை இவர் தம் புதல்வர் உத்தமசோழ தேவரின் ஏழாம் ஆட்சியாண்டில் (கி. பி. 967-இல்) ஸ்ரீகண்டராதித்தன் என்னும் திருநாமத்தால் கற்றளியாக்கினர். இத்தளியில் இவர்தம் கணவனது பிரதிமம் திருநல்லத்து உடையாரைத் திருவடி தொழுகின்றாராக எழுந்தருளுவிக்கப் பெற்றுள்ளது. (2) இதன்பின்னர் கும்பகோணந் தாலூகாவில் தென்குரங்காடு துறைக்கோயிலும் (3) மாயூரந் தாலுகா ஆனாங்கூர் அகத்தீச்சரமும், (4) ஷ தாலூகா குத்தாலம் எனவழங்கும் திருத்துருத்திச் சொன்னவாறு அறிவார் கோயிலும், (5) ஷ தாலூகா திருமணஞ்சேரி திருக்கற்றளி மகாதேவர் கோயிலும், (6) கும்பகோணந் தாலுகா திருநறையூரில் சித்தீச் சரமுடையார் கோயிலும், (7) நாகப்பட்டினம் தாலூகாவில் திருவாரூர் திரு அரநெறிக் கோயிலும், (8) தென் ஆற்காடு ஜில்லாவில் திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) அம்மன் கோயில் சோபான மண்டபம். கோபுரம், பரிவார தேவர்கள் கோயில் (பரிவார தேவர்—விநாயகர், முருகர், நந்திதேவர், சண்டேஸ்வரர், வைரவர், சூரியன், சந்திரன்) ஆகியவைகளும், (9) தொண்டை நாட்டில்

திருவக்கரை சந்திர மௌளீஸ்வரர் கோயிலும் இவ்வம்மையாரால் கட்டப் பெற்றனவாகும்.

எடுப்பிக்கப்பட்டவை

முதலாம் இராசராச சோழன் தஞ்சை இராசராசேச்சரத்தைக் கட்டியது இவருடைய உதவியாலும் தூண்டுதலாலுமே யாகும். இவ்வம்மையார் கட்டிய கோயில்களே, கங்கை கொண்ட சோழன் முதலியோர் பிற்காலத்தே கோயில்கள் கட்டுதற்கு ஊக்கமளித்தன.

செப்பனிட்டது

திருவெண்காட்டுக் கோயிலில் ஒருபகுதியைச் செப்பனிட்டுள்ளார். திருப்புகலூர் அக்நீஸ்வரர் கோயில் அர்த்தமண்டபத்துத் தென்புறச் சுவரில் கண்டராதித்ததேவர், திருப்புகலூருடையாரை வழிபடும் நிலையில் இருக்கும் பிரதிமத்தைக் கொண்டு, இக்கோயிலின் ஒருபகுதியும் இவ்வம்மையாரால் செப்பனிடப்பட்டிருக்கவேண்டும் எனக் கருத இடம் தருகிறது.

இவர் அளித்துள்ள நிவந்தங்கள்

(1) தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலூகா திருவிசலூர் மகாதேவர்க்குத் திருப்பொற் கொள்கை ஒன்றைக் கொடுத்துள்ளனர். (2) திருநறையூர் நாட்டுப் பிரமதேயம் சித்தீச்சர முடையார்க்குத் திருவமுதுக்கு வேலி நிலத்தை அளித்துள்ளனர். (3) திருவையாற்று மகாதேவர்க்கு நிசதம் உழக்கு நெய்யால் ஒரு நுந்தாவிளக்கு எரிப்பதற்கு முதலாம் இராசராச சோழனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் தொண்ணூறு ஆடுகளைவிட்டுள்ளனர். (4)மாயூரந்தாலூகா ஆனுங்கூர் அகத்தீச்சர முடையார்க்குத் திருவழுந்தூர் நாட்டுப் பனங்குடியில் மூன்றரையே மூன்று மாகாணி நிலத்தைக் கொடுத்துள்ளனர். (5) கும்பகோணந் தாலூகா திருப்புறம் பயமுடைய மகாதேவர்க்குத் திருமஞ்சனநீர் ஆடியருள நூற்று நாற்பத்து முக்கழஞ்சே முக்காலே இரண்டு மஞ்சாடி நிறையுள்ள வெள்ளிக் கலசம் ஒன்றைக் கொடுத்துள்ளனர். (6) சீகாழிதாலூகா கீழைத் திருக்காட்டுப்பள்ளி கோயிலுக்கு அணிகலன்கள் முதலியவைகளைத் தந்துள்ளனர். (7) கும்பகோணந் தாலுகா திருப்பந்தணை நல்லூர்ப் பசுபதி தேவர்க்குத் திருநுந்தாவிளக்கு ஒன்றுக்குப் பொன் பன்னிருகழஞ்சாக விளக்கு மூன்றுக்கு முப்பத்தாறு கழஞ்சு பொன் தந்துள்ளனர். (8) தென்னார்க்காடு ஜில்லா காட்டுமன்னார் குடியைச் சேர்ந்த உடையார்குடி அனந்தீச் சரத்துக்கு ஒரு நுந்தா விளக்கு ஒன்றைக் கொடுத்துள்ளனர். (9) தஞ்சாவூர் ஜில்லா திருவெண்காட தேவர்க்கும், திருத்துருத்தி இறைவர்க்கும் இவர் அளித்த நிவந்தங்கள் மிகப்பலவாகும். அவை விரிவஞ்சி விடப்பட்டுள்ளன. (10) திருச்சிராப்பள்ளிஜில்லாவில் உய்யக் கொண்டான் திருமலை என்று வழங்கப் பெறும் திருக் கற்குடி விழுமியார்க்குப் பொன்னால் செய்யப்பட்டதும், நிறை நூற்று நாற்பத்து ஒன்பதின் கழஞ்சு உள்ளதும் ஆகிய அபிடேகம் செய்தற்குரிய பொன்முடி ஒன்றும் சாமரை ஒன்றும் செய்து தந்துள்ளனர்.

இவர் எழுந்தருளுவித்த திருமேனி

இவர் திருவெண்காடு தேவர் கோயிலில் நிறை நாலாயிரத்து எண்ணூற்று ஐங்கழஞ்சே முக்கால் உள்ள சந்திரசேகரர் திருமேனி ஒன்றைச் செய்து எழுந்தருளுவித்துள்ளனர்.

இவ்வம்மையாரது குலம்

செங்கற்பட்டு ஜில்லா திருமுல்லை வாயில் திருக்கோயிலில் பொறிக்கப் பட்டிருக்கும் "ஸ்ரீ கோப்பரகேசரி பன்மரான உத்தமசோழ தேவர்க்கு யாண்டு 14 ஆவது மழவரையர் மகளார் ஸ்ரீ கண்டராதித்த பெருமாள் தேவியார் செம்பியன் மாதேவியார் பக்கல் புழற் கோட்டத்து அம்பத்தூர் நாட்டு அம்பத்தூர் ஸபையோம் பொன் எண்பதின் கழஞ்சு கொண்டு (S.I.I. Vol III, Part III Page 287) என்னும் கல்வெட்டுப் பகுதியால் அம்மையார் மழவரையர் மகளார் என்று பெறப் படுகிறது.

பத்துப் பாட்டில் ஒன்றாகிய மதுரைக் காஞ்சியில் மழவர் என்ற சொல்லுக்கு சில வீரர் என்று பொருள் கூறியுள்ளனர் உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர்.

'ஒண்சிலைமழவர்', 'உருவக்குதிரை மழவரோட்டிய' என்னும் அகநானூற்று அடிகளால் மழவர் சிறந்த வில்லாளியாகவும், குதிரை வீரர்களாகவும் விளங்கியிருந்த செய்திகள் புலப்படுகின்றன.

அதிகமான் அஞ்சியை ஔவையார் புறநானூற்றில் (90ஆம் பாடல்) 'வழுவில் வண்கை மழவர் பெரும' என்று விளிப்பதாலும், இரும்பனம்புடையல் (புறம்—99) அதாவது பெரிய பனந் தோடாகிய தாரினை உடையவன் என்பதாலும், அதற்கு உரையாசிரியர் இவனுக்குப்

பனந்தார்கூறியது சேரமானுக்கு உறவாதலின்' என்று குறிப்புரை எழுதுவதாலும் மழவர் தலைமகனுகிய நெடுமானஞ்சி சேரமன்னரின் ஒரு கிளையினன் என்று பெறப்படுகின்றது.

வடார்க்காடு ஜில்லா போளூர் திருமலைக் கல்வெட்டில் காணப்பெறும்,

'வஞ்சியர் குலபதி எழுனி
வகுத்த இயக்கர் இயக்கியரொ
டெஞ்சிய அழிவு திருத்தி
எண்குண இறைதிரு மலைவைத்தான்
அஞ்சிதன் வழிவரு மவன்வழி
மூதலி கலி அதிகன் அவன்நூல்
விஞ்சையர் புனை தகைமையர் காவலன்
விடுகா தழக்ய பெருமாளே

என்னும் கல்வெட்டு அஞ்சியின்மகன் எழுனி வஞ்சியர் குலபதி என்பதைக் காட்டுகின்றது. வஞ்சியர் குலபதி சேரர் குலத்தலைவன் என்று பொருள்படும். இது காறும் இலக்கியம் கல்வெட்டு இவைகளைக் கொண்டு ஆய்ந்தவரையில் மழவர் தலைமகனுகிய அதியமான் சேரரின் கிளையினன் என்பது தெற்றென விளங்குகின்றது.

செங்கற்பட்டு ஜில்லா திருமுல்லை வாயில் (வட திருமுல்லைவாயில்), தஞ்சாவூர் ஜில்லா திருவெண்காடு, கோயில்களில் செதுக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களில் செம்பியன் மாதேவியார் மழவரையர் மகளார் என்று குறிக்கப் பட்டிருப்பதால் அவர் சேரர் குலத்தினர் ஆவர்.

இவரது திருநட்சத்திரம்

இவர் பிறந்தது திருக்கேட்டை நாளாகும். இச் செய்தி ''ஸ்ரீ மதுராந்தக தேவரான உத்தமசோழரைத் திருவயிறு வாய்த்த பிராட்டியார் செம்பியன் மாதேவியார் திருநட்சத்திரமான திருக்கேட்டை தோறும் பெரும்பலி எழுந்தருள ஓராட்டைக்கு வேண்டும் நெல்லு எழுபதின் கலத்துக்குத் திருத்துருத்தி திருநல்லத்தில் ஒன்பதின்மா முந்திரிகைக் கீழ் காலேய் முந்திரிகை'' (S.I.I. Vol. III Part III Page 314, line 28) என்னும் கல்வெட்டுப்பகுதியால் அறியக்கிடக்கின்றது.

பண்டுளோர் இவரைப் பாராட்டியவிதம்

முதலாம் இராச ராசசோழன் 'குலமாணிக்கமாகிய நம்பிராட்டியார்' என்று இவரைப் பாராட்டியுள்ளான். தன் குலத்துக்கு மாணிக்கம்போன்றவர் என்பது அத்தொடரின் பொருளாகும். திருமழபாடிக்கு அருகில் குலமாணிக்கம், செம்பியன் மாதேவி என்னும் இரு ஊர்கள் இருக்கின்றன. அவை அவ்வம்மையாரின் திருப்பெயரால் எடுப்பிக்கப் பட்டனவாகும். அவற்றுள் செம்பியன் மாதேவி என்பது இக்காலம் செம்பியக்குடி என்று வழங்கப் பெறுகின்றது. கிழக்கு மேற்கில் உள்ள ஒரு நீண்ட தெருவின் பகுதிக்குக் குலமாணிக்கம் என்றும், மற்றொரு பகுதிக்குச் செம்பியக்குடி என்றும் பெயர்கள் இருப்பதால் இக்காலம் இரண்டு ஊர்களாய்ப் பிரிந்திருக்கும் இவ்வூர் முற்காலத்தில் குலமாணிக்கம் செம்பியன் மாதேவி என்னும் ஒரே பெயருடன் திகழ்ந்திருத்தல் வேண்டும். திருமழபாடிச் சிவன் கோயிலில் இருந்த ஒரு அளவுக் கருவிக்கு இவ்வம்மையாரின் திருப் பெயர் இடப் பட்டிருந்தது.

நாகப்பட்டினம் தாலூகாவில் உள்ள செம்பியன மாதேவி சதுர்ப்பேதி மங்கலம் இவர் பெயரால் அமைந்ததாகும். அது ''க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு அளநாட்டுப் பிரமதேயமாகிய செம்பியன் மாதேவி சதுர்ப்பேதி மங்கலம்'' என்று கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள கைலாச முடையார் கோயிலில் முதல் இராச ராச சோழனது மகனுகிய கங்கை கொண்ட சோழன் இவ்வம்மையாரது பிரதிமத்தை எழுந்தருளு வித்தான் அது இப்பொழுது அங்கு இல்லை. இன்னணம் பண்டையோர் இவரைப் பாராட்டினர்.

இன்றுளோர் செய்யவேண்டுவன

இவரால் கட்டப்பெற்று இவரது புகழுக்கு நிலைக்களமாய் விளங்கும் திருக்கோயில்களில் செடிகொடிகள் முளையாவண்ணம் புரந்து வருவது இன்றுள்ள தமிழ்ச் சைவ நன்மக்கள் ஒவ்வொருவரின் தனிப் பெருங்கடமையாகும். இவரால் கட்டப்பெற்ற திருநல்லம் கோயில் தென் புறச் சுவரிலும், ஆனுங்கூர் அகத்தீச்சரத்து அர்த்த மண்டபத்துத் தென்புறச் சுவரிலும், திருத்துருத்திச் சொன்னவாறு அறிவார் கோயில் அர்த்தமண்டபத்தின் தென்புறச் சுவரிலும் இவரது கணவனுரின் பிரதிமம் செதுக்கப்பட்டுள்ளது. அதற்கு எண்ணெய் தீட்டிப் பாதுகாப்பது மேற் சொல்லப்பட்டோரின் கடமையாகும். [இதை ஆராய்ந்து எழுதற்குப் பணித் தருளிய திருவாவடுதுறை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு அடியேன் நன்றி உரியதாகும்.] ★

தொண்டைநாட்டுத் திருப்பதியநுபவம்

மகாவித்துவான். P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

திருப்பாடகமென்கிற ஸ்ரீ பாண்டவதூதர் ஸந்நிதி யனுபவத்தில்
பகவத் கீதையின் பொருள் விளக்கம்.

கேட்பவர்கள் சிறிதே கேட்டாலும் மஹோதாரர்கள் தாராளமாக வன்றோ கொட்டுவர்கள். அதுபோல் கண்ண பிரானும் முந்துற முன்னம் அர்ஜுநன் பிரார்த்தித்ததையே குவாலாகக்கொண்டு இடையிடையே அவனுடைய அபேக்ஷையை ப்ரதீக்ஷியாமல் திருவுள்ளத்தில் தோன்றுகிற அரும்பெரும் பொருள்களை யெல்லாம் தானே ப்ரஸக்தியிட்டுக் கொண்டு வெளியிடுகிறானயிற்று. இப்படிமேலும் பல விடங்களிற் காணலாம். அர்ஜுநன் கேளாமலிருக்கப் பகவான் தானாகவே அடியிட்டுச் செல்லுகிற அத்யாயங்கள் மேலேயும் சிலவுள.

இப்போது நான்காம் அத்யாயத் தொடக்கத்தில் — "இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்தவாந் அஹமர்ஜுந!, விவஸ்வாந் மநவே ப்ராஹ மநுரிக்ஷ்வாகவே அப்ரவீத்" என்று தொடங்கி உண்மை பொருந்தியதும் விநோத மென்று நினைக்கத்தக்கதுமான வார்த்தையைக் கண்ணபிரான் சொன்னான். எப்படியாவது அர்ஜுநன் வாய் திறந்து கேள்வி கேட்கும்படி செய்ய வேணுமென்றே கண்ணன் இது கூறினன். இந்த ச்லோகங்களின் பொருள் யாதெனில்; 'அப்பா அர்ஜுநா! இப்போது நான் உனக்குக் கர்மயோகத்தைப் பற்றி விரிவாகச் சொன்னேனே. இது கேவலம் யுத்தத்தில் உற்சாக மூட்டுவதற்காக இப்போது புதிதாய்ச் சொல்லப் பட்டதென்று நினையாதே; மந்வந்தரத்தின் ஆதியிலேயே ஸகல ஜகதுத்தாரணார்த்தமாக பரம புருஷார்த்தமான மோக்ஷத்திற்கு ஸாதநமாய் இந்த யோகத்தை நானே விவஸ்வானுக்குச் சொன்னேன்; விவஸ்வான் மனுவுக்குச் சொன்னார்; மநு இக்ஷ்வாகுவுக்குச் சொன்னார்; இப்படியாக ஸம்ப்ரதாய பரம்பரயா ப்ராப்தமான இந்த யோகத்தைப் பூர்வர்களான ராஜரிஷிகள் உபதேச முறையில் தெரிந்து கொண்டார்கள்; அப்படிப்பட்டயோகம் இடையில் நெடுங்காலம் தகுந்த அதிகாரிகளில்லாமையாலே விநஷ்டப்ராயமாயிருந்தது; அந்த புராதந யோகமே தான் இப்போது உன்னுடைய பக்தியும் நேசமும் காரணமாக உனக்கு என்னாலுபதேசிக்கப் பட்டது. இதை நான் தவிர வேறொருவரும் தெரிந்து கொள்ளவும் சொல்லவும் முடியாது; இது வேதாந்தோதிதமான உத்தம ரஹஸ்யமன்றோ — என்பதாம். பகவான் இப்படி சொன்னதில் எவ்வித மான அநுபபத்தியுமில்லை; உண்மையான

இவ்விஷயத்தில் எவ்விதமான ஆக்ஷேபமும் ஆஸ்திகர்கள் செய்ய ப்ரஸக்தியில்லை, ஆனாலும் அர்ஜுநன் இதில் ப்ரபலமான ஆக்ஷேபம் செய்திருக்கிறான். அது அடுத்த ச்லோகத்தில் தெரிவிக்கப்படுகிறது—

"அவரம் பவதோ ஜந்ம பரம் ஜந்ம விவஸ்வத:,
கதமேதத் விஜாநீயாம் த்வமாதௌ ப்ரோக்தவாநிதி".

என்று. இதன் பொருள் யாதெனில்; 'கண்ணா! நீயோ என்னோடு ஸமகாலத்தில் ஜனித்து என்னைப் போலவே சிறு வயதுடையவனாயிரா நின்றாய்; எந்த விவஸ்வானுக்கு நீ உபதேசித்ததாகச் சொல்லுகிறாயோ, அந்த விவஸ்வான் இருபத்தெட்டு சதுர்யுகங்களுக்கு முன்னேயிருந்தவனாதலால் மிகமிக முற்பட்டவன். அன்னவனுக்கு நீ உபதேசித்தாயென்பது அஸம்பாவிதமாக வன்றோ வுள்ளது. இதை நான் எப்படி நம்புவது?' என்பதாம்.

மேலேயெடுத்த *அவரம் பவதோ ஜந்ம* என்கிற அர்ஜுந ப்ரச்நமான ச்லோகத்திற்கு பாஷ்யம் செய்யா நின்ற சங்கராசார்யரும் மத்வாசார்யரும் வாளா சென்றார்கள். ஸ்வாமி யெம்பெருமானார் இங்குத் தமது பாஷ்யத்தில் விசேஷ சர்ச்சை செய்தருளுகிறார். கண்ணபிரானை நோக்கி அர்ஜுநன் இப்படி கேள்வி கேட்டிருக்கிறானே, இது ஸம்பாவிதமான கேள்வியாக இல்லை. ஏனெனில்; அர்ஜுநனானவன் கண்ணபிரானை வெறும் இடைப் பிள்ளையாக நினைத்திருக்கிறானா? அல்லது ஸாக்ஷாத் பரம புருஷனாக நினைத்திருக்கிறானா? என்பதை முன்னம் விமர்சித்து முடிக்க வேண்டும். கேவலம் இடைப்பிள்ளையாகவே நினைத்திருந்தானாகில் இங்ஙனம் கேள்வி கேட்கத் தகுதியுண்டு. ஸாக்ஷாத் பரமபுருஷனாகவே நினைத்திருக்கிறானென்று தேறுமாகில் இங்ஙனம் கேள்விகேட்க இடமே கிடையாது. பரமபுருஷன் எப்போது முள்ளவனாகையாலே அவன் விவஸ்வானுக்கு உபதேசிப்பதில் அஸம்பவமொன்றுமில்லையாகையாலே 'அவரம் பவதோ ஜந்ம பரம் ஜந்ம விவஸ்வத:' என்று வாய்திறக்கவே வழி இல்லை. ஆகவே அர்ஜுநன் கண்ணனைக் கேவலம் இடைப்பிள்ளையாகவே கொண்டு இங்ஙனம் கேள்வி கேட்டிருக்கிறானென்று கொள்ள வேணும். இது முன் பின் ஸந்தர்ப்பங்களுக்கு அடியோடு ஒவ்வாது. தர்மபுத்ரருடைய ராஜஸூயாதிகளில் பீஷ்மர் போல்வாரிடத்தில்,

"க்ருஷ்ண ஏவஹிலோகாநாம் உத்பத்திரபிசாப்யய:,
க்ருஷ்ணஸ்ய ஹிக்ருதே பூதம் இதம் விச்வம் சராசரம்."

இத்யாதிகள் பலவும் கேட்டிருக்கிறானர்ஜுனன். மேலே பத்தாவது அத்யாயத்தில் இவ்வர்ஜுநன் தானே கண்ணபிரானை நோக்கி "பரம்ப்ரஹ்ம பரம் தாம பவித்ரம் பரமம் பவாந்" என்று தொடங்கிக் கண்ணன் பரம புருஷனென்பதைப் பலரிடத்தில் பலகால் தான் கேட்டிருப்பதாக ஸ்பஷ்டமாகக் கூறியுள்ளான். இப்படியிருக்கும் போது 'அவரம் பவதோ ஜந்ம' என்கிற கேள்வி உதிக்க ப்ரஸக்தியே கிடையாது என்பதை ஸ்ரீ ராமாநுஜர் உபபாதித்துக் காட்டியுள்ளார். அஸம்பாவிதமான வினா எப்படி தோன்றிற்று? என்னில்; இதற்கு ஸமாதானமும் ஸ்ரீராமாநுஜரே வெகு பொருத்தமாக அருளிச் செய்துள்ளார்; அதை உபபாதிக்கிறோம் கேண்மின்.

இங்கு ஸ்வாமியின் கீதாபாஷ்ய சூக்தி பரமரஸகனமாகையாலே கண்ட

பாடம் செய்து தரிக்கப்பட வேண்டுமென்பதற்காக அதை அப்படியே எடுத்துக் காட்ட விருப்ப முண்டு; ஆனால் வடமொழியிலுள்ள பல வாக்கியங்களை யெடுத்துக் காட்டுவதில் பயனில்லாமையால் அவற்றின் ஸாரமான கருத்தை மட்டும் காட்டுகிறோம். ஸாரமான கருத்து என்ன வென்றால்; அர்ஜுநன் கண்ணபிரானை ஸாக்ஷாத் பரம புருஷனாகவே தான் உறுதி கொண்டிருக்கிறான். அப்படியிருந்தும் அவனது பெருமையை அறியாதவன்போல் கேள்வி கேட்டிருப்பது ஏனெனில், மேலே கண்ணபிரான் இவனுக்கு விடை கூறுகின்ற ப்ரகாரங்களை நோக்குமிடத்து, அர்ஜுநன் என்ன அபிப்ராயங் கொண்டு இக் கேள்வி கேட்டிருக்கிறானென்பதை எளிதாக நிர்ணயிக்கலாம். மேலே பகவான் நாலைந்து ச்லோகங்களாலே விடை கூறுவதில், தன்னுடைய அவதாரம் இந்திர ஜாலம் போலே அஸத்யமன்று, ஸத்யமே யென்பதையும், தன்னுடைய அவதார ப்ரகாரத்தையும், திவ்ய மங்கள விக்ரஹந் தன்மையையும், அவதார ஹேதுவையும், அவதார காலத்தையும், அவதார ப்ரயோஜநத்தையும் அருளிச் செய்திருக்கிறான். இவையெல்லாம் வினாவற்றவை யாகக் கூடாது. அர்ஜுநன் கேளாத அம்சங்களுக்குக் கண்ணன் விடை கூறுவதாகத் தேறினால் அது மிகவும் அஸமஞ்ஜஸமாகும். இத்தனையும் அர்ஜுநனுடைய உள்ளத்திலுறைந்தவை; அவன் கேள்வி கேட்கத் தொடங்கின போதே இவ்வளவும் இவன் கேட்க நினைத்திருக்கிறானென்று கண்ணபிரான் தெரிந்து கொண்டு அவனை வாயடக்கித் தாம் விரிவாக விடையிறுக்கிறார். இல்லையாகில் "பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி" என்ற அடுத்த வாக்யமொன்றோடே கண்ணன் தன் விடையை முடித்திருக்க வேண்டுமே. 'அப்பா அர்ஜுநா! நீ நினைக்கிறபடி நான் இப்போதாகப் பிறந்தவனல்லேன்; அநாதி காலமாகப் பல பிறப்பும் பிறந்து கொண்டிருக்கிறேன்; ஆகவே முன்னொரு பிறப்பில் விவஸ்வானுக்கு உபதேசித்தேனென்பது அஸம்பாவிதமன்று காண்' என்று இவ்வளவே யன்றோ சொல்லி முடித்திருக்கவேண்டும். அப்படி யில்லையே. இதற்கு மேலுள்ள விஷயங்களைச் சொல்லுவதற்கு என்ன ப்ரஸக்தி யென்று பார்க்க வேணுமே. பார்க்குமளவில். அர்ஜுநன் இவ்வளவையும் அறிந்து கொள்ள விரும்பியே அக் கேள்வி கேட்கத் தொடங்கினானென்பது எளிதாகத் தெரியவரும் என்று எம்பெருமானார் திருவுள்ளம்.

மேல்ச்லோகமானது (4-5) "பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவசார்ஜுந!" என்றுள்ளது. இதனால் பகவானுடைய அவதாரம் இந்த்ர ஜாலாதிகளைப் போல் அஸத்ய மன்று. ஸத்யந்தா னென்பது தெரிவிக்கப்பட்டதாகிறது. இங்கே தேசிகருடைய தாத்பர்ய சந்த்ரிகையில் நன்கு விளக்க முள்ளது. இதில் முக்கியமான விஷயம்—'அர்ஜுநா! எனக்கும் உனக்கும் பல ஜன்மங்கள் கடந்திருக்கின்றன' என்கிறான் கண்ணன். ஜன்மங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதே யொழிய ஜன்ம ப்ரதிபாஸங்களென்று சொல்லப்பட்டிருக்க வில்லை. தவிரவும், அர்ஜுநனுடைய ஜன்மத்தைப் பற்றி ப்ரஸ்தாவிக்க வேண்டுவது அப்ரஸக்தமாயிருக்க 'தவச அர்ஜுந' என்று அவனுடைய பிறப்புகள் த்ருஷ்டாந்தமாக வெடுத்துக் காட்டப் பட்டிருக்கின்றன. 'அப்பா! உன்பிறப்பு எப்படி ஸத்யமோ அப்படியே என்பிறப்பும் ஸத்யங்காண்' என்று தெரிவிக்கப் பட்டதாகத் தேறுகின்றது. இதற்கடுத்த (4—6)

"அஜோபிஸந் அவ்ய யாத்மா பூதாநாமீச்வரோபிஸந்,

ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய ஸம்பவாம்யாத்ம மாயயா''.

என்கிற ச்லோகத்தினால்—அவதார ப்ரகாரமும், அவதாரங்களில் பரிக்ரஹிக்கிற திவ்யமங்கள விக்ரஹத்தின் உண்மைத் தன்மையும், அவதார ஹேதுவுமாகிற மூன்று விஷயங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அஜத்வம் அவ்யயத்வம் ஸர்வேச்வரத்வம் ஆகிற இந்த பரமேச்வரத் தன்மையை விடாமலே பிறக்கிறேனென்கையாலே அவதாரப் ப்ரகாரம் சொல்லிற்று. "**ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய ஸம்பவாமி**'' என்று அப்ராக்ருத திவ்ய மங்கள விக்ரஹத்தையே கொண்டு அவதரிப்பதாகச் சொல்லுகையாலே திவ்ய மங்கள விக்ரஹத்தின் உண்மைத் தன்மை சொல்லிற்று. இனி 'ஆத்ம மாயயா' என்பதற்கு என்னுடைய ஸங்கல்பத்தினாலேயே அவதரிக்கிறேனென்று பொருளாகையாலே, இச்சைதான் அவதாரஹேது வென்று சொல்லிற்றாயிற்று. இதற்கடுத்த (4—7)

"யதா யதாஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி பாரத!, அப்யுத்தாநம் தர்மஸ்ய ததா ஆத்மாநம் ஸ்ருஜாம்யஹம்''

என்கிற ச்லோகத்தினால் அவதாரகாலம் சொல்லிற்று.

இந்த ச்லோகத்தில் "ததா ஆத்மாநம் ஸ்ருஜாம்யஹம்'' என்ற விடத்தில் ரஸ்யமும் ரஹஸ்யமுமான ஒரு விசேஷார்த்தமுண்டு. மேலே ஏழாமத்யாயத்தில் "ஜ்ஞாநீது ஆத்மைவமே மதம்'' (18) என்று கீதாசார்யன் தானே ஜ்ஞானிகளைத் தனக்கு ஆத்மாவாகச் சொல்லுகையாலே இங்கு "ஆத்மாநம் ஸ்ருஜாமி'' என்றதற்கு ஞானிகளை அவதரிப்பிக்கிறேன் என்பதும் அந்தரங்கமான பொருளாகும். அதர்மம் தலையெடுத்து தர்மம் தலைமடிந்து நிற்குங் காலங்களில் பகவான் தான் வந்து அவதரிப்பதிற் காட்டிலும் ஞானிகள் அவதரிப்பதில் ப்ரயோஜநாதிசயமுண்டு. இராமாநுச நூற்றந்தாதியில் (41) *மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து எங்கள் மாதவனே கண்ணுற நிற்கிலும் காணகில்லா வுலகோர்களெல்லாம் அண்ணலிராமானுசன் வந்து தோன்றிய வப்பொழுதே நண்ணரு ஞானம் தலைக் கொண்டு நாரணற்காயினரே* என்றுள்ள பாசுரம் இங்குப் பொருத்தமாக அநுஸந்திக்கத் தகும். அன்றியும் இந்த நான்காமத்யாயத்திலேயே மேல் (34)*

***தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா, உபதேக்ஷ்யந்திதே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வ தர்சிந:''**

என்கிற ச்லோகத்தில் ஞானிகளின் உபதேசப் பெருமை நன்கு கூறப்பட்டிருக்கிறது. 'தத்வமாகிய நான் சொல்லுவதிற் காட்டிலும், தத்வமாகிய என்னை ஸாக்ஷாத்கரித்து தத்வ தர்சிகளென்று பேர் பெற்ற ஞானிகள் உபதேசிப்பது மிகச் சிறந்திருக்கும், அவர்களை யடிபணிந்தும் பலகால் அநுவர்த்தித்துக் கேட்டுத் தெரிந்து கொள், என்று அந்த ச்லோகத்தில் சொல்லப்படுகிறது. அப்படி யுபதேசித்துத் திருத்திப் பணி கொள்ள வல்ல ஞானிகளை ஸமய விசேஷங்களில் நானே அவதரிக்கச் செய்கிறேன் என்றானிங்கு. தன்னுடைய அவதாரத்தைப் பற்றிச் சொல்ல ப்ராப்தமான இந்த ப்ரகரணத்தில் ஞானிகளின் அவதாரத்தைப் பற்றிச் சொல்வதற்கு என்ன ப்ரஸக்தியென்று நினைக்க வேண்டா; *பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து* என்கிற பெரியாழ்வார் திருமொழிப் படியும்,

(தொடரும்)

ஸ்ரீ குருஞான சம்பந்தர்

முன்னுரை :

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே, நிகழ்ச்சி அவர்கட் டாகலான" என்பது தொல்காப்பியம். அதன்படி, இவ்வுலகமானது ஞானிகளும் அருளாளர்களும் ஆகிய உயர்ந்த சான்றோர்களின் வழிநின்றே இயங்கி வருகின்றது.

ஆற்றல் மிகுந்த ஒருவன், கொடிய புலி சிங்கம் யானை முதலிய விலங்குகளை யெல்லாம் அடக்கி, அவற்றைத் தன் விருப்பத்தின்படி ஆட்டிவைத்தலை நாம் கண்டறிவோம். அறிவாற்றலிலும், மனத்திண்மையிலும் சிறந்த தலைவர்கள் பலர், பல்லாயிரக்கணக்கான மக்களைத் தம்முடைய கருத்துக்களுக்கு இணங்கித் தம்முடைய கட்டளைகட்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறு செய்து வருதலையும், நாம் கண்டு வருகின்றோம்.

இங்ஙனமே தவ ஆற்றலிலும் அருளாற்றலிலும் தலைசிறந்து விளங்கும் ஞானச் செல்வர்களாகிய சான்றோர்கள், தமக்குள்ள பேராற்றலால் இவ்வுலகினையும், இதன்கண் வாழ்ந்து வரும் மக்களையும், இயக்கி நடத்தி உய்வித்து வருகின்றார்கள்.

தொல்காப்பியரும் திருவள்ளுவரும், ஆழ்வார்களும் நாயன்மார்களும், எத்தனையோ பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்தவர்களாயினும், அவர்களுடைய கருத்தும் கொள்கையும் ஆற்றலும், இன்றும் நம்மனோரைத் தம் வயப்படுத்தி இயக்கி நடத்தி வருகின்றன. சிறந்த ஞானச் செல்வர்களால், ஒரு நாட்டிற்கும் மக்களுக்கும் உண்டாகிப் பெருகிவரும் நலங்களுக்கு அளவே யில்லை.

வரலாறு :

இத்தகைய இனிய ஞானச் செல்வர்களுள் ஒருவராக, நம் தமிழகத்தில்-பாண்டிய நாட்டில்-ஸ்ரீ வில்லிபுத்தூரில்-கார்காத்த வேளாளர் குலத்தில், சுப்பிரமணிய பிள்ளை என்னும் தந்தைக்கும், மீனாட்சியம்மை என்னும் தாயாருக்கும் மைந்தராகத் தோன்றியருளியவரே, ஸ்ரீ குருஞான சம்பந்தர் என்னும் சிவநெறிச் சான்றோர் ஆவர்!

குருஞான சம்பந்தர் இளமையிலேயே, உள்ள நிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றுணர்ந்தார்; அதன் பயனாக, அவற்றில் 'தெள்ளி வடித்தறிந்த பொருள் சிவன்கழலிற் செறிவே' என்று தெளிந்து தேறி நின்றார். தம் தாய் தந்தையருடன், மதுரைச் சொக்கநாதப் பெருமானை வழிபடச் சென்ற அவர்க்கு, அப்பெருமானின் திருவருள் குறைவிலா நிறைவாய்க் கைகூடியது.

இளமையிலேயே துறவுநெறி யுணர்வும், சிவபூசையில் ஈடுபாடும் 'முன்புசெய் தவத்தின் ஈட்டம்' என்னும் முறையில் நிரம்பப் பெற்றிருந்த இவர்க்கு, ஆலவாய்ப் பெருமான் அருளால், பொற்றாமரைக் குளத்தில் சிவலிங்கத் திருமேனி ஒன்று கிடைத்தது; அதனை முறையே பூசித்து வழிபட விரும்பினார். அதற்குக் குரு முதல்வர் ஒருவர் திருவருளைப் பெற வேண்டுமே எனப் பெரிதும் அவாவி நின்றார்.

கருத்தறிந்து முடிக்கும் கண்ணுதற் பெருமான், கனவில் தோன்றி அறிவித்தபடி, இவர் திருவாரூர் சென்றார். சென்று அங்கு வதிந்திருந்த ஸ்ரீகமலை ஞானப்பிரகாசர் என்பவரைக் குருவாக அடைந்தார். திருவாரூர்ச் சித்தீச்சரம்

தருமை ஆதீன முதற் பெருங் குரவர்

ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்த மகா பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்.

தட்சிணாமூர்த்திப் பெருமான் திருமுன்னிலையில், அவரால் ஞானதீக்கை புரியப் பெற்றுக் கொண்டு சிறந்து நின்றார்.

இவர்தான், நம் தமிழ்நாட்டுத் திருமடங்களுள் ஒன்றாகத் தலைசிறந்து விளங்கிவரும் தருமபுர ஆதீனம் என்னும் திருமடத்தினைத் தோற்று வித்தருளிய முதற் பெருங்குரவர் ஆவார்.

ஞான சம்பந்தரைப் போன்று, சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கச் செய்து, சைவ சித்தாந்தச் செந்நெறியைத் தகவுற வளர்த்துப் போற்றும் சிவஞானப் பெருஞ் செல்வராகவும், ஒப்புயர்வற்ற பெரும் சமயத் தலைவராகவும், இவர் எதிர்காலத்தில் இறையருள் ஒளி பரப்பி இனிது திகழ்வார் என்பதனை முன்னுணர்ந்தோ என்னவோ, இவருக்குத் தாய் தந்தையர்கள் இளமையில் **ஞானசம்பந்தர் எனப் பெயரிட்டு வழங்கினர்.**

திருஞான சம்பந்தர் போலத் தோன்றி, அவரைப் போன்று தமிழையும் சைவசித்தாந்தத்தையும் வளர்த்துப் பரப்பும் குருவாக விளங்கியதனால், இவரைத் தமிழ் கூறும் சைவநல்லுலகம் குருஞான சம்பந்தர் எனக் குறிப்பிட்டுத் துதித்துப் போற்றி வருகின்றது.

ஸ்ரீ கமலை ஞானப் பிரகாசர், இவர்தம் அதிதீவிர பக்குவ நிலைகளைக் கண்டு வியந்து களித்து, "நின்னாற் பல்லாயிரக் கணக்கான மக்கள் இறைவன் திருவருளுக்கு உரியவராய் ஈடேறப் பெறவேண்டியிருக்கின்றது. ஆதலின் நீ சித்திக்ஷேத்திரம் ஆகிய தருமபுரம் அடைந்து, அங்கு ஒரு திருமடத்தினை நிறுவி, அடியார்கள் பலரை ஆட்கொண்டு உய்வித்துத் தமிழும் சைவமும் தழைத்தோங்கச் செய்க" என்று பணித்தருளினார்.

அங்ஙனமே இவர் தருமபுரம் அடைந்து, திருமடம் அமைத்து, ஆனந்த பரவசர், சச்சிதானந்தர், மருதூர் ஆபதுத்தாரணர் முதலிய பல மாணவ அடியார்களை ஆட்கொண்டு, குருமுதல்வராக விளங்கி, இவ்வுலகம் குருஞான சம்பந்தர் எனக் குலவிப் போற்றச் சைவச் செந்நெறி பரப்பி, ஒரு வைகாசி மாதம், அபர பக்கம் சப்தமி நாளில் சிவ சமாதி கூடியருளினார்கள். அவ்விடமே ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயம் எனத் தருமையம்பதியிற் பெருமையுடன் பிறங்கி வருகின்றது.

ஸ்ரீ கமலை ஞானப்பிரகாசர் மழுவாடிப் புராணம் பாடியது, சாலிவாகன சகாப்தம் 1488-ஆம் ஆண்டு என்று, அந்நூற் செய்யுள் ஒன்றால் அறியப்படுதலின், ஸ்ரீ குருஞான சம்பந்தரின் காலம் இற்றைக்குச் சற்றேறக் குறைய 400 ஆண்டுகள் ஆகும் என்று கொள்ளலாம்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் (1) சிவபோக சாரம், (2) சொக்கநாத வெண்பா (3) முத்தி நிச்சயம் (4) திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல் (5) சோடசகலாப் பிராசாத சட்கம் (6) சொக்கநாதக் கலித்துறை (7) ஞானப் பிரகாச மாலை (8) நவரத்நமாலை என்னும் எட்டுச் சாத்திர நூல்களை அருளிச் செய்திருக்கின்றார்கள்.

செல்வக் களஞ்சியம் "பண்டாரம்" எனப் படுமாதலின், சிவஞானச் செல்வக் களஞ்சியங்கள் எனத் தக்க நிலையில் திகழும் இவ்வெட்டுச் சாத்திரங்களும், "பண்டார சாத்திரம்" எனச் சிறப்பித்து வழங்கப் பெறும்.

இவற்றுள், "சிவபோக சாரம்" என்னும் சிறந்த நூலின் சுவை நிறைந்த பாடல்கள் சிலவற்றை மட்டும் ஈண்டுக் கண்டு அமைவோம்:—

(1) எவ்வளவு நூல்களைத்தான் கற்றிருந்தாலும், எத்தனை சித்திகளைத்தான் பெற்றிருந்தாலும், குருவின் அருள் வழியே நிற்க மாட்டாதவர்களுக்கு, மனம் தினமும் அலைந்து கலங்கித் துன்பப்பட்டுக் கொண்டுதான் இருக்கும்.

ஒருகோடி ஆகமங்கள் எல்லாம் உணர்ந்தும்,
பெருகுதவம் சித்தியெல்லாம் பெற்றும்,— குருவருளால்
வைத்த படியிருக்க மாட்டாத மாந்தர்க்குச்
சித்தசல னம்ஆம் தினம்.

(2) நெஞ்சமே! நீ மனிதர்களை நல்லவர்கள் என்றும், கெட்டவர்கள் என்றும் ஏன் பாகுபாடு செய்கின்றாய்? அவரவர்கள் செய்த வினைகளுக்கு ஏற்ப, இன்ப துன்பங்கள் ஆகிய பயன்களை, அவரவர்களுக் குரிய மனிதர்களைக் கொண்டு அநுபவிக்கும்படி, இறைவனின் அருள்தான் செய்விக்கின்றது. ஆதலால் எல்லா வற்றையும் சிவன் செயல் என்றே எண்ணுக.

அவரவருக் குள்ளபடி ஈசனரு ளாலே
அவரவரைக் கொண்டியற்று மாறல்,— அவரவரை
நல்லார்பொல் லார்என்று நாடுவதென் நெஞ்சமே!
எல்லாம் சிவன்செயல்என் றெண்

(3) நாம் பெரியோம் என்னும் எண்ணம் கொள்ளாது பணிவோடு இருப்பவர்கள்தாம் பெரியவர்கள் ஆவர் என்று நூல்கள் கூறுகின்றன. அங்ஙனம் இன்றித் தம்மைத் தாமே நாம் பெரியர் என்று எண்ணிக் கொண்டு செருக்குறுபவர்களே, சிறியவர்கள். இத்தகைய அற்பச் சிறியவர்களைத் தவிர, உலகில் துன்பம் ஆகிய சுமையைச் சுமப்பவர்கள் வேறு எவரும் இலர்.

நாம்பெரியம் என்னுமதை நாடா நடக்குமவர்
தாம்பெரியர் என்றுமறை சாற்றிவிடும்-நாம் பெரியர்
என்பார் சிறியர் இவரலா திவ்வுலகில்
துன்பார் சுமப்பார்கள் சொல்

(4) ஈசனே! எல்லாம் நின்னுடைய செயலே; என் செயல் எதுவுமின்று என்று உணர்ந்து கொண்டால், யான் எதனை விரும்பிச் சொல்ல வாய் திறப்பேன்? நாயாகிய என்னை எப்படி எப்படியெல்லாம் ஈடேற்ற வேண்டும் என்று நீர் நினைக்கின்றீரோ, அப்படி அப்படியே நீர் செய்தருளுக! தங்கள் திருவுள்ளமே நிறைவேறுக!

என்னதென்று நின்செயலே என்றறிந்தால் யானிநம்பி
என்னவென்று வாய்திறப்பேன் ஈசனே—இன்னமின்னம்
எப்படியோ நாயேனை ஈடேற்ற வேண்டுமுனக்கு
அப்படியே செய்தருளு வாய்!

(5) சிவபிரான், உயிர்களின் உடம்பாகிய மரப்பாவையினைக், கன்மம் (புண்ணிய பாவம்) என்னும் சூத்திரக் கயிறு கொண்டு பிணித்து, நன்மை தீமை என்னும் நாடகம் நடத்துகின்றார். இதனையுணராத அறிவிலிகள், எல்லாம் தங்கள் செயல் என்றே எண்ணி இறுமாப்புறுகின்றார்கள். இது போன்று நகைப்பை விளைக்கும் செயல், மற்றொன்று உள்ளதோ?

வன்மைபுரி காய மரப்பாவை தன்னைஅரன்
கன்மமெனும் சூத்திரத்தாற் கட்டியே-நன்மை தின்மை
ஆட்டுவது நாடா தறிவிலார் தஞ்செயலாய்
நாட்டுதல்போல் உண்டோ? நகை.

(6) மனமே! பரபரப்பு அடைய வேண்டாம். உனக்குப் பலமுறையும் சொல்கின்றேன். போகப்போக நீ தெரிந்து கொள்வாய், ஒருவருக்கும் கேடு நினைக்காதே, செய்ந்நன்றி மறவாதே, கிடையாத பொருளுக்காகக் கவலைப்பட்டுத் துன்பப் படாமல் இரு.

பரபரக்க வேண்டாம் பலகாலும் சொன்னேன்
வரவரக்கண் டாராய் மனமே! - ஒருவருக்கும்
தீங்கு நினையாதே செய்ந்நன்றி குன்றாதே
ஏங்கி இளையா திரு.

முடிவுரை :

இத்தகைய பல சிறந்த உபதேசங்களை அருளிச்செய்த ஸ்ரீ குருஞான சம்பந்தர் கி. பி. 16 ஆம் நூற்றாண்டில் தோற்றுவித்த தருமபுர ஆதீனம், தமிழ்த்தொண்டும் சமயத் தொண்டும் சமூகத்தொண்டும் ஒல்லும் வகையெல்லாம் நல்ல முறையில் ஆற்றி வருகின்றது. இப்பொழுது ஞான பீடத்தில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரிபவர்கள், இருபத்தைந்தாவது குரு மகா சந்நிதானம், கயிலைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள். குமரகுருபரர், சம்பந்த சரணாலயர் போன்ற சான்றோர்கள் பலரை மாணவர்களாகப் பெற்றுச் சிறப்புற்றொளிர்ந்து வரும் இச் சமயப் பெரு நிலையம், மேன்மேல் வளர்ந்தோங்கி மாண்புறச் சிவபிரான் திருவருளை வழுத்துவோமாக!

—ஆசிரியர்.

உதவி ஆணையாளர்கள் நியமனமும், மாற்றமும்.

திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான நிர்வாக அதிகாரி திரு. சி. எஸ். தீனதயாளு, B.A.,B.L., அவர்கள், தென்னார்க்காடு மாவட்டம் அறநிலையத்துறை உதவி ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்னார்க்காடு மாவட்டம் அறநிலைய உதவி ஆணையர் திரு. வி. எஸ். கோதண்டபாணி, B.SC.,B.L., அவர்கள், நாகைப்பட்டினம் அறநிலையத்துறை உதவி ஆணையராக மாற்றப்பட்டுள்ளார்.

சிவஞான போதம்

திரு. ச. வச்சிரவேல் முதலியார், B.A., L.T., காஞ்சிபுரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

10-ஆம் சூத்திரம் : 2-ஆம் அதிகரணம் :

பிறப்பு நிலையில் முதல்வன் உயிரேயாய் ஒற்றுமைப்பட்டு உயிருணர்வில் கரந்து நின்றாற்போல, வீட்டு நிலையில் உயிர் முதல்வனோடு ஒற்றுமைப்பட்டு அவன் அருளிற் கரந்து நிற்றல் வேண்டும்; அங்ஙனம் நின்றால் யான் எனது என்னும் செருக்கை உண்டு பண்ணும் மூலமல வாதனை நீங்கும்: என்பது முதல் அதிகரணத்தின் திரண்ட பொருள்.

இரண்டாவது அதிகரணத்தில், அங்ஙனம் ஒற்றுமைப்பட்டு நின்று அவனருளாலன்றி ஒன்றையும் செய்யாதிருத்தலே இறைபணி நிற்றல் ஆம்; அங்ஙனம் நின்றால் மாயையோடு கூடிய வல்வினை தாக்காது ஒழியும் என்பது கூறப்படுகின்றது.

வார்த்திகம் : இனி இறைபணி வழுவாது நிற்க என்றது, அவனருளால் அல்லது ஒன்றையும் செய்யான் ஆகவே அஞ்ஞானகன்மம் பிரவேசியா ஆகலான்.

> " தன்கடன் அடியேனையும் தாங்குதல்;
> என்கடன் பணிசெய்து கிடப்பதே "

என்னும் அப்பர் அருண்மொழி ஒப்பு நோக்கி உணர்தற்குரியது.

இவ்வதிகரணத்து உதாரணச் செய்யுட்களின் கருத்து வருமாறு :—

இறைவன் உணர்த்துமாறு உணர்ந்து ஒழுகின், திரிபுணர்ச்சிக்குக் காரணமாகப் புலப்பட்டுத் தோன்றும் மாயாகாரியப் பொருள்களும், அதுபற்றி நிகழும் ஏறுவினையும் உள்ளன ஆகா.

ஐம்பொறிகளும் அவற்றின் விடயங்களும் ஆன்மாவாகிய நாம் அல்ல; அவற்றின் தொழிற்பாடும் முதல்வன் வயத்தனவே, நம் வயத்தன அல்ல. நாமும் முதல்வனது உடைப் பொருளாய், அவனால் அன்றி ஒன்றையும் அறியவும் செய்யவும் மாட்டேம்—என உணர்ந்து அருள்வழி நிற்கும் அடிமைத்திறம் உடையார் எவ்வுடம்பிலிருந்து எவ்வினையைச் செய்தாலும் அவ்வினை அவர்களைப் பற்றாது. முன்னை வினையும் அவ்வாறு அவர்களுக்கு மெத்தென நிகழ்ந்து உடல் ஊழாய்க் கழியும்.

இறைவன் அருள்வழி நிற்பார்க்கு வினையைக் கூட்டாது கழித்தும், அருள்வழி நில்லாத உலகர்க்கு வினையைக் கூட்டியும் வருதல் அவன் நடுவுநிலைக்கு இழுக்காகாதோ என ஐயம் நிகழும். தன்னை அடைக்கலம் எனச் சார்ந்தாரைக் காத்தல் தலைவர்க்கு உரிய கடமை; ஆதலால் முதல்வன் தன்னை அடைந்தாரை வினையின் தாக்குதலினின்று காத்தல் அவனுக்குத் தலைமைக் குணமேயன்றி ஒருபாற் சார்வு என்னும் குற்றமாகாது. தன்னைச் சார்ந்து அடித்தொழில் செய்வார்க்குத் தன்னைப் போல வினைப்பயன் பற்றுதலை அறுத்துப் பிறர்க்கு அவர் செய்யும் வினைக்கு உரிய பயனை நுகர்விப்பன். அதுபற்றி அவன் ஒருபாற் கோடியவன் ஆகான்.

சிவஞானிகளிடத்துப் பிராரத்த நுகர்ச்சிக்கண் காயம் வைத்து எடுத்த பாத்திரத்தில் அதன் மணம் தங்கி நின்றாற்போலத் தற்போதம் ஒரோ வழிப் பயிற்சி பற்றி முனைதல் கூடும்; ஆயினும் சிவத்தைச் சார்ந்து சிவமேயாய் நிற்கும் சிவஞானிகள் தமக்கு அச்சுப் போன்ற சிவத்தையே உணர்ந்து நிற்பார். ஆதலால் அவர்க்கு மேலைவினையும், மாயாகாரியத் தொடக்கும் உண்டாதல் இல்லை.

மாட்சிமை மிக்க புதிய கவர்னர் அவர்கள், திரு மயிலைக் கபாலீச்சுரர் கோயிற் பிராகாரத்தை வலம் வருதல்.

CONNEMARA PUBLIC LIBRARY
4 - AUG 1965
MADRAS

மாட்சிமை மிக்க புதிய கவர்னர் அவர்களை, நமது அறநிலைய ஆணையர் அவர்களும், அறங்காவலரும், மாலை அணிந்து வரவேற்றல்.

Vol. 6 No. 9 THIRUKOIL Reg. No. M. 7039



சென்னை மாநிலத்தின் புதிய கவர்னர், மாட்சிமை மிக்க
ஸ்ரீ ஜெயசாமராஜ உடையார் அவர்கள், தாம்
பதவி ஏற்றதுமே திருமயிலைக் கபாலீச்சுரர்
கோயிலில், வழிபட வருகை புரிதல்.

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept. Madras-34. Printed at The United Printers, 3/27 Broadway, Madras-1.